CONNEMARA PUBLIC LIBRARY
4 AUG 1962
MADRAS

# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"



திருமெய்ஞானம்—சிவகாம சுந்தரி

மாலை 4 ] சுபகிருது ஆடி-ஆகஸ்டு 1962 [ மணி 11

ரதி

அரசாங்க அற
த் துறை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# மாணிக்கவாசக சுவாமிகள் பாடல்

(*)

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெரு நீர்போல் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே.

*[எவர்பாலும் எதையும் வேண்டாத நிறைவான பொருளே! குற்றமற்ற அருமருந்தே! அந்தமிலாத பிழம்பான சோதி மலையே! வேதமாகவும் வேதத்தின் பொருளாகவும் வந்து என் மனத்திடை நிலைபெற்றுத் தங்கிய தலைவனே! கரைகடந்த வெள்ளம்போல் என் உள்ளத்தே சென்று நிறைகின்ற திருப்பெருந்துறைப் பெருமானே! இறைவனே! நீ என்னுடைய உடலையே இடமாகக் கொண்டாய். இனி யான் உன்னை வேண்டிக் கேட்டுக் கொள்வதற்கு என்ன இருக்கிறது. ஒன்றுமில்லை என்றபடி.]*

## பொருளடக்கம்


1. காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம்
2. திருஞானசம்பந்தர்திருமுறை
3. ஸ்ரீவைஷ்ணவகுருபரம்பரை
4. திருச்சாய்க்காடு
5. உத்தரமாயூரம்
6. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
7. திருமாணிகுழிக்கோயில் கல்வெட்டு
8. சிவப்பிரகாசம்

CONNEMARA PUBLIC LI
4 AUG 196
MADRAS



பல்லவனேசுவரம் பட்டினத்தார்



காவிரிப்பூம்பட்டினம் கண்ணகி

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 4] சுபகிருது ஆடி - ஆகஸ்டு 1962 [மணி 11


# காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம்

குழலினோசை வீணைமொந்தை கொட்டமுழவதிரக்
கழலினோசை யார்க்க ஆடுங் கடவுளிருந்தவிடஞ்
சுழியிலாருங் கடலிலோதந் தெண்திரைமொண்டெறியப்
பழியிலார்கள் பயில்புகாரிற் பல்லவனீச்சரமே.

—திருஞானசம்பந்தர்.

மோது முதிரையான் மொத்துண்டு
போந்தசைந்த முரல்வாய்ச் சங்கம்
மாதர் வரிமணல்மேல் வண்டல்
உழுதழிப்ப மாழ்கி யைய
கோதை பரிந்தசைய மெல்விரலாற்
கொண்டோச்சும் குவளை மாலைப்
போது சிறங்கணிப்பப் போவார்கண்
(°  ' 'சாப் புகாரே எம்மூர்.

—இளங்கோவடிகள்.

மி    ங்காலத்தே நாகரீகத்தில் மேம்பட்டு விளங்கிய நாடுகள் கிரீசு, உரோம், எகிப்து, இந்தியா முதலியவை. இந்த நாடுகளில் தலைசிறந்த நகரங்களும், துறைமுகப் பட்டினங்களும் திகழ்ந்தன. காலப்போக்கில் அவை அழிந்தொழிந்து மறைந்தன. அத்தகைய நகரங்கள்பல தமிழ் நாட்டிலும் இருந்தன. அவற்றில் தலையாயது பூம்புகார் என்ற காவிரிப்பூம்பட்டினம். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டே சோழமன்னர்களுக்குத் தலைநகரமாக இருந்ததோடு துறைமுகப்பட்டினமாகவும் விளங்கியது. இதன் பெருமையைச் சங்க இலக்கியங்களில் பரக்கக் காணலாம். சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப்பாலை என்ற மூன்றிலும் இந்நகரைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் "இந்திரவிழவூரெடுத்தகாதையில்" நகரத்தின் அமைப்பை வெகு அழகாகக்கூறுகிறார். இப்பட்டினம் காவிரியின் வடகரையில் இருபகுதியாக அமைந்திருந்தது. பட்டினப்பாக்கம், மருவூர்ப்பாக்கம் (அகநகர், புறநகர்—city and suburbs) என்பன அவை. மருவூர்ப்பாக்கம் கடலுக்கருகேயும், பட்டினப்பாக்கம் அதையடுத்துமேற்கேயும் இருந்தன. இவ்விரண்டிற்குமிடையேயுள்ள சோலையில் நாளங்காடி (Daily market) இருந்தது. மருவூர்ப்பாக்கத்தில் நிலாமுற்றங்கள், அணிகல அறைகள், பலகணிகள் நிறைந்த மாளிகைகளும், கண்கவர்வனப்புடைய யவனர் (கிரீசு, எகிப்து நாட்டினர்) இருப்பிடங்களும், வாணிகத்தின் பொருட்டு வந்த பல நாட்டினரும் ஒரு தேசத்தாரைப் போலக் கலந்து உறைந்திருக்கும் அலைவாய்க் கரையிருப்பும் (Beach), சுண்ணமும், வண்ணமும், தண் நறுஞ்சாந்தும், பூவும், அகிலும் விற்பவர் திரியும் நகர வீதிகளும், பட்டு, உரோம, பருத்தி நெசவாளர் இருக்கையும், பொன்னும் மணியும் விற்கப்படும் அகன்ற தெருக்களும், தானியக் கடைத்தெருவும், அப்பம், பிட்டு, கள், உப்பு, மீன், இறைச்சி, எண்ணெய் முதலியன விற்போர் இருப்பிடங்களும், வெண்கலம், செம்பு வேலை செய்யும் கன்னர், தச்சர், கொல்லர், ஓவியர், சுதையாற்பாவைசெய்வார், தட்டார், தையற்காரர், தோலின் தையல் வேலை செய்யும் செம்மார், துணி, நெட்டியால் பலவகை



குகாம்பாள்

உருக்கள் செய்பவர், குழல், யாழ் முதலிய வற்ருல் இசைபாடும் பாணர், மற்றும் சிறு தொழில் செய்வோர் முதலியவர் உறையும் இடங்களும் இருந்தன. **பட்டினப்பாக்கத்தில்** அரச வீதியும், தேரோடும் தெருவும், பெருங் குடி வாணிகர் மாடங்கள் நிறைந்த மறுகும், அந்தணர் இருக்கையும், மருத்துவர், உழவர், சோதிடர் இருப்பிடங்களும், முத்துக்கோப் போர், சூதர், மாகதர், வைதாளியாடுவார், நாழிகைக்கணக்கர், சாந்திக்கூத்தர், ஆடற் கூத்தியர், கணிகையர், ஏவல் தொழில் செய் பவர், தோல்கருவி, தொளைக்கருவி, நரம்புக் கருவி, உருக்குக்கருவி என்றவற்றைச் செய் யும் இசைக்கருவித் தொழிலாளர், படைக் கும், விழாவுக்கும் கொட்டும் பலவகை வாத் தியக்காரர், விதூடகர் இவர்களிருக்குமிடங் களும், யானைப்பாகர், தேர்ப்பாகர், குதிரைப் பாகர், காலாட்படைத் தலைவர் முதலியோர் அரசன் அரண்மனையைச் சூழ்ந்துள்ள பரந்த இருப்புக்களும் நிறைந்திருந்தன. "பீடு கெழு சிறப்பிற் பெரியோர் மல்கிய பாடல்சால் சிறப்பிற்பட்டினப்பாக்கம்" என்று கூறுகிருர் இளங்கோவடிகள். இன்னும் இந்நகரின் கண் சிவபெருமான், முருகன், திருமால் கோயில்கள் இருந்தன என்பதை அவரே,

> பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
> அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
> நீல மேனி நெடியோன் கோயிலும்

என்று அழகாக அமைத்துக்காட்டுகிருர். கனாத்திறமுரைத்தகாதையில் மற்றும் சில கோயில்கள் இருந்ததைச் சொல்லியிருக் கிருர். அவை கற்பக தரு நிற்குங் கோயில், ஐராவதம் நிற்குங் கோயில், பலதேவர் (பல ராமர்) கோயில், சூரியன் கோயில், இறைவன் கோயில், முருகவேள் கோயில், வச்சிரப்படை நிற்குங் கோயில், சாதாவாகனன் கோயில், அருகன் கோயில், சந்திரன் கோயில் முதலி யன. **சோமகுண்டம், சூரியகுண்டம்** என்ற பொய்கைகள் இருந்ததையும் அதேகாதை யில் கூறியிருக்கிருர். இப்போது திருவெண் காட்டுக் கோயிலுக்குள் இருக்கும் சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம் என்ற இரண்டும் அவையாக இருக்கலாம் என்று சிலர் கருது கின்றனர். புகார் நகரின் ஒரு பகுதியாகத் திருவெண்காடு அக்காலத்திருந்திருக்க வேண் டும் என்பது அன்னோர் கொள்கை.

இப்பெருநகரின் கண் **ஐவகை மன்றங்கள்** இருந்தனவென்பதையும் சிலப்பதிகாரத்தில் காண்கிறோம். (1) ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்கள் உள்ள பண்டசாலைகள் தாழிட மாலும் காவலில்லாமலும் இருப்பதால் அவற் றினின்றும் களவு செய்வோர் பொருளைக் கொண்டுபோக முடியாமல் சுற்றிச் சுற்றி வந்து மயங்கவைத்து நடுங்கச் செய்யும் பரந்த இடம் **வெள்ளிடைமன்றம்.** (2) முடவர், குள்ளர், ஊமையர், செவிடர், தொழுநோயா ளர் முதலியோர் நீராடிய அளவில் நல்ல உருவத்தைக் கொடுக்கும் **இலஞ்சி மன்றம்** (இலஞ்சி-பொய்கை). (3) வஞ்சனையால் மருந்தூட்ட உண்டு பித்தேறினோர், நஞ்சை உண்டு நடுங்கு துயரடைந்தோர், கொடிய விடத்தையுடைய பாம்பினல் கடிபட்டோர், பேய்பிடித்ததால் பிதுங்கிய கண்களையுடை யோர் ஒரு முறை சுற்றிவந்து தொழுத அய விலே துன்ப நீக்கத்திற்குக் காரணமாகிள

ஒளி சொரியும் நெடுங்கல் மன்றம் (4) தவ வேடத்தில் மறைந்து கூடாவொழுக்கத்தில் ஒழுகுபவர், தீநெறியில் செல்லும் பெண்கள் சதிசெய்யும் அமைச்சர், பிறர்மனைநயப்பவர், பொய்சாட்சி கூறுவோர், புறம் சொல்வோர் முதலியோர் தன் கையிலுள்ள பாசத்திலகப் படுவர் என்று நான்கு காததூரம் கேட்கும் படி குரலை எழுப்பி, அப்படிச் செய்வோரைப் பாசத்தால் கட்டி நிலத்தில் புடைத்துண்ணும் பூதசதுக்கம். (5) அரசன் செங்கோல் வளைந்தாலும், தருமமன்றத்தார் ஒரு பட்ச மாகத் தீர்ப்புக் கூறினாலும், நாவால் சொல் லாமல் துன்பக்கண்ணீர் சொரிந்து அழு கின்ற பாவை நிற்கும் பாவைமன்றம்.

கரிகாலச் சோழன் வடநாட்டுக்குப் படையெடுத்துச் சென்று, இமயத்தைச் செண்டால் அடித்து, மீண்டும் அதைப் பண்டுபோல் நிறுத்தி, அதன் முதுகில் புலிக் கொடி பொறித்தான் என்று நூல்கள் கூறு கின்றன. அப்படியவன் வெற்றியுடன்மீளும் போது, வச்சிர நாட்டரசன் முத்துப்பந்தர் ஒன்றைத்திறையாகக் கொடுத்தான்; மகத நாட்டு மன்னன் பட்டி (வித்தியா) மண்டபத் தைக் கொடுத்தான்; அவந்திவேந்தன், தோரணவாயில் ஒன்றை உவந்து கொடுத்தான். இவைகளைக் கொண்டு வந்து கரிகாற்பெரு வளத்தான் காவிரிப்பூம்பட்டினத்தில் கவின் பெற அமைத்தான் என்பதையும் காவியம் கூறுகிறது.

சாத்தனூர் யாத்த மணிமேகலை என்ற காவி யத்திலும் புகார் நகரத்தைப்பற்றிய குறிப்புக் கள் காணப்படுகின்றன. 'நுதல் விழி நாட் டத்திறையோன் முதலாப்பதிவாழ் சதுக்கப் பூதம் ஈறாக' எல்லாக் கடவுளர் கோயில்களும் இருந்தன என்று கூறுகிறார் சாத்தனூர். சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற இரண்டு பெருங்காவியங்களையும் இயற்றிய பெரும் புலவர்கள் "பிறவாயாக்கைப் பெரியோன்," "நுதல்விழி நாட்டத் திறையோன்" என்று சிவபெருமானுக்கு முதன்மை கொடுத்துப் பேசியிருப்பது கவனிக்கத்தக்கது. மகா தேவன் யாக்கையிற் போய்ப் பிறவாதவன் என்பது "தாயுமிலி தந்தையிலி தான் தனி யன் காணேடி" என்று பின்னர் எழுந்த திருவாசகத்திருவாக்கை நினைவு படுத்துகிறது.

கடியலூர் உருத்திரங்கண்ணனூர் என்ற பெரும் புலவர், பட்டினப்பாலை என்ற நூலில் காவிரிப்பூம்பட்டினத்தையும் அதை ஆண்ட சோழன் கரிகாற்பெருவளத்தானையும் புகழ்ந்து பாடியிருக்கிறார். இதைப் பாடியதற்காக உருத்திரங்கண்ணனூர் கரிகாலனிடம் பதினாறு யிரம் பொன் பரிசிலாகப் பெற்றார் என்று தெரிகிறது. "வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலைய கடற்காவிரி புனல் பரந்து பொன் கொழிக்கும் சோழநாடு, என்று தொடக்கத்திலேயே கூறுகிறார் புலவர் பெருந்தகையார். காவிரிப்பூம்பட்டினம், படகுகள் வரிசையாகக் கட்டப்பெற்ற கழி கள் சூழ்ந்த பாக்கத்தினையும், சோலைகளையும், பொய்கைகளையும், ஏரிகளையும், புலியடை யாளமிட்ட இரட்டைக் கதவுகளையுடைய மதிலையும், அறச்சாலைகளையும், வேள்விச் சாலைகளையும், தவச்சாலைகளையும் தன்ன கத்தே கொண்டு விளங்கியது. அரச ஏவலர் பொருள்களுக்கு சுங்கம் கொள்வர். ஏற்று மதி, இறக்குமதிப் பண்டங்கள் மலைபோல் குவிந்து கிடக்கும். தெய்வத்திற்காக எடுத்த கொடிகள், விலைப்பண்டங்களை அறிவித்தற் குக் கட்டிய கொடிகள், ஆசிரியர்கள்வாது கருதிவைத்த கொடிகள் கப்பல் கூம்பில் கொடிகள் முதலியன நகர்ப்புறத்தில் விரவி யிருந்தன. பல மொழிகளைப் பேசுவோர் ஒரே நாட்டினர் போல இனிதுறைந்தனர்.

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கவும்

இத்தகைய பிற அரிய பொருள்களும் அந் நகரில் வாணிகத்தின் பொருட்டு வந்து குவிந் திருந்தன. இன்னும் மீனவர், வணிகர் முதலியவர்களுடைய வாழ்க்கையையும் அந் நூலில் புலவர் விரிவாகக் கூறியிருக்கிறார்.

மேலே சொன்ன நூற்களில் சொல்லப் படும் அந்தநகரின்பலவகைச் சிறப்புக்களையும் நோக்கினால்அத்தகைய துறைமுகநகர்ஒன்றை இப்போது காணமுடியுமோ என்று எண்ணத் தோன்றுகிறது . இந்த நகரின் தோற்றம்பற்றி நூல்கள் கூறியிருப்பதை நாம் அறிய வேண் டியது அவசியம். பண்டைச் சோழன் ஒருவன் ஆகாசக் கோட்டைகளை அழித்து இந்த நகரை அமைத்து, இந்திரவிழாவையும் ஏற்படுத்தினான். அவனுக்கு, "தூங்கெயில்

எறிந்த தொடித்தோட் செம்பியன்" என்று பெயர். இன்னும் இந்நகருக்கு **சம்பா** என்ற பெயர் இருந்தது. அதனாலேயே காவல் தெய்வத்திற்கு **சம்பாபதி** என்ற பெயர் ஏற்பட்டது. அந்த அம்மனுடைய கோயில் இப்போது திருச்சாய்க்காடு கோயிலுக்கு வடக்கே இருக்கிறது. (இந்த இதழில் 'திருச்சாய்க்காடு' என்ற கட்டுரையில் சம்பாபதியம்மன் படம் இருக்கிறது காண்க.) சம்பாபதி கோயிலுக்கு வெளியே இரண்டு பெரிய பூத உருவங்கள் இருக்கின்றன. சிலப்பதிகாரத்தில் சொல்லப்படும் பூதசதுக்கம் இவ்விடத்தே இருந்திருக்க வேண்டுமென்று கூறுகின்றனர். இதனருகே ஆண்டுதோறும் இந்திரவிழா இருபத்தெட்டு நாட்களுக்கு இப்போது நடைபெறுகிறது. ககந்தன் என்பவனால் அமைக்கப்பெற்றதால் இந் நகருக்கு **காகந்தி** என்ற பெயரும் உண்டு. **புகார், காவிரிப்பூம்பட்டினம்** என்ற பெயர்களும் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காணப்பெறுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே இதன் பெருமை அயல் நாட்டினர் அறிந்திருந்தனர். கி. பி. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் அலெக்சாந்திரிய நகர வணிகர் ஒருவர் எழுதிய **பெரிப்புளூஸ்** என்ற நூலில் இந்நகரை, **காமரா** என்று கூறுகிறார். கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் **டாலமி** என்பார் எழுதிய பூகோளத்தில் **கபேரிஸ்** என்று குறிக்கிறார். **ஹியூன்சாங்** என்ற சீனயாத்திரிகர் இப்பட்டினத்தை, **சரித்திரபுரம்** என்று சொல்கிறார். பாலிமொழியிலுள்ள "அரசன் மிலிந்தனின் கேள்விகள்" என்ற நூலில் **கோலபட்டினம்** ஒரு சிறந்த துறைமுகம் என்று கூறப்பட்டிருக்கிறது. இது காவிரிப்பூம்பட்டினமாகத்தான் இருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். **அக்கித்தி** யென்பார் தன்னைப் பெருமைப்படுத்துவோரை விட்டுத் தப்பி காசியிலிருந்து காவிரிப்பூம்பட்டினத்தருகிலுள்ள ஒரு நந்தவனத்தில் சிறிது காலம் அமைதியாகத் தங்கியிருந்தார் என்று புத்தசாதகக் கதையொன்று கூறுகிறது.

இத்தகைய பீடும் பெருமையும் வாய்ந்து இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டே உலகப்புகழ் பெற்றிருந்த காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல் கொண்டது. சோழமன்னன் ஆண்டுதோறும் நடத்த வேண்டிய இந்திர விழாவை நடத்தத் தவறியதால் தெய்வத்தின் சீற்றத்துக்குள்ளாகிக் கடல் கொந்தளித்து நகரை அழித்தது என்று நூல்கள் கூறுகின்றன. இப்படிக் கடல்கோள்பட்டது ஏறக்குறைய கி. பி. 170-ஆம் ஆண்டிலிருக்கலாம் என்று வரலாற்றுராய்ச்சியாளர் கருதுகின்றனர். அண்மையில் அரசாங்கத் தொல்பொருள் துறையினர் சில இடங்களை அகழ்ந்துபார்த்து புதைபொருள்கள் சிலவற்றைக் கண்டுபிடித்தனர். இப்பக்கங்களில் இன்னும் அகழ்ந்து பார்த்தும், கடலாழப் பொருள்களைப் பார்த்தும் மேலும் ஆராய்ச்சி நடத்தினால் பல சிறந்த கண்டுபிடிப்புகளைக் காண முடியும் என்பதில் ஐயமில்லை. மோகஞ்சோதாரோ, ஆரப்பா முதலிய இடங்களையும் அப்படித்தானே கண்டுபிடித்தனர். இந்நகரின் பண்டைப் பெருமையை எடுத்துக்காட்டவும், சிலப்பதிகாரம் என்ற பெருங்காவியம் எழுதற்கிடமாகவும் இருந்ததால் அரசாங்கத்தார் கடலருகே **கண்ணகியின்** அழகிய சிலை ஒன்றை அமைத்திருக்கின்றனர். அதன் கீழே பின்வரும் அடிகள் பொறிக்கப் பெற்றிருக்கின்றன:—

> மண்ணக மாதற்கு அணியாய கண்ணகி
> விண்ணக மாதர்க்கு விருந்து.

(அந்தக் கண்ணகிசிலையின் படம் இக்கட்டுரையின் முன்னர் காண்க.)

உலகப்புகழ்பெற்றிருந்த காவிரிப்பூம்பட்டினம் இப்போது ஒரு சிற்றூராகக் காட்சியளிக்கிறது. இதன் பெயர் மங்காமல் இருப்பதற்காக இங்கு சிவபெருமான் திருக்கோயில் ஒன்று விளங்கிக்கொண்டிருக்கிறது. அதற்கு, **காவிரிப்பூப்பட்டினத்துப்பல்லவனீச்சரம்** என்று பெயர். பாடல்பெற்ற சோழநாட்டுச் சிவப்பதிகளில் ஒன்று. ஒரு பல்லவ மன்னனால் ஆதியில் கட்டப்பெற்றிருக்க வேண்டும். அதனாலேயே பல்லவனீச்சரம் என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. கோயில் கட்டிட அமைப்பு முதலியவைகளை நோக்கினால் சோழர்காலத்தியதாகக் காணப்படுகிறது. பல்லவச் சிற்பங்கள் காணப்படவில்லை. ஆனால் மூலஸ்தானத்திலுள்ள சிவலிங்கமூர்த்தியைப் பார்த்தால் மிகவும் கருமையான பளபளப்பான கல்லால் செய்யப் பெற்றிருக்கிறது. இதே போன்ற சிவலிங்கங்கள் பல்லவ மன்னரால் அமைக்கப்பெற்ற

காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலில் இருக்கின்றன.

பல்லவனீச்சரம் என்ற இத்தலம் தஞ்சை மாவட்டத்திலிருக்கிறது. மாயூரம் - தரங்கம்பாடி கிளை இருப்புப் பாதையில் ஆக்கூர் என்ற நிலையத்திலிருந்து ஆறு கல் தொலைவிலிருக்கிறது. மாயூரம், சீகாழி இவ்விடங்களிலிருந்து பஸ்கள் செல்கின்றன. சாயாவனம் என்று வழங்கும் திருச்சாய்க்காட்டிற்குக் கிழக்கே கால் கல் தூரத்திலிருக்கிறது. இறைவன் திருக்கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. கோயிலின் முன் திருக்குளம் இருக்கிறது. (பின் அட்டைப் படம் பார்க்க) கிழக்கு வாயிலை ஒரு கோபுரம் அணி செய்கிறது. கோயிலில் இரண்டு பிரகாரங்கள் உள்ளன. உள்பிரகாரம் தென்கிழக்கு மூலையில் பட்டினத்தார் சந்நிதியும், மேற்குப் பிரகாரத்தில் விநாயகர், வள்ளி தெய்வயானையுடன் முருகன், மகாலட்சுமி சந்நிதிகளும் இருக்கின்றன. முருகன், வள்ளி, தெய்வயானை இவர்களின் திருவுருவங்கள் மிகவும் அழகாகவும் பெரியனவையாயும் இருக்கின்றன. வடக்குப் பிரகாரத்தில் தெற்கு நோக்கி அம்பாள் சந்நிதி இருக்கிறது. தேவியின் திருநாமம் **சௌந்தரநாயகி** என்பது. மூலஸ்தானத்தில் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ள சிவலிங்க மூர்த்தியே **பல்லவனீசுவரர்**. இக்கோயிலில் பட்டினத்தார், அவருடைய தாயார், அவர் மனைவி, சேந்தனார், அவர் மனைவி, குழந்தை, மருதவாணர், சிவசர்மா, சுசீலை இவர்களுடைய உற்சவ மூர்த்திகள் உள்ளன. **குகாம்பாள்** என்ற திருவுருவம் அவசியம் பார்க்கத்தக்கது. (படம் பார்க்க)

இக்கோயிலின் முன்னுள்ள திருக்குளம், **ஜாஹ்னவி தீர்த்தம்**. காவிரி கடலுடன் கலக்கும் இடமான **சங்கம தீர்த்தம்** மிகவும் சிறப்பு வாய்ந்தது. எல்லா அமாவாசைகளிலும், சிறப்பாக ஆடி, தை அமாவாசைகளிலும், மக்கள் நீராடுகின்றனர். **முல்லை** தலவிருட்சம் என்று கூறுகின்றனர். கோயிலில் ஐந்துகால பூசை நடைபெறுகிறது. ஆடியில் பத்து நாள் உற்சவம் நடக்கிறது. ஆடி உத்திராடத்தில் பட்டினத்தார் காட்சித் திருவிழா மிகவும் சிறந்தது.

இத்தலத்திற்குத் தனியே தமிழில் தல புராணம் இல்லை. வடமொழியில் உள்ளது அச்சேறவில்லை. **திருஞானசம்பந்தர்** இப்பதி இறைவன் பேரில் இரண்டு திருப்பதிகங்கள் ஓதியருளியுள்ளார். 'பட்டினத்துப் பல்லவனீச்சரம்', 'புகாரிற்பல்லவனீச்சரம்', 'பட்டினத்துறை பல்லவனீச்சரம்' என்று ஊரைக் குறித்தருளுகிறார். **அருணகிரிநாதர்** திருப்புகழ்ப்பாடல் ஒன்றில் "கம்பை மாவடி மீதேய சுந்தர கம்புலாவிய **காவேரி சங்கமுகஞ்** சிராமலைவாழ்தேவ தந்திரவயலூரா" என்று கூறியிருக்கிறார்.

**இயற்பகை நாயனாரும், பட்டினத்தடிகளும்** இப்பதியிலேதான் திருவதாரம் செய்தார்கள். இயற்பகையாரின் வரலாறு 'திருச்சாய்க்காடு' என்று இவ்விதழிலுள்ள கட்டுரையில் கூறப்பெற்றிருக்கிறது. பட்டினத்தார் வரலாறு நாடறிந்ததொன்று. "பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல் ஆரும் துறக்கை அரிதரிது" என்றும், "ஒட்டுடன் பற்றின்றி உலகைத் துறந்த செல்வப் பட்டினத்தார் பத்ரகிரி பண்புணர வதெந்நாளோ" என்றும் பெருந்துறவியான தாயுமான சுவாமிகளே கூறியிருக்கிறாரென்றால் பட்டினத்தார் பெருமையைப் பற்றி வேறென்ன கூறவேண்டும். (இவருடைய திருவுருவப்படம் காண்க.)

இவ்வூரில் பரமேசுவர விநாயகர் கோயில், இராஜ நாராயணப்பெருமாள் கோயில், துர்க்கைகோயில் முதலியவைகளும் இருக்கின்றன. பரமேசுவர விநாயகர் கோயிலில் பட்டினத்தார் வீட்டையிலிருக்கும் போது அரண்மனையில் திருடிய முத்து மாலையை இருட்டில் திருடர்கள் அவர் கழுத்தில் போட்டுச்சென்றனர் என்பது இவர் வரலாற்றில் கூறப்படுவது.

இக்கோயிலில் தமிழ்க்கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கர்ப்பக்கிரக மேற்குச் சுவரில் மாறவர்மன் திரிபுவனச்சக்கரவர்த்தி சுந்தரபாண்டிய தேவனின் பதினேழாம் ஆட்சியாண்டில் செதுக்கிய கல்வெட்டு காணப்படுகிறது. இராஜாதி ராஜவளநாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்துக் கோயிலுக்கு நிலம் வழங்கியதைக் கூறுகிறது. இன்னும் கோயில் முற்றத்திலுள்ள ஒரு கல்லில் சகம் 1679 (கி.பி. 1757)ல் பொறிக்கப்பெற்ற கல்வெட்டொன்றிருக்கிறது. அதில், திருச்சாய்க்காட்டுச்சீமை, காவிரிப்பூம்பட்டின மாகாணம், பல்லவனீச்சரம் கோயிலைப் பழுது பார்க்கவும், பூசை, விழா முதலியன நடைபெறவும் நிலம் அளித்ததைக் குறிக்கிறது.

# திருஞானசம்பந்தர் அருளிய திருமுறை

[ஸ்ரீமத் சிவஞானத்தம்பிரான் சுவாமிகள், திருவெண்காடு.]
(முதுபெரும்புலவர் முத்து. சு.)

(முன் இதழ்த் தொடர்ச்சி)

சிவபூஜைக்கு வேண்டும் உபகரணங்களைச் சிவாகமங்களுள் விளக்கும் முறைமை, தோத்திர நூல்களுள் அமைதல் இயலாது. ஒரே இடத்தில் எல்லா வுபகரணங்களையும் ஒரு சேரவைத்து முறைமையில் அமையக் கூறுதல் தோத்திரப்பாக்களில் நேராது. அதனால், (ஒவ்வொன்றற்கும் தனித்தனி இடம் வகுத்துக்கொண்டு அதனதன் விதி விலக்குகளை வரிசைப்படுத்தி முறையின் வைத்து விளக்கும்) சிவாகமங்கட்கும் (அவ்வகையில் அமைதற்கியலாத) சைவத் திருமுறைகட்கும் பொருளளவில்மட்டும் ஒற்றுமை காண்பதேதக்கது. அந்நோக்கோடு, சிவபூஜையைக் குறித்து வேண்டப்படும் உபகரணங்களைத் திருமுறைகள் கூறும் அளவை அறிதல்வேண்டும்.

அவ்வாறு அறிதலைக்கொண்டு, திருஞானசம்பந்தர் அருளிய திருமுறைகளுள் சிவபூஜோபகரணங்களை ஆராய்ந்தால், சிவாகம விதிவிலக்குக்களின் வேறுபடாமையும் சிவகிரியைகளைப் புரியும் மெய்யன்பர்க்கு அவரவர் தகைமைக்குத்தகவேண்டும் (சிவபூஜைக்குரிய) உபகரணங்களும் நன்கு விளங்கும்.

சிவபூஜைக்கு இன்றியமையாது வேண்டித் தேடிச் சேர்த்துக்கொள்ளப்படுவன, இலையும், மலரும், சாந்தமும், புகையும், விளக்கும், நீரும், அமுதும், பாஇம், பழமும், உடையவர்க்குச் சார்த்தும் உடையும், பணியும், இண்டை முதலிய விரைகமழ்மாலை முதலியனவும், பால்தயிர் அபிடேகப்பொருள்களும் ஏனைய பிறவும் ஆகும். பிற ஆவன கண்ணாடி, விசிறி, சாமரை, குடை, திருவாசிகை முதலியன. ஞானிகளுக்கு ஞானபூஜை உரியது ஆகும். ஆதலின் அவர்கட்கு, ("ஊனமாம் உடம்பினில் உறுபிணிகெட எண்ணில்) ஞான மாமலர்கொடு நணுகுதல் நன்மையே" என்றருளியதும் பிறவும் அறிக.

(1) 'உயர் பாதமே ஞானம் ஆக நின்று ஏத்தவல்லார் வினை நாசமே' (2) 'உயர் நற்றவம் மெய்கற்று அவை உணர்ந்த அடியார் ஞானம் மிக நின்று தொழுநாளும் அருள் செய வல்ல நாதன். (3) ஞானநீர் தூவிவாய்ப் பெய்து நின்று ஆட்டுவார் தொண்டரே' (4) ஞானமிகு நல்ல மலர் வல்லவகையால் தோளிணொடு கைகுளிரவே தொழுமவர்' (5) "ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர் ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்தேனை வழி திறந்து ஏத்துவார்க்கு இடரான கெடுப்பன அஞ்செழுத்துமே' (6) (திருக்கலிக்காமூர்த் திருப்பதிகத்துள்) "ஒருவரையான் மகள் பாகன்றன்னை உணர்வால் தொழுதேத்தத் திருமருவும் சிதைவில்லைச் செம்மைத் தேசு உண்டு அவர்பாலே" (7) 'நுண்ணறிவால் வழிபாடு செய்யுங்கால் உடையான்" என்பவையும் பிறவும் ஞானபூஜைக் குரியவை.

திருஞானசம்பந்தர் அருளிய திருமுறையில், முறையே திருமங்கலக்குடித் திருப்பதிகத்துளும் திருச்சிக்கற் றிருப்பதிகத்துளும் காணப்படும் 'வேனல் வேளை விழித்திட்ட வெண்ணெய்ப் பெருமானடி ஞானமாக (ந்) நினைவார் வினையாயின நையுமே' (முன்னர் முதலில் உணர்த்திய) 'ஊனில் வெண்டலைக் கையுடையான் உயர்பாதமே ஞானமாக நின்று ஏத்தவல்லார் வினைநாசமே' என்னும் இரண்டனையும் உற்றுணர்ந்தால், உண்மை நெறி விளக்கம் என்னும் அருள் நூலில், "பரை உயிரில் யான் எனது என்று அற நின்றது அடியாம்" என்னும் சைவநெறி யுண்மைச் சிறப்பு இனிது புலப்படும்.

சடாயு என்னும் சிவபத்தர் சூரிய புத்திரர். 'ஆதித்தன் மகன் என்ன அகல்ஞாலத் தவரோடும் போதித்த சடாயு என்பான்' என்பது திருப்புள்ளிருக்கு வேளூர்த் திருப்பதிகத்தினது.

அப்பெரியோன் "பத்தியினால் வழிபட்டுப் பலகாலம் தவம்செய்து புத்தி ஒன்ற வைத்து உகந்தான்" ('பல்லூழிகாலம் பயின்றருளை அர்ச்சிக்கின் நல்லறிவு சற்றே நகும்') "பொடியாடிக்கு அடிமை செய்த புள்" 'வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவம் ஆகப் போதத்தால் வழிபட்டான்' (இஃது இங்குச் சண்டேசுவரரைக் குறித்த

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

[திரு. K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

ஒருவரை ஒருவர் நலம் விசாரித்தபின் குருகை காவலப்பன் ஆளவந்தாரிடம் அவர் அங்கே வந்த நோக்கம் என்னவென்று வினவினர். ஆளவந்தாரும் "ஸ்வாமீ! அடியேனுடைய பாட்டனர் தேவரீரிடம் அடியேன் நேரிலே அறிந்துகொள்ளும்படி சில ரகசியங்கள் வைத்துப் போயிருப்பதாகவும் அதை அறிந்துகொள்ளும்படியும் அடியேனுடைய ஆசார்யர் ஸ்ரீ மணக்கால்நம்பிகளின் ஆணை. அதனை நிறைவேற்றிக்கொள்ளவே அடியேன் தேவரீர் திருவடிகளை நாடி வந்தேன்" என்று கூறி சாஷ்டாங்கமாகக் குருகை காவலப்பனை தெண்டம் ஸமர்ப்பித்து அவரது திருவடிகளிரண்டையும் பற்றிக்கொண்டார். குருகை காவலப்பன் ஆளவந்தாரின் ஆர்வத்தையும் பணிவையும் மிகவும் வியந்து மகிழ்வுற்று அவரை அப்படியே தழுவித் தூக்கி "அப்பனே! உண்மைதான். ஸ்ரீமந் நாதமுனிகள் என்னிடம் சில ரகசியங்கள் வைத்துப் போயிருக்கிறார். அதை உரியவராகிய உம்மிடம் சேர்ப்பிக்கவே எனக்கும் ஆணையிட்டுள்ளார். ஆனல் இது உரிய சமயமன்று. என்னுடைய அந்திமகாலத்திலே அவற்றை உமக்குக் கூறுகிறேன்" என்று பரிவோடு கூறினர். ஆளவந்தாரும் "ஸ்வாமீ! அடியேன் கோயிலுக்கு (ஸ்ரீரங்கத்துக்கு)ப் போய் விட்டேனாகில் தேவரீர் அந்திமகாலம் அடியேன் அறிவதெங்ஙனம்?" என்று விண்ணப்பிக்க, குருகை காவலப்பன், "உமது கேள்வி சரியே. வருகிற புஷ்யமாதத்திலே, குரு புஷ்யயோகத்திலே அபிஜன முகூர்த்தத்திலே நமக்கு சரீராவஸானம் (சரீரத்துக்கு முடிவு) நிகழக்கூடும். அதற்கு முன்புவந்து தெரிந்துகொள்ளும்" என்று மிக ஆர்வத்தோடே அந்நாளைக்குறித்து ஒருமுறியும் அளித்து அவருக்கு விடைகொடுக்க ஆளவந்தாரும் குருகை காவலப்பன் திருவடிகளிலே தெண்டனிட்டுக் கோயிலுக்கெழுந்தருளினர்.

கோயிலிலே ஆளவந்தாரும் அவர் சிடர்களுமாகப் பெரியபெருமாள் கைங்கர்யத்திலே எப்போதும் ஈடுபட்டு அதுவே காலக்ஷேபமாக (பொழுதுபோக்காக) வாழ்ந்து வந்தனர். நம்பெருமாளுக்கு உற்சவம் முதலியன வெகு சிறப்பாக நடைபெற்று வந்தன.

திருவத்யயனத் திருவிழா ஆரம்பமாகியது. [அத்திருவிழாவிலே நம்பெருமாள் ஆழ்வார்களின் அருளிச்செயல்கள் நாலாயிரத்தையும் திருச்செவிமடுப்பது திருமங்கை மன்னன் காலத்திலிருந்து நிகழ்ந்து வருவது. அத்திருவிழாவிலே அரையர் எனப் பெயர் பெறும் அந்தணவைணவர் திவ்யப்பிரபந்தப் பாடல்களுக்கு அபிநயத்துடன் விளக்கம் கூறுவர். அம்முறை இன்றும் கோயிலிலும் ஸ்ரீவில்லிபுத்தூரிலும், குருகையிலும், ஒரு சில காலங்களில் திருக்குறுங்குடியிலும் நிகழ்ந்து வருகின்றது.]

அரையர் திருவாய்மொழியிலே,

"கடுவினை களையலாகும்
காமனைப்பயந்த காளை
இடவகை கொண்டதென்பர்
எழிலணி அனந்தபுரம்
படவரவணையில் பள்ளி
பயின்றவன் பாதம்காண
நடமினோ நமர்கள்உள்ளீர்
நாம்உமக்கறியச் சொன்னோம்"

என்ற பாடலை அபிநயத்தோடு விளக்கிவந்தார். கோஷ்டியிலே ஆளவந்தார் உள்ளிட்ட ஸ்ரீ வைஷ்ணவர்கள் அதனை ஆர்வத்தோடு கேட்டு இன்புற்றிருந்தனர். பாடலில் மூன்றடிகளுக்கு விளக்கம் காட்டிப் பின் நான்காம் அடியாகிய 'நடமினோ நமர்கள் உள்ளீர்' என்ற இடம் வரும்போது அரையர் என்ன காரணத்தாலோ ஆளவந்தாரை அணுகி அவருக்குரைப்பதுபோலவே "நடமினோ நமர்கள் உள்ளீர்; அனந்தபுரம் நடமினோ நமர்கள் உள்ளீர்" என்று பன்முறையும் கூறினர். அதிலேயே மனம் லயித்திருந்த ஆளவந்தார் உள்ளத்தே ஒரு கிளர்ச்சி பிறந்தது. "கோஷ்டியை நோக்கி விளக்கம் கூறிவந்த அரையர் இவ்வடி வந்ததும் என்னை மட்டும் நோக்கிக் கூறுவானேன், அதுவும் ஒருமுறையல்ல

பன்முறை 'அனந்தபுரம் நடமினோ' என்று பன்னிப்பன்னி உரைப்பானேன். இது அவர் தற்செயலன்று. உள்ளிருந்த பரமன்தான் அவர் மூலமாக இந்த ஆணையை இட்டிருக்க வேண்டும் என்று நிச்சயித்தார் ஆளவந்தார். உடனே அத்திருவோலக்கத்திலிருந்து எழுந்தார். அரையரையும் பெரியபெருமாளையும் ஸேவித்தார். "ஆக்ஞைப்படி இன்னே போகின்றேன் விடையும் கொண்டேன்" என்றுகூறி அப்பொழுதே தன் சீடர் சிலருடன் திருவனந்தபுரம் நோக்கிப் பிரயாணமானூர். புறப்படுமுன் தம்முடைய மடத்தைப் பரிபாலித்து வரும்படி தெய்வவாரியாண்டானை நியமித்தார். திருவனந்தை நோக்கித் தலயாத்திரையைத் தொடங்கினூர். வழியில் உள்ள திவ்ய தேசங்களை ஸேவித்து விரைவில் திருவனந்தபுரம் போய்ச்சேர்ந்தார். அங்கே குமரனூர் தாதை துன்பம் துடைத்த கோவிந்தனூர், சாந்தொடு விளக்கம் தூபம் தாமரைமலர்கள் நல்ல ஆய்ந்துகொண்டேத்தி விண்ணவர் அகப்பணிசெய்ய அனந்தன்மேல் ஆனந்தமாக கோமளாகாரமான கருமணியாய்ச் சயனித்திருக்கும் திருக்கோலத்தைக் கண்ணுற்றூர். அந்த எம்பெருமானை அடிமுதல் முடிவரை அணு அணுவாக நோக்கி ஆனந்தமடைந்தார். கண்கள் ஆனந்த வாரி சோர, மேனியெல்லாம் புளகாங்கிதமாக, நாத்தழுதழுக்க நின்று "கெடுமிடராய வெல்லாம்" என்ற திருவாய்மொழியை வாய்குளிர ஸேவித்து மகிழ்ந்தார். அப்பெருமான் வடிவழகிலே மனம்பறிபோனவராய் அங்கேயே சிலகாலம் தங்கி நாள்தோறும் பாமரு மூவுலகுண்டுமிழ்ந்த அப் பத்மநாபனை ஸேவித்து வந்தார்.

ஒருநாள் திடீரென்று ஆளவந்தாருக்குத் தம்மிடம் குருகைகாவலப்பன் குறித்த தினம் பற்றிய நினைவு தோன்றிற்று. அப்பன் குறித்த தினத்தை ஒருமுறியில் குறித்து வைத்திருந்தாரல்லவா. அதைக் கொணர்வித்து நோக்கினூர். அந்தோ! அது அன்றையதினமாகவே இருந்தது. அதைப் பார்த்த ஆளவந்தார் மிகவும் மனம் உடைந்தவராய் "அனந்தபுரம் எங்கே வீரநாராயணம் எங்கே. ஒரு புஷ்பகவிமானம் உண்டாகிலன்றோ அங்குபோய்ச் சேரலாம். அதுவும் பெற்றேமில்லையே" என்று சோகித்தார். பின், "எதற்கும் நாம் உடனே பிரயாணமாவோம்" என்று தீர்மானித்து அனந்தை எம்பெருமானிடம் கண்ணும் கண்ணீருமாய்ப் பிரியாவிடைபெற்று வழியில் எங்கும் தங்காதே விரைவாக வடக்குநோக்கி வந்துகொண்டிருந்தார்.

இங்கே கோயிலிலே மடத்தைக் கவனித்துக்கொள்ளுமாறு ஆளவந்தாரால் நியமிக்கப்பட்ட தெய்வவாரியாண்டானுக்கு இருப்பே கொள்ளவில்லை. ஆளவந்தாரைக் காணுமல் அவர் ஏங்கினூர். ஆளவந்தார் கடாக்ஷத்துக்குட்பட்டார் தன்மை இது! அந்த ஏக்கத்திலே நாளுக்கு நாள் அவர் உடல்மெலிந்து கண்டவர்களுக் கெல்லாம் கவலைக்கிடமாயிற்று. மடத்திலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் வைத்தியர்களை அழைத்துவந்து காட்டினூர்கள். அவர்களும் தெய்வவாரி ஆண்டானை நன்கு சோதித்துப் பார்த்து இவருக்கு நாங்கள் மருந்து கொடுத்து ஆற்றும் நோயொன்றும் இருப்பதாகக் காணேம். ஆனல் மனத்தில் ஏற்படும் கவலையால்தான் ஏதோ இப்படி விளைந்திருக்கிறது என்று முடிவுசெய்து ஆண்டானை நோக்கி "உமது திருவுள்ளத்தில் எதையோ நினைத்துப்பெறுத ஏக்கம் உண்டோ?" என்று கேட்டனர். ஆண்டானும் 'ஆம். அடியேனுடைய ஆசார்யனுடைய ஸேவை கிட்டவில்லையே என்றுதான் ஏக்கம். வேறென்றுமில்லை' என்று பதிலிறுத்தார். உடனே ஸ்ரீவைஷ்ணவர்களும் மருத்துவர்கள் யோசனைப்படி ஆண்டானை ஆளவந்தார் இருக்குமிடம் கொண்டு போவது என்று நிச்சயித்தனர். ஆண்டான் சரீரம் மிகவும் இளைத்த நிலையிலிருந்தமையின் அவரை ஒரு பல்லக்கிலேற்றி ஆளவந்தார் இருந்த திசைநோக்கிப் பயணமாயினர். வழி கழியக்கழிய ஆண்டானுக்கு நாம் ஆசாரியனை அணுகுகிறேம் என்ற நம்பிக்கை ஏறிக்கொண்டே வந்தது. அதன் காரணமாக அவர் திருமேனி வாட்டம் குறைந்து வந்தது. சில நாட்களில் அவர்தாமே நன்கு நடக்க வல்லராய் மற்றையோருடன் சென்றூர். ஆளவந்தார் சென்றது திருவனந்தைக்கு என்றறிந்தவர்களாதலாலே இவர்களும் திருவனந்தபுரம் நோக்கியே சென்றனர். இவ்விதம் இவர்கள் அனந்தபுரம் நோக்கிச் செல்லுகையில் ஆளவந்தார் குருகை காவலப்பனை ஸேவிக்கவேண்டுமென்று அனந்தையினின்றும் கடுக வந்துகொண்டிருந்தார். திருவனந்த

புரத்துக்குச் சற்று தூரத்தே ஆளவந்தார் கோஷ்டியினரும் ஆண்டான் கோஷ்டியினரும் சந்தித்தனர். ஆண்டான் வருவதைத் தூரத்தி லிருந்தே கவனித்த ஆளவந்தார், 'நாம் அங்கே மடத்தைப் பரிபாலிக்கும்படி சொல்லி வந்திருக்க இவர்கள் இங்கே திடீ ரென்று வரக் காரணமென்னவோ!' என்று தம்முள்ளே எண்ணமிட்டுக் கொண்டிருக்கை யில் ஆண்டான் மிகுந்த ஆர்வத்தோடும் விரைந்தோடி வந்து ஆளவந்தார் திருவடி களிலே விழுந்து அவர் பாதங்களைப் பற்றிக் கொண்டுகிடக்க ஆளவந்தார் அவரை வாரி யெடுத்துத் தழுவி நோக்கினார். ஆண்டான் திருமேனி வெளுத்து மிகவும் இளைத்திருக்கக் கண்டு மிகவும் சோகித்து அருகிலுள்ளாரை வினவ அவர்களும் நடந்தவற்றையெல்லாம் ஒன்றும் ஒழியாதே விண்ணப்பித்தனர். ஆள வந்தார் உள்ளத்தே பலவித உணர்ச்சிகள் பாய்ந்தோடின. அவர் முதலிகளை நோக்கி, "பெருமாள் (ராமபிரான்) ஸ்வதந்திரருமாய் சூரருமாயிருந்தமையாலே அன்று பரதாழ் வான் அவர் இரு என்று சொன்னவிடத்தே இருந்தார். நாம் ஸ்வதந்திரனுமின்றி சூரனு மின்றி யிருக்கையாலேதான் இவர் நாம் வைத்த விடத்திலிராமல் வந்துவிட்டார்" என்று கூறினார். இதை ஆண்டான் கேட்டு ஐயோ நிலைகெட்டேனே (ஸ்வரூபஹானிப் பட்டேனே) என்று உடலும் மனமும் பதைப் புற்றவராய் ஆளவந்தார் திருவடிகளிலே விழுந்துகிடந்தார். விழுந்தவர் எழுந்திராமல் அப்படியே கிடப்பதைக் கண்ட ஆளவந்தார் நம்மை சுதந்திரனும் சூரனுமாக்கினலொழிய எழுந்திருக்க மாட்டீரோ என்று கேட்டார். இதனைச் செவிமடுத்த ஆண்டான், "ஐயோ! இதுவும் ஒரு சொருபக்கேடாய் விட்டதே" என்று பதறி எழுந்துநின்றார். இதையெல் லாம் அருகே நின்று கவனித்த ஸ்ரீவைஷ்ண வர் (அவர்களை முதலிகள் என்று குருபரம் பரையில் சம்பிரதாயமாகக் கூறுவர்) ஸ்வாமீ! "நீருள எனின் உள மீனும் நீலமும்" என் கிறபடியே நீரைவிட்டுக் கரையில் கிடத்திய மீனைப்போல பெருமாளை விட்டுப்பிரிந்தால் வாடி நலியும் இளையபெருமாள்நிலை இத் தெய்வவாரியாண்டானுடையது. தேவரீர் பிரிவினாலே இவர் பட்டபாடு இது என்று விண்ணப்பித்தனர். ஆளவந்தாரும் அது கேட்டு இதுவும் ஒரு அதிகார விசேஷந்தான் என்று ஆண்டானை மிகவும் உகந்து அவரை நோக்கி "ஆண்டானே! மிகவும் மெலிந்து விட்டீரே" என்று அவரைத் தடவிக் கொடுத்து அதிகப்ரீதியோடே திருவனந்தபுர மிருந்த விடத்தைச் சுட்டிக் கோபுரத்தைக் காட்டி "அதோ தெரிகிறதே அதுதான் திருவனந்தபுரம். நீரும்போய் அப்படவர வணைப்பள்ளியானை ஸேவித்துவாரும்" என்று அருளிச்செய்தார். ஆண்டானும் 'அடியே னுடைய திருவனந்தபுரம் எதிரே வந்திருக்க அங்கே செல்லவேண்டுமோ?' என்று விண் ணப்பித்தார். ஆளவந்தாரும் எந்த ஆசார்ய னாலே சரணாகதி மார்க்கத்தை ஒருவன் தெரிந்துகொள்கின்றானோ, அந்த மஹானையே அவன் தன்பேற்றுக்குறுப்பான ஸ்ரீவைகுண் டம், திருப்பாற்கடல், துவாரகை முதலான எம்பெருமான் உகந்த திவ்விய தேசங்களாக நினைக்கத்தக்கது என்ற பிரமாணத்துக்கும், (யேனைவ குருணாஸ்ய ந்யாஸ வித்யாப்ரதீ யதே-தஸ்ய வைகுண்ட துக்தாப்தித்வாரகா ஸ்ஸர்வ ஏவஸ:), "வில்லார் மணிகொழிக் கும் வேங்கடப் பொற்குன்றமுதல் செல்லார் பொழில்சூழ் திருப்பதிகளெல்லாம், மரு ளாம் இருள்ஓட மத்தகத்துத் தம்தாள், அருளாலேவைத்த அவர்" என்ற மேற் கோளுக்கும் சேர ஆண்டான் வார்த்தைகள் இருந்தபடி நோக்கி தம்பால் அவருக்கிருந்த பக்திமுதிர்வை வியந்தவராய் அவரையும் தம் முடனே அழைத்துக்கொண்டு கோயிலுக்கு (அரங்கமாநகருக்கு) எழுந்தருளி பெரிய பெருமாளை ஸேவித்து முன்போல் தர்சன ப்ரவர்த்தகம் (மதபோதனை) செய்துகொண் டிருந்தார்.

[ஸ்ரீ ஆளவந்தாரின் வாழ்க்கையின் பிற் பகுதியில் இளையாழ்வார் என்ற இராமாநுஜர் அவதரித்துப் பிரஸித்தியாய் விளங்க அவர் வைபவத்தைக்கேட்டு அவரைப் பார்த்து தனக்குப்பின் அவரையே தர்சனத்துக்கு முதலாக வரித்துப்போனார் ஆளவந்தார். எனவே ஆளவந்தார் வாழ்க்கை வரலாற்றோடு ஒட்டியதே இராமாநுசர் வாழ்க்கையும். அதனால் ஆளவந்தார் வரலாற்றை இத்துடன் நிறுத்தி இராமாநுசர் வரலாறு இனி கூறப் பெறும். பின் தக்க நேரத்தே ஆளவந்தாரின் சரிதம் மீண்டும் தொடரும்.]

## இளையாழ்வார் என்ற இராமானுசர் அவதாரம்

யோநித்யம் அச்யுத பதாம்புஜ யுக்மருக்ம
வ்யாமோஹத ஸ்ததராணி த்ருணாயமேநே
அஸ்மத் குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே.

"அச்சுதனுடைய திருவடித் தாமரைகளிரண்டினுடைய காந்தியில் தன்னையிழந்தவராயும், அவற்றை யொழிந்த மற்றவைகளை யெல்லாம் அல்பமாக நினைத்தவராயும் நமக்கு ஆசார்யனாகவும் பகவானாயும் எழுந்தருளியிருக்கிற கருணைக் கடலாகிய இராமானுசருடைய திருவடிகளைச் சரணமடைகின்றேன்" என்பது பொருள்.

(இது ஒரு தனிப்பாடல் இயற்றியவர் பெயர் தெரியவில்லை)

"வையம் குருடன்றோ
மாமறைநூல் பொய்யன்றோ
ஐயன் உரைத்ததமிழ்
ஆரறிவார்—வையத்துக்கு
ஊன்றுகோல் எந்தை
எதிராசன் உத்தரித்த
மூன்று கோல்
காண்பதற்கு முன்."

இந்த உலகனைத்துக்கும் வாழ்வுக்கு ஒரு பற்றுக்கோடாகிய எந்தையாகிய எதிராசர் என்று பெயர் பெற்ற இராமானுசர் தூக்கிய திரிதண்டத்தை ஸேவிக்கு முன்பு இவ்வுலகு குருடாகவும், வேதங்கள் பொய்யாகவும், மாறன் உரைத்த தமிழ் வேதம் எல்லோராலும் அறியப்படாமலுமல்லவா இருந்தது. அவர் மூன்றுகோல் உத்தரித்த பின்பே க்ண் பெற்றது. வேதப்பொருள் மெய்யாயிற்று. நம்மாழ்வாரின் தமிழ் உலகறியப் பரவிற்று" என்பது பொருள்.

ஸ்ரீ ஆளவந்தார் திருவடிகளிலே ஈடுபாடுள்ள முதலிகளிலே பெரிய திருமலைநம்பி என்பவரும் ஒருவர். (இவரது சரித்திரம் இவ்வோராண்வழி குருபரம்பரை முடிவுற்றபின் கூறப்பெறும்.) அவருக்கு இரண்டு சகோதரிகள் இருந்தனர். அவ்விருவரும் ஸ்ரீ பூமிப்பிராட்டி பெரிய பிராட்டி இருவருடைய அம்சங்கள் என்று கூறுவர். அவருள் மூத்தவர் காந்திமதி என்ற பெயருடையவர். இளையவர் த்யுதிமதி என்ற திருநாமமுடையவர். பெரிய திருமலைநம்பி மூத்தவரான காந்திமதியை ஸ்ரீபெரும்பூதூரில் ஆசூரிவம்சத்தவரான கேசவஸோமயாஜியார் என்பவருக்கும் இளையவரான த்யுதிமதியை மழலைமங்கலத்தில் வட்டமணிக்குலத்தவரான கமலநயன பட்டர் என்பவருக்கும் திருமணம் செய்வித்து மகிழ்ந்தார். அவர்களிருவரும் தத்தம் கணவரோடு அவ்வத்திருப்பதிகளிலே வாழ்ந்து வந்தனர்.

ஸ்ரீபெரும்பூதூரில் கேசவஸோமயாஜியாரும் காந்திமதியம்மையாரும் செவ்வனே மனைவாழ்க்கை நடத்தி வந்தனர். அவர்கள் இல்லத்துக்கு திருக்கச்சி நம்பிகள் என்றஒரு வைஷ்ணவப் பெரியார் வந்து போவார். இத்திருக்கச்சி நம்பிகள் காந்திமதியம்மையாரின் சகோதரரான பெரிய திருமலைநம்பிகளுடன் ஒன்றாக அத்யயனம் செய்தவர். அவர் சொந்த ஊர் பூவிருந்தவல்லி (இப்போது பூந்தமல்லி என அழைக்கப்பெறுகின்றது) பிறப்பினால் செட்டி (வைச்ய) குலத்தைச் சேர்ந்தவர். அவரும் பெரிய திருமலை நம்பியும் நெருங்கிய நண்பர்கள். அவர் அடிக்கடி பூவிருந்தவல்லியிலிருந்து அழகிய திருமாலைகள் தொடுத்துக் கச்சியிலுள்ள தேவப்பெருமாளுக்குக் கொண்டுபோய்ச் சாத்தி மகிழ்வர். தேவப்பெருமாளுக்கு மிகவும் அந்தரங்க பக்தர். பெருமாளோடு முகமுகமாக அளவளாவும் அளவுக்கு அவர் பக்தி முதிர்ந்திருந்தது. (அவர் சரித விசேஷங்களையும் பின்பு விரிவாகக் கூறுவாம்) அவர் பூவிருந்தவல்லியிலிருந்து கச்சி செல்லும் வழியே ஸ்ரீபெரும்பூதூர் இருந்தமையின் தான் அவ்விதம் செல்லுங்காலும், திரும்பும்போதும் தன் நண்பராகிய பெரிய திருமலை நம்பியின் மைத்துனரான கேசவஸோமயாஜியார் இல்லம் சென்று அவர்களுடைய நலம் வினவிச் செல்வது வழக்கம். கேசவஸோமயாஜியாரும், திருக்கச்சி நம்பிகள் தன் மைத்துனருக்கு நண்பர் என்ற முறையிலும், அவர் தேவப்பெருமாளுக்கு அந்தரங்கமான பக்தர் என்ற ஈடுபாட்டினும் நம்பிகளிடம் மிகவும் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்.

திருமணமாகிச் சில வருடங்களாகியும் காந்திமதி அம்மையார் வயிறு வாய்க்கவில்லை. இது தம்பதிகளுக்கு மிகவும் மனக்கவலையளித்து வந்தது. ஸோமயாஜியாருக்கு ஒரு கால் ஒரு விசித்திர எண்ணம் உண்டாயிற்று. "நமக்கு இன்னும் மகப்பேறில்லாததற்கு என்ன காரணம் தெரியவில்லை. திருக்கச்சி நம்பிகள் பெருமாளுக்கு அந்தரங்கர். அவர்

நம்மிடம் அன்புகொண்டவர் ஆகவே அவர் மூலம் நம் மனக்குறை என்று எப்படித் தீரும் என்று பெருமாளையே கேட்டுவிடுவோம்'' என்பதே அவ்வெண்ணம். எனவே ஒருநாள் கச்சிவழி செல்லும் நம்பிகள் ஸோமயாஜியின் இல்லத்துக்கு எழுந்தருளியிருந்த காலையில் ஸோமயாஜியார் நம்பியை அடிபணிந்து "ஸ்வாமீ! தேவரீர் தேவப்பெருமாளுக்கு பெருந்தேவித்தாயாருக்கும் அந்தரங்க கைங்கர்யம் செய்து அவர்களோடு அளவளாவும் பேறுபெற்றவர் என்று அடியேன் அறிவேன். அடியேன் மனத்தில் ஒரு குறை இருக்கிறது. அது என்று நிறைவுபெறும் என்று தேவரீர் பெருமாளையே கேட்டு எனக்கறிவிக்கவேணும்'' என்று வேண்டினார். நம்பியும் மந்தகாசம் செய்து அதற்கென்ன அப்படியே கேட்டுவந்து சொல்கிறேன் என்று பதிலிறுத்துக் கச்சி சென்றார்.

மறுநாள் காலை வழக்கம்போல் நம்பிகள் நீராடித் தன் அனுட்டானங்களை முடித்து மாலைகளோடு தேவப்பெருமாள் ஸன்னதி சென்று திருமாலைகளைப் பெருமாளுக்கும் பெருந்தேவிக்கும் சாத்தி அவர்கள் அழகை அனுபவித்து அவர்கள் அருகிலே நின்று திருவாலவட்ட கைங்கர்யம் செய்துகொண்டிருந்தார். அவர் மனத்திலே ஸோமயாஜியார் சொன்ன விஷயம் ஊசலாடிக்கொண்டிருந்தது. நம்பிகள் உள்ளத்தில் ஏதோ எண்ணியிருக்கிறார் என்பதை அவர் திருமுகம் காட்டியது. நம்பிகள் திருமுகத்தை நோக்கிய தேவப்பெருமாள் அவர் திருவுள்ளத்தில் ஓடும் எண்ணத்தை அறிந்து புன்னகை செய்து அவரை நோக்கி "நீர் நம்மிடம் ஏதோ ஒன்றைக் கேட்க எண்ணியிருப்பதுபோல் காண்கிறதே'' என்று கேட்டார். நம்பியும் திருவாலவட்டத்தை கீழே வைத்து பெருமாளை சாஷ்டாங்கமாக அடிபணிந்தெழுந்து 'ஆம் அடியேன் தேவரீர் திருவுள்ளத்தை மறைத்தா எண்ணிவிடுவேன். கேசவஸோமயாஜி ஒன்று கேட்கவேண்டும் என்று வேண்டினார்' என்று விண்ணப்பித்தார். பேரருளாளன் 'நம்பி! அவருக்குள்ள விதி நியதியின்படி அவருக்குப் புத்திரப்பேறு இல்லை. அவர் விஷயமாக நீர் விண்ணப்பித்தபடியாலே அவ்விதியை நாம் மாற்றுவோம். நம்முடைய கைவரணி தீர்த்தத்துக்குப் போய் அங்கே அவர் புத்திர காமேஷ்டி யாகத்தைச் செய்து நம்மை அவர் மகிழ்விப்பாரானால் அவர் குறையை நிறைவாக்குவோம் என்று அறிவியும்'' என்று அருளிச்செய்தார். நம்பியும் பெருமாள் அருளியதைக் கேட்டு மனம் மகிழ்வுற்றவராய் பெருமாளைத் திருவடிதொழுது விடைகொண்டு திரும்பினார். ஸ்ரீபெரும்பூதூர் வந்து ஸோமயாஜியைக்கண்டார். 'உம்முடைய குறை இது. அதற்குப் பெருமாள் திருவுள்ளமானது இவ்விதம்' என்று அவரிடம் கூறினார். கேட்ட ஸோமயாஜி உடனே நம்பிகளின் பாதங்களில் விழுந்து வணங்கி அவருடைய மகிமையை எவ்விதம் பரவிப் போற்றுவது என்று வகை தெரியாமல் கண்களில்மகிழ்ச்சி நீர்வார "அடியேன் தேவரீர் செய்த பேருபகாரத்துக்குத் தலையல்லால் கைம்மாறிலேன்'' என்று மீண்டும் அவர் பாதங்களில் விழுந்து வணங்கினார். நம்பியும் அவரைத் தழுவியெடுத்து "நீர் பாக்கியசாலி. பெருமாள் திருவருளால் புத்ரலாபம் பெறப்போகிறீர். எனவே பிறக்குமவன் பேரும்புகழுமுடையவனாவான் என்பதில் ஐயமில்லை. நான் வருகிறேன். மேல் ஆவன செய்யும்'' என்று கூறிப்போனார். (தொடரும்)

---

**மாதர்வேளூர்**—: மாதலீசுவரர் கோயிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 21—6—62-ல் நடைபெற்றது.

**இராமேசுவரம்** :—இராமநாதசுவாமி கோயிலில் ஆடித்திருக்கல்யாணத் திருவிழா 24—7—62 முதல் 10—8—62 வரை நடைபெறும்.

**கல்லிடைக்குறிச்சி** :—மானேந்தியப்பர் கோயிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 13—7—62ல் நடைபெற்றது.

**தூத்துக்குடி மேலூர்** :—பத்திரகாளியம்மன் கோயிலில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 20—6—62ல் நடைபெற்றது.

**தாயமங்கலம்** :—முத்துமாரியம்மன் கோயிலில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 13—7—62ல் நடைபெற்றது.

# திருச்சாய்க்காடு

## (சாயாவனேசுவரர் கோயில்)

நித்தலுங் நியமஞ் செய்துநீர் மலர்தூவிச்
சித்தமொன் றவல்லார்க் கருளுஞ் சிவன்கோயில்
மத்தயா னையின்கோ டும்வண்பீ லியும்வாரித்
தத்துநீர்ப் பொன்னி சாகரம்மேவு சாய்க்காடே.

—திருஞானசம்பந்தர்.

அல்ல லடியார்க் கறுப்பார்போலும் அமருலகந்
தம்மடைந்தார்க் காட்சி போலும்
நல்லமும் நல்லூரும் மேயார் போலும் நள்ளாறு
நாளும் பிரியார் போலும்
முல்லைமுகைநகையாள் பாகர்போலும் முன்னமே
தோன்றி முளைத்தார் போலுந்
தில்லை நடமாடுந் தேவர்போலுந் திருச்சாய்க்காட்
டினிதுறையுஞ் செல்வர் தாமே.

—திருநாவுக்கரசர்.


பாடல்பெற்ற சிவத்தலங்களில் சில 'காடு' என்ற முடிபுள்ள பெயர்களுடன் விளங்குகின்றன. அவை பெரும்பாலும் அக்காலத்தே அவ்விடங்களில் நிறைந்திருந்த மரங்கள், செடிகள் இவைகளின் பெயர்களை யொட்டி அழைக்கப்பெற்றன. திருவாலங்காடு, திருப்பனங்காடு, திருக்கச்சி நெறிக் காரைக்காடு, திருவேற்காடு, திருமறைக்காடு, திருத்தலைச்சங்காடு, திருத்தலையாலங்காடு, திருக்கொள்ளிக்காடு முதலியன காடு என்ற முடிபுள்ளவை. அத்தகையதொன்று திருச்சாய்க்காடு என்பது. மக்கள் சாயாவனம் என்று வழங்கிவருகின்றனர். இப்பதி தஞ்சை மாவட்டத்திலிருக்கிறது. மாயூரம்—தரங்கம்பாடி கிளை இருப்புப்பாதையில் ஆக்கூர் என்ற நிலையத்திலிருந்து ஆறு கல் தொலைவிலிருக்கிறது. மாயூரமிருந்து ஆக்கூர் வழியாக 18 கல் தொலைவுக்கும், சீர்காழியிலிருந்து திருவெண்காட்டு வழியாக 12 கல் தூரத்துக்கும் பஸ்கள் செல்கின்றன.

மாயூரமிருந்து காவிரிப்பூம்பட்டினத்திற்குச் செல்லும் நெடுஞ்சாலையினருகே இறைவன் திருக்கோயில் இருக்கிறது. கோயில் கிழக்கு நோக்கியது. ஒரு வெளிப் பிரகாரமும், சுவாமி, அம்பாள் கோயில்களுக்குத் தனிப் பிரகாரங்களும் இருக்கின்றன. கோயிலுக்கு வெளியில் தென்பால் திருக்குளமிருக்கிறது. கிழக்கு வெளிப்பிரகாரத்தில் பைரவர், நவக்கிரகம், சூரியன், இந்திரன், இயற்பகை நாயனுர், அவர் மனைவியார் இவர்களுடைய சந்நிதிகளிருக்கின்றன. தெற்கு வெளிப்பிரகாரத்தில் அம்பிகை சந்நிதிக்கு நேரே வாயிலிருக்கிறது. அதனை ஒரு பெரிய தேர்போன்ற விமானம் அழகு செய்கின்றது. அதை இந்திர விமானம் என்று சொல்கின்றனர். (படம் பார்க்க) மேற்கு வெளிப்பிரகாரத்தில், அப்பர், சம்பந்தர், சுந்தரர், விநாயகர், வள்ளி தெய்வயானையுடன் முருகன், மகாலட்சுமி முதலியவர்கள் சந்நிதிகளும், வடக்குப் பிரகாரத்தில் சண்டேசுரர் சந்நிதியும் இருக்கின்றன.

மூலஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கமூர்த்தியே சாயாவனேசுவரர். சுயம்புலிங்கம். இரத்தின சாயாவனேசுவரர் என்ற திருநாமமும் உண்டு. குயிலினும் நன்மொழியாள் என்பது தேவியின் திருப்பெயர். வடமொழியில் கோஷாம்பாள் என்று கூறுகின்றனர். தலபுராணமுடையார் கூவென்ற கோதையம்மை என்ற பெயரால் அழைக்கிறுர். சுவாமி அம்பாள் சந்நிதிகளுக்கிடையே சூரசம்மார மூர்த்தியான பாலசுப்பிரமணியர் எழுந்தருளியுள்ளார். வேல், மயில், சேவற்கொடியுடன் காட்சியளிக்கின்றுர். பேரெழிலுடன் விளங்கும் இவர் திருவுருவம் பார்ப்பவர் மனதைப் பறிகொடுக்கும் பான்மையில் அமைந்திருக்கிறது. நேரில் கண்டு வழிபடும் பேறு பெற்றவர் கண்பெற்ற பயனைப்பெற்றவராவர். (படம் காண்க.)

இத்தலத்தில் உபமன்யு முனிவர் வழிபட்டுப் பேறுபெற்றதாகச் சொல்லப்படுகிறது. கோயிலுக்கு வெளியிலுள்ள திருக்குளம் ஐராவத தீர்த்தம். வெள்ளையானை இதில் நீராடி இறைவனை வழிபட்டதால் இப்பெயர் ஏற்பட்டது. காவிரியையும் இத்தலத்தின் தீர்த்தமாகக் கூறுவர். ஐராவத தீர்த்தத்தில் நீராடி, காவிரியில் மூழ்கி, சாயாவனேசுவரரை வணங்கி, திருவெண்காட்டு முக்குளநீரில் படிந்து மறுபடியும் ஐராவதீர்த்தத்தில் நீராடி சாய்க்காட்டெம்பெருமானைத் தொழுவார் முத்தியடைவார் என்று பின்வரும் தலபுராணப் பாடல் கூறுகிறது:—

நிலைமைபெறுஞ் சீரயிரா வததீர்த்த
நீராடி நீங்கிப் பொன்னி
அலைபுரளும் புனற்படிந்து சாயாவனேசர்
பதமன்பாற் போற்றித்



சாயாவனம் கோயில்
இயற்கை நாயனாரும் அவரது மனைவியும்



சாயாவனம் இந்திரவிமானம்



சம்பாபதி அம்மன்

சொல்லியருளவேண்டும்" என்றார். "உன் மனைவி வேண்டும்" என்றார் தூர்த்தர். "என்னிடமுள்ள ஒரு பொருளையே கேட்டது யான் பெற்றபேறு" என்று சொல்லி, மனைவியை அழைத்து, "உன்னை இந்த மெய்யடியார்க்குக் கொடுத்தேன்" என்று கூறினார். முதலில் சிறிது மனங்கலங்கி அம்மையார், தெளிந்து "தாங்கள் சொன்ன சொல்லைச் செய்யும் உரிமையன்றி வேறு எனக்குளதோ" என்று சொல்லி மாதவர் முன் சென்று பாதமலரைத் தொழுதார். இருவரும் புறப்பட்டனர். இயற்பகையாரின் சுற்றத்தார் அவர் செய்தது குலத்திற்குப் பெரும்பழி யென்று அவர்களைத் தடுத்தனர். தடுத்தவர்களை இயற்பகையார் வாள்கொண்டு வெட்டி வீழ்த்தி, அவ்விருவருடனும் துணையாகச் சென்றார். திருச்சாய்க்காடு அடைந்ததும் அடியார் இயற்பகையாரை மீண்டு போகும்படி சொன்னார். அப்படியே அவரும் திரும்பினார். அப்படி அவர் சென்ற பின் அடியார்,

இயற்பகை முனிவா ஓலம் ஈண்டுநீ வருவாய் [ஓலம்
அயற்பிலாதானே ஓலம் அன்பனே ஓலம் ஓலம்
செயற்கருஞ் செய்கை செய்த தீரனே ஓலம்

என்று ஓலமிட்டார். அவ்வோசை கேட்ட இயற்பகையார் "வந்தேன், வந்தேன்; குற்றம் செய்தவர் யாரேனும் உண்டாயின் என் வாளுக்கு இரையாவார்" என்று சொல்லிக் கொண்டே ஓடினார். அடியாரைக் காணவில்லை; மனைவியாரைக் கண்டார். வானத்தில் உமாதேவியாருடன் சிவபெருமான் இடபவாகனத்திலமர்ந்திருக்கும் காட்சியைக் கண்டார்; நிலத்தில் வீழ்ந்து தொழுதார்; எழுந்தார்.

சொல்லுவ தறியேன்வாழி தோற்றிய
தோற்றம் போற்றி
வல்லைவந் தருளிஎன்னை வழித்தொண்டு
கொண்டாய் போற்றி
எல்லையில் இன்பவெள்ளம் எனக்கருள்
செய்தாய் போற்றி
தில்லையம் பலத்துளாடும்
சேவடிபோற்றி என்ன

வெகுவாகப் போற்றி வணங்கினார். இறைவன், நாயனாருக்கும் அவர் மனைவியாருக்கும் வீடுபேறளித்தார். அவருடைய சுற்றத்தாரும் பேரின்பம் பெற்றனர். திருச்சாய்க்காடு இயற்பகையாரின் செயற்கருஞ் செயலுக்கு நிகழிடமாக இருந்தது. அவர், அவர் மனைவியார் இவ்விருவரின் திருவுருவங்கள் இக்கோயிலில் உள்ளன. (படம் பார்க்க). மார்கழி மாதத்தில் இந்நாயனாருக்கு ஐந்து நாட்கள் உற்வசம் நடைபெறுகிறது. உத்தர நட்சத்திரத்தில் காட்சி. தலபுராணத்தில் நாயனாரின் மனைவியார் கற்பினுக்கரசியார் என்ற பெயரால் குறிக்கப்படுகிறார்.

திருச்சாய்க்காட்டில் காளியம்மன் கோயில், சம்பாபதியம்மன் கோயில் முதலியனவும் இருக்கின்றன. சிவன்கோயிலுக்குத் தெற்கேயுள்ள சம்பாபதியம்மன் கோயில் சிலப்பதிகாரம், மணிமேகலை இவைகளில் கூறப்பட்டிருக்கும் கோயில் என்று சொல்கின்றனர். (சம்பாபதியம்மன் படம் காண்க) சிலப்பதிகாரத்தில் கூறப்பெற்றதுபோல சித்திரைப் பௌர்ணமியில் தொடங்கி இருபத்தெட்டு நாட்களுக்கு இந்திரவிழா நடைபெறுகிறது. இந்திரனுடைய உருவமும் கோயிலில் இருக்கிறது. (படம் பார்க்க).

சாயாவனேசுவரர் கோயிலிலுள்ள பதினொரு தமிழ்க் கல்வெட்டுக்களை அரசாங்கத்தார் படியெடுத்து 1911ஆம் ஆண்டில் பதிவு செய்திருக்கின்றனர். இராஜாதிராஜ வளநாட்டு நாங்கூர்நாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்துச் சாய்க்காடு என்றும், புகார் நகரச் சாயை என்றும் கல்வெட்டுக்கள் இவ்வூரைக் குறிக்கின்றன. இறைவன் பெயரை, "திருச்சாய்க்காடுடையார்" "சாயை நாயகர்" என்றும் அவை தெரிவிக்கின்றன. கல்வெட்டுக்களின் விவரம் பின்வருமாறு:—

(1) வடக்குப் பிரகாரச் சுவரிலுள்ளது; இராஜராஜசோழன் காலத்தியது. அம்மன்னனின் எட்டாவது ஆட்சி யாண்டில் பிடாரன் நாயகன் என்பவரின் வேண்டுகோளின்படி இராஜாதிராஜ வளநாட்டு நாங்கூர்நாட்டு காவிரிப்பூம்பட்டினத்துத் திருச்சாய்க்காடுடையார் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை அரசன் மீட்டு ஒரு நந்தவனத்திற்காகக் கொடுத்தான். அது முதல் அது 'இராஜராஜன் திருநந்தவனம்' என்றழைக்கப்பெற்றது. அப்போதிருந்த அரசாங்கச் செயலாளர் (திருமந்திர ஓலை நாயகம்) பண்டித சோழ மூவேந்த வேளானும், இன்னும் சில அரசாங்க அலுவலர்களும் கையெழுத்திட்டிருக்கின்றனர்.

(2) அதே சுவரில், சோழன் திரிபுவன வீரதேவனின் (கி. பி. 1178-1216) முப்பத்தைந்தாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு. பிள்ளை அம்பருடையார் காளிங்கராயர் ஆணையிட்ட வண்ணம் கோயில் பூசைக்கும் பழுது பார்த்தலுக்கும் நெல் வழங்கப் பெற்றது.

(3) அதே சுவரில், சோழன் இராஜராஜ தேவனின் ஐந்தாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு. இராஜாதிராஜ வளநாட்டு, திரு இந்தளூர் நாட்டு மருதமங்கலம் ஊரினரான மலைமேல் மருந்து என்ற வானவன் விழுப்பரையன் என்பார் திருச்சாய்க்காடுடையார் கோயிலில் முன்னமேயே ஏற்படுத்திய 1½ விளக்குடன் இன்னும் ½ விளக்கு எரிப்பதற்கு நிலம் வழங்கப்பட்டது.

(4) அதே சுவரில், திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டானின் பதினெட்டாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு. அரசனின் பதினேழாவது ஆட்சியாண்டு வரையில் கோயில் நிலக்குடிகள் உரிய தொகை கொடுக்காததால் வாணகோவரையன் வேண்டுகோளுக்கிணங்க அந்த நிலங்களைக் கோயிலுக்கு விற்றார்கள். அப்போதிருந்த அரசாங்கச் செயலாளர் இராஜநாராயண மூவேந்த வேளான்.

(5) அதே சுவரில், வீரராஜேந்திர சோழனின் ஐந்தாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு; சிதைந்துள்ளது. காவிரிப்பூம்பட்டினம், இராஜாதிராஜ வளநாட்டு நாங்கூர் நாட்டில் உள்ளதாகக் கூறுகிறது.

(6) வடக்குப் பிரகாரச் சுவரிலுள்ள சிதைந்துபோன கல்வெட்டு. சோழன் திரிபுவன வீரதேவனின் முப்பத்தைந்தாம் ஆட்சியாண்டில் செதுக்கப்பெற்றது. வல்லம் என்ற ஊர்த்தலைவனாகிய உத்தராபதிநாயகன் என்ற திருச்சாய்க்காட்டு வேளானிடம், கோயிலுக்கு நாள்தோறும் எட்டு சாயாவன நாழி மிளகு கொடுப்பதற்காகக் கோயில் நிலமும் வீடும் குத்தகைக்குக் கொடுக்கப்பெற்றது. வணிக மேம்பாடுடனிருந்த காவிரிப்பூம்பட்டினத்தில் 'சாயாவனநாழி' என்ற அளவை வழக்கிலிருந்தது போலும்.

(7) தெற்குப் பிரகாரச் சுவரில், பரகேசரிவர்மன் விக்கிரம சோழதேவன் (கி. பி. 1118–35) ஒன்பதாம் ஆட்சியாண்டில் பதிவு செய்யப்பெற்றது; சிதைந்துள்ளது. "பூமாலை மிடைந்து" என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியுடையது.

(8) அதே சுவரில், மூன்றும் குலோத்துங்க சோழனின் இருபத்தேழாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பெற்றது. அந்தணர்க்கு அரிசி வழங்குவதற்காக நிலம் அளித்ததைக் குறிக்கிறது.

(9) அதே சுவரில், விக்கிரமசோழதேவனின் ஐந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு. புகார் நகரத்துச் சாயாவனத்தில் ஐம்பது அந்தணர்களுக்கு உணவளிக்க ஒரு மடம் கட்டி அதற்காக அமைச்சர் முகுந்தயரதிபதி திருச்சிற்றம்பலவன் என்பார் நிலம் வழங்கினார்.

(10) அதே சுவரில் உள்ள ஒரு கல்வெட்டு சாயை நாயகர் கோயில் பூசைக்காக குணாகரர் என்பார் நிலம் வழங்கியதைக் கூறுகிறது.

# உத்தரமாயூரம்

(வள்ளலார் கோயில்)

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்

—திருவிளையாடற்புராணம்.

மாயூரம் என வழங்கும் திருமயிலாடுதுறை யென்ற பாடல்பெற்ற பதி காவிரியாற்றின் தென்கரையிலுள்ளது. வடகரையிலுள்ளது வள்ளலார் கோயில். ஆதலின் உத்தர மாயூரம் என்ற பெயர் ஏற்பட்டது. மாயூர நகர எல்லைக்குட்பட்டது. பொதுவாக மக்கள் இந்த பகுதியை வள்ளலார் கோயில் என்றே வழங்குகின்றனர். மாயூர நகர பஸ்கள் இவ்வழியாகச் செல்கின்றன. மாயூரம் இருப்புப்பாதை சந்திப்பிலிருந்து ஏறக்குறைய இரண்டு கல் தொலைவிலும், மாயூரம் டவுன் என்ற இருப்புப்பாதை நிலையத்திலிருந்து வடக்கே ஒரு கல் தூரத்திலும் இத்தலம் இருக்கிறது.

வள்ளலார் கோயில் சிறிய கோயிலாக இருப்பினும் நன்றாக வைக்கப்பட்டிருக்கிறது. தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமானது; அதன் மேற்பார்வையில் பூசை, திருவிழாக்கள், வழிபாடு முதலியவை நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன. கோயில் மேற்கு பார்த்த சந்நிதியுடையது; இரண்டு பிரகாரங்கள் உள்ளன. இரண்டாவது வாயிலின் மேலேதான் கோபுரம் இருக்கிறது. கோபுர வாயிலைக்கடந்து உள்ளே சென்றதும் தென்புறம் விநாயகர், சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர், சந்திரசேகரர் முதலியவர்களுடைய சந்நிதிகள் இருக்கின்றன. வடக்குப்பக்கம் கிழக்கு நோக்கி நாதசன்மன், அனவித்தை (இலிங்கங்கள்), சுப்பிரமணியர், கஜலட்சுமி இவர்களுடைய சந்நிதிகள் இருக்கின்றன. நாதசன்மன், அவன் மனைவி அனவித்தை என்ற இருவரும் துலாகாவிரியில் நீராடி முத்திபெற்றனர். அவர்கள் இலிங்க சொரூபமாக இங்குள்ளனர். வடக்குப் பிரகாரத்தில் தெற்கு பார்க்க அம்பிகையின் தனிக்கோயில் உள்ளது. அம்பாளின் திருநாமம் ஞானம்பிகை என்பது. மூலஸ்தானத்தில் இலிங்கமூர்த்தியாய் எழுந்தருளியிருப்பவர் வழிகாட்டும் வள்ளலார். வடமொழியில் வதான்யேசுவரர் என வழங்குவர். வடக்குப் பிரகாரத்தில் சண்டேசுவரர் சந்நிதியும், கிழக்குப் பிரகாரத்தில் பைரவர், சனீசுவரர், செவ்வாய் (அங்காரகன்), சூரியன், சந்திரன் இவர்களுடைய சந்நிதிகள் மேற்கு நோக்கியுள்ளன. தெற்குப்பிரகாரத்தில் தட்சிணாமூர்த்தி எழுந்தருளியுள்ளார். இத்தலத்தில் தனிச் சிறப்புடைய மூர்த்தியும் இவரே. யோகாசனத்தில் ஞான முத்திரைக் கையராய் வீற்றிருந்தருளுகிறார். ஏனைய தட்சிணாமூர்த்திகளைக் காட்டிலும் இவருக்குள்ள சிறப்பு என்னவென்றால் நந்தியெம்பெருமான்மீது ஆரோகணித்திருப்பது. இதைப்பற்றிய புராண வரலாற்றைப் பின்னர் காண்போம். கோயிலின் தெற்குப் பிரகாரத்தில் காசி விசுவநாதர் தனிக்கோயிலும் இருக்கிறது.

இத்தலத்தின் தீர்த்தம் ஞானமிர்தசரசு என்னும் திருக்குளம். கோயிலில் நாலுகால பூசை நிகழ்கிறது. ஐப்பசி மாதத்தில் 30 நாட்களும் உற்சவம் நடைபெறுகிறது. இருபது நாட்கள் சந்திரசேகரரும், பத்து நாட்கள் பஞ்சமூர்த்திகளும் புறப்படுகின்றனர். ஐப்பசி அமாவாசையில் பஞ்சமூர்த்திகளுடன் தட்சிணாமூர்த்தியும் கங்கையம்மனும் காவிரிக்கெழுந்தருளித் தீர்த்தம் கொடுப்பர். இக்கோயிலில் தட்சிணாமூர்த்திக்கு உற்சவர் உண்டு. தட்சிணாமூர்த்தியும் கங்கையம்மனும் கைலாசவாகனத்திலும் மகரவாகனத்திலும் எழுந்தருளுவர். வியாழக்கிழமை தோறும் தட்சிணாமூர்த்திக்கு சிறந்த வழிபாடு நடைபெறுகிறது. அந்நாளில் தங்கக்கவசம் சாத்

---

(11) அதே சுவரில், விக்கிரமசோழன் (கி. பி. 1118-35) மூன்றாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு. கங்கைகொண்ட சோழவரையன், திருச்சாய்க்காடுடையார் என்ற பெயர்களைக் குறிக்கிறது.

மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலுங்
கண்புகார் பிணியறியார் கற்றாருங் கேட்டாரும்
விண்புகா ரெனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டெந் தலைவன்தாள் ...

[சாய்க்காடு.

—திருஞானசம்பந்தர்.

தப்பெறுகிறது. மக்கள் திரளாக வந்து வணங்கி வழிபடுகின்றனர். கார்த்திகைக் கடைசி வியாழக்கிழமையன்று சிறந்த அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. பங்குனி மாதம் 1,2,3,4,5 தேதிகளில் சூரியனுடைய கதிர்கள் மூலஸ்தான இலிங்கத்தின் மேல் படுகின்றன.

இத்தலத்தைப்பற்றித் தனியாகத் தமிழ் நூல்கள் இல்லை. வடமொழியில் உத்தரமாயூர மகாத்மியம் என்ற நூல் ஒன்று இருக்கின்றது. அது இருபத்தெட்டு அத்தியாயங்களையுடையது. எட்டாவது அத்தியாயமான உபதேசம் அருளிச்செய்த அத்தியாயம் மிகச்சிறந்தது. இந்த அத்தியாயத்தில் காணப்படும் ஞானோபதேச வாக்கியங்கள் காந்தபுராணம் சூதசங்கிதை யக்ஞவைபவ காண்டம் 38-ஆவது அத்தியாயத்தில் உள்ள ஞானோபதேச வாக்கியங்களைப் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. உத்தரமாயூர மகாத்மியம் எட்டாவது அத்தியாயத்தை வடமொழிச் சுலோகங்களும், தமிழ் உரை நடைமொழி பெயர்ப்புடனும் ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம் வெளியிட்டிருக்கின்றது. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மாயூரத் தலபுராணத்தில் மேலே சொல்லப்பட்டதை மாயூரநாதர் நாற்றிசை வள்ளலான படலம், உத்தரமாயூரப்படலம், உபதேசப்படலம் என்ற மூன்றிலும் நன்கு விளக்கியுள்ளார்கள். ஆன்மாக்கள், மும்மலங்கள், இவைகளின் இயல்பு, மும்மலங்கள் ஆன்மாக்களை பந்தித்து நிற்பது, அந்த பந்தத்தை அறுக்கும் உபாயம், இறைவன் பேரருட் பெற்றி, முத்தியடைவதற்கு உபாயங்களான சட்சுதீட்சை, ஸ்பரிச தீட்சை, வாசகதீட்சை, ஞானதீட்சை, தாந்திரிகதீட்சை, யோகதீட்சை, அவுத்திரிக தீட்சை என்ற ஏழுவகை தீட்சைகள், அவுத்திரிகை திட்சையின் இரண்டு வகையான கிரியாவதி, ஞானவதி, அவற்றுள் ஒவ்வொன்றிலுமுள்ள சமயம், விசேடம், நிர்வாண தீட்சைகள், இறைவனை யடைவதற்குரிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு மார்க்கங்கள் இவைகளைப்பற்றியெல்லாம் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்.

தருமையாதீனம் 10-ஆவது குருமூர்த்திகளாக எழுந்தருளியிருந்த சிவஞானதேசிகர் பத்துப்பாடல்களையுடைய தட்சிணாமூர்த்தித்திருவருட்பா என்ற நூலை இயற்றியிருக்கின்றார். அந்த நூலை ஆதீனத்தார் அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனர். பத்தாவது செய்யுளில், இந்திர வாழ்வு வேண்டாம்; சித்திகள் முத்திக்கு வழியல்லாமையின் அவையும் வேண்டா; கல்வி செருக்கை உண்டாக்குவதால் அதையும் விரும்பவில்லை; பழவினையொழித்த அடியார்களின் திருவடிகளை எம் தலையிற் சூட்டவேண்டுவதே யாம் வேண்டுவது; அதற்குத் தடையாயிருக்கும் மும்மலங்களை உன் அருட்பார்வையால் அகற்றி எனக்குப் பேரின்ப வாழ்வு தந்தருளவேண்டும் என்று கூறியிருக்கிறார். அந்தப்பாடல் பின் வருவது :—

அண்டர்தொழும் இந்திராதி வாழ்வையும் விரும்
அட்டசித்தியும் விரும்பேன் [பிடேன்
அகிலகலை ஞானமும் விரும்பிடேன் உலகுபுகழ்
அரியகீர்த்தியும விரும்பேன்
பண்டைமலமெல்லா மொழித்துநின்னருள்பெற்ற
பழையவடி யார்க ளடியார்
பாததா மரைகளென் தலையின்மேல் வைத்தருட்
பார்வையா லிருள கற்றித்
தொண்டுசெய் தரியபர மானந்த வெள்ளந்
துதைந்துவினை யாடி யுலகந்
தோன்றும லிறுமாந் திருக்கின்ற பெருவாழ்வு
தொண்டனேன் வேண்டி னன்வண்(டு)
உண்டிடுங் கொன்றையணி யண்டர்நாயககயிலை
யுறைகின்ற பரதெய் வமே
ஒன்றாகி யானந்த வுருவாகி யென்னுயிர்க்
குயிரான பரம சிவமே.

இனி இத்தலபுராணவரலாற்றைப்பார்ப்போம். "கோபுரத்தைப் பொம்மை தாங்குவதுபோல்" என்ற பழமொழி ஒன்றுண்டு. கோபுரங்களில் அவைகளை முதுகில் தாங்குவதைப்போன்ற மனித உருவச்சுதைச் சிற்பங்களை நாம் பார்த்திருக்கிறோம். அந்த பொம்மைகள் என்ன நினைக்குமாம் தாங்களே அக்கோபுரத்தைத் தாங்கி நிற்பதாக. ஆனால் உண்மையில் அவை கோபுரத்தில் ஒட்டிக்கொண்டு இருப்பதை நினைப்பதில்லையாம். அதுபோல ஒரு நிகழ்ச்சி இடபதேவர் வரலாற்றில் உண்டு. தர்மமே இடப உருவாய் சிவபெருமானைத் தாங்கி நிற்பது. "உலகுக்கெல்லாம் ஆதாரமாயுள்ள இறைவரை நான் தாங்கி நிற்கிறேன். ஆதலின் எனக்கு நிகர் வேறு எவரும் இல்லை" என்று இறுமாப்புக் கொண்டார் இடபதேவர். எல்லாருடைய உள்ளத்திலும் குடிகொண்டுள்ள பரமசிவன் இதையறிந்தார். அவருக்கு அறிவு புகட்டத் திருவுளங்கொண்டு தன் சடாமுடியின் நுனியொன்றை எடுத்து இடபத்தின்மேல் வைத்

தார். அதன் சுமைக்கு ஆற்ருது வருந்தி வெட்கினுர் இடபதேவர். கர்வம் கொண்ட பாவம் நீங்க மாயூரத்தில் காவிரியில் நீராடி உத்தர மாயூரத்தில் தட்சிணுமூர்த்தியின் திருவுருவோடிருக்கும் தம்மை வழிபட வேண்டும் என்றும், அப்போது தாம் ஞானுபதேசம் செய்தருளுவோம் என்றும் இறைவன் பணித்தருளினுர். அவ்வாறே இடபதேவர் உத்தர மாயூரம் சென்று, விதிப்படி காவிரியில் நீராடி, வள்ளலாரை வழிபட்டு வருவராயினர். இறைவன் அவர் முன்னுல் தோன்றினுர். இடபதேவர் தட்சிணுமூர்த்தியின் பேரில் எட்டு சுலோகங்களைப் பாடித் துதித்தார். இறைவனும் "சிவதத்துவ விவேகம்" என்னும் ஞானத்தை அவருக்கு உபதேசித்தருளினுர். இடபதேவரும் காவிரியில் தன் பெயரால் தீர்த்தம் இருக்கவேண்டும் என்றும், ஐப்பசி அமாவாசையில் அதில் நீராடியவர் உலகத்திலுள்ள 66 கோடி தீர்த்தங்களில் முழுகிய பலனைப் பெறவேண்டும் என்றும் வரம்பெற்ருர். அதனுலேயே இப்போதும் மக்கள் நீராடும் காவிரித்துறைக்கு இடப தீர்த்தம் என்ற பெயர் வழங்குகிறது. காவிரியாற்றின் நடுவே நந்திமண்டபம் இருக்கிறது. எவ்வளவு பெரிய வெள்ளம் வந்தாலும் அந்த இடபத்தின் கொம்புகள் மூழ்குவதில்லையென்று கூறுகின்றனர். இடபதேவரும் தட்சிணுமூர்த்திக்கு வாகனமாகும் பேறும் இத்தலத்தில் பெற்ருர். இந்த நிலையை மாயூரத்தலபுராணத்தில் பிள்ளையவர்கள் "மலிதவப் பெருமைகாட்டி வயங்கிடு மற்ரேர் கூற்றில் பொலிதருசே மேற்கொண்டு தென்முகம் பொருந்த நோக்கி' என்று குறிப்பிடுகிருர். [சே—இடபம்]

காவிரி தீர்த்தத்தைப்பற்றி மற்றுமொரு புராண வரலாறுண்டு. கண்ணுவ முனிவர் கங்கையில் நீராடவிரும்பிக் காசியை நோக்கிச் செல்பவர் உத்தரமாயூரத்தை அடைந்தார். கரியமேனியுடைய ஒளியிழந்த மூன்று கன்னியர் இவரை வழிமறித்தனர். சண்டாளப் பெண்கள் என்று எண்ணி அகன்று போகும்படி சொன்னுர். அப்பெண்கள் தாங்கள் சண்டாளர்கள் அல்லரென்றும், கங்கை, யமுனை, சரசுவதியென்ற தேவ நதிகள் என்றும், பலகோடி மக்கள் தங்களிடம் பாவம்போக மூழ்கியதால் தங்களுடைய புனிதத்தன்மை கெட்டு இவ்விதமாக ஆகிவிட்டார்கள் என்றும், இத்தகைய தங்கள் பாவத்தைப் போக்கிக்கொள்ள காவிரியில் நீராடி வள்ளலாரை வழிபடப் போகிரேம் என்றும் கூறினர். அதைக் கேட்ட கண்ணுவ முனிவரும் வள்ளலார் கோயிலைச் சார்ந்த ஞான தீர்த்தக்கரையில் ஆசிரமம் ஏற்படுத்திக்கொண்டு, காசியில் சென்று கங்கையில் நீராடும் விருப்பத்தைவிட்டு காவிரியில் நீராடி வள்ளற் பெருமானை வழிபட்டுப்பேறு பெற்ருர்.

இடபதேவர் அருளிய தட்சிணுமூர்த்தி சுலோகங்களில் ஒன்றின் மொழிபெயர்ப்பு கீழே தரப்படுகிறது:—

"எண்ணுதற்கரிய குணமுடையவரும், காட்சி முதலிய பிரமாணங்களால் அறியவொண்ணுதவரும், உலகங்களைப் படைத்துக் காத்தழிக்கக் காரணமானவரும், யோகிகளின் உள்ளத்தில் குடிகொண்டவரும், முதல்வருமான தட்சிணுமூர்த்தியை இடையருது நான் துதிக்கின்றேன்."

மக்களாய்ப் பிறந்தார் அடையும் பெரும்பேறு முத்திப்பேறே. அதையடைய மெய்யுணர்வு வேண்டும். அதற்கு ஞானுசிரியன் வேண்டும். அந்த ஞானுசிரியனுக்கும் ஞானுசிரியராக விளங்குபவர் பரமசிவம். கல்லாலின் கீழிருந்து சனகாதி முனிவருக்கு ஞானத்தை உபதேசித்தனர். "ஓரால்நீழல் ஒண்கழல் இரண்டும் முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு ஒளிநெறி காட்டினை" என்பது சம்பந்தர் திருவாக்கு. குருமூர்த்தமான தட்சிணுமூர்த்தியாக எழுந்தருளிச் சிறந்து விளங்கும் தலம் உத்தமமாயூரம் என்ற வள்ளலார் கோயில்.

அன்ருல நீழற்கீ ழருமறைகள் தானருளி
நன்ருக வானவர் மாமுனிவர் நாடோறும்
நின்ருர ஏத்து நிறைகழலோன் புனைகொன்றைப்
பொன்றுரது பாடிநாம் பூவல்லி கொய்யாமோ

—திருவாசகம்.

---

**திண்டுக்கல் :** ஸ்ரீனிவாசப்பெருமாள் கோயில் பிரம்மோற்சவம் 30—3—62 முதல் 11—7—62 வரை நடைபெற்றது.

**சென்னை முத்தியாலுபேட்டை :** கச்சபேசப்பெருமாள் கோயிலில் ஜீர்ணேத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 8—7—62-ல் நடைபெற்றது.

# மலைநாட்டுத்திருப்பதியநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்]

மலைநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்றில் திருவாட்டாறும் திருவனந்தபுரமும் தவிர மற்றைப் பதினொரு திருப்பதிகள் அநுபவிக்கப்பட்டன. இப்போது திருவாட்டாற்றுத் திருப்பதியை யநுபவிக்க இழிகின்றோம். நம்மாழ்வாரொருவரே ஒரு பதிகம் பாடிய தலமிது. திருவாய்மொழி பத்தாம் பத்தில் ஆறுவதான "அருள்பெறுவா ரடியார்" என்று தொடங்கும் பதிகமே இத்தலத்தை மங்களாசாஸனம் செய்ததாகும். திருவாய்மொழியாயிரத்தினுள்ளும் இப்பதிகம் மிக மிகச் சுவைபொருந்தியதென்பது சொல்தொடையில்தானே விளங்கும். இப்பதிகத்தின் முடிவு பாசுரத்தில் ஆழ்வார் தாமே இதன் இனிமையை ஒருவாறு தெரிவித்துள்ளார். எங்ஙனேயென்னில்;

முடிவு பாசுரத்தில் பலன் சொல்லித் தலைக்கட்ட வேண்டியிருக்க, அதுசெய்யாதே,

"பாட்டாய தமிழ்மாலை ஆயிரத்துள்
இப்பத்துங் கேட்டு, ஆரார்
வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்லே"

என்று அருளிச்செய்துள்ளார். இதன் சீரிய பொருளைச் சிறிது விவரிப்போம் முன்னம். இவ்வுலகிலிருந்து விண்ணுடு சென்று சேர்ந்தவர்களை அங்குள்ள நித்தியஸூரிகளும் முக்தர்களும் வினவுவர்களாம், 'நீங்கள் மண்ணுலகில் எத்திசையினின்றும் வந்தீர்கள்?' என்று. 'நாங்கள் தென்திசையினின்றும் வந்தோம்' என்பர்களாமிவர்கள். அதற்கு மேல் 'தென்திசையில் ஏதேனும் விசேஷமுண்டோ?' என்று அவர்கள் கேட்க, 'உண்டு; திருக்குருகூரென்னுமூரில் நம்மாழ்வாரென்று ஒரு பரமபக்தர் திருவதரித்துத் திருவாய்மொழியென்று ஆயிரம் பாசுரங்கள் பாடியுள்ளார். அத்திருவாய்மொழியின் புகழ் வாசாமகோசரம், இதுவே விசேஷம்' என்று விடை கூறுவர்களாம். அதற்குமேல் அவர்கள் 'அத்திருவாய்மொழியை நீங்கள் ஓதியிருப்பதுண்டோ?' என்று கேட்க, 'நாங்கள் அதனை ஓதாவிடில் இங்கு வருதற்கு ப்ரஸக்தியேது? நன்றாக ஓதியிருக்கிறோம்' என்பர்களாம்; 'அப்படியாகில் அதிலிருந்து சில பாசுரங்கள் சொல்லிக்காணுங்கள், கேட்போம்' என்பர்களாம் அவர்கள். அப்போது *அருள் பெறுவாரடியாரென்னு மிப்பதிகத்திற்கு மேற்பட இனிமை மிக்க பதிகம் வேறொன்றில்லையாதலால் இவர்களுக்கு இப்பதிகத்தைச் சொல்லிக்காட்டுவோமென்று இப்பதிகந்தன்னை யெடுத்துப் பாடுவர்களாம். [செவிக்கினிய செஞ்சொல்லாகிய இப்பத்துங் கேட்டு வானவர்கள் ஆவார்] விண்ணுலகத்தவர்களான நித்யமுக்தர்கள் இப்பதிகத்தைக் கேட்டவாறே நெஞ்சுருகிக் கண்பனிப்ப நின்று 'இன்னுஞ் சொல்லுமின்' இன்னமுஞ் சொல்லுமின்' என்பர்களேயல்லது கேட்டவளவால் திருத்தி பெறார்களாம்.

இங்கு அன்பர்களுக்கு ஓர் அதிசயம் உணர்த்துவோம்; திருவாய்மொழியாயிரம் இன்னமும் முடிவு பெறவில்லை; இன்னும் நான்கு பதிகங்கள் மிச்சப்பட்டுள்ளன. அதற்குள்ளாகவே ஆழ்வார் திருவாய்மொழி முடிவு பெற்றதாகவும், அது உலகில் பரவிப் பரமபக்தர்களினால் ஓதப்பட்டதாகவும், ஓதினதின் பயனாக அவர்கள் விண்ணுலகெய்தியதாகவும், விண்ணுலகில் இதைப்பற்றிக் கேள்வி பிறந்ததாகவும், விண்ணவர்கள் இப்பதிகங் கேட்டு உள்ளம் பூரிப்பதாகவும் ஆழ்வார் அருளிச்செய்த விது.

'இங்ஙனே தவறாது நிகழும்' என்கிற உறுதி யுணர்ச்சியினாலாயது. தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலையைப் பாடிவிட்டு முடிவில் "இளையபுன் கவிதை" என்றார். இவ்வாழ்வார் அங்ஙனே பேசாமல் 'செவிக்கினிய செஞ்சொல்' என்றார். "பாலேய் தமிழரிசைகாரர் பத்தர் பரவுமாயிரம்" என்றும் "என்னாவிலின் கவி" என்று மருளிச் செய்தாரே கீழும்.

இனி இப்பதிகத்தினுள் இறங்குவோம். வியாக்கியான சக்ரவர்த்தியான நம்பிள்ளை இப்பதிகத்திற்கு அவதாரிகையிடத் தொடங்கும்போதே அருளிச்செய்வது காணீர்—

"பொய்ந்நின்ற ஞானந்தொடங்கி இவ்வளவும்வர எம்பெருமானை ஆழ்வார் நிர்ப்பந்தித்தபடி சொல்லிற்று; இது தொடங்கி ஆழ்வாரை எம்பெருமான் நிர்ப்பந்திக்கிறபடி சொல்லுகிறது" என்று. இதனைச் சிறிது விவரிப்போம்; பொய்ந்நின்ற ஞானமாவது நம்மாழ்வாருடைய பிரபந்தங்கள் நான்கினுள் முதற் பிரபந்தமாகிய திருவிருத்தத்தின் முதற் பாசுரம். அது முதலாக ஆழ்வார் எம்பெருமானை நோக்கி 'பிரானே! பிரகிருதி ஸம்பந்தத்தில் நின்றும் என்னை விடுவிக்கவேணும்' என்று நிர்ப்பந்தஞ் செய்து வந்தார்; இனி *முனியே நான்முகனே! என்னும் பதிகத்தளவும் எம்பெருமான் ஆழ்வார் பக்கலிலே யாசகனாய் நிற்கும்படி சொல்லுகிறதென்கை. இப்பதிகத்தின் மூன்றாம் பாட்டிலே "மண்ணுலகில் வளம் மிக்க வாட்டாற்றான் வந்து இன்று விண்ணுலகந்தருவானாய் விரைகின்றான். என்று அருளிச்செய்கையாலே ஆழ்வாரைப் பரமபதத்தேறக்கொண்டு போகையிலே எம்பெருமான் தான் விரைந்து 'ஆழ்வாரே! வாரீர் வாரீர்!' என்று வேண்டுகின்றமை தெரிகின்றதன்றோ.

அன்றியும் மற்றொரு விசேஷமு முள்ளது. ஆழ்வாருடைய இப்போதைய திருமேனியானது சரமசரீரமெனப்படுகின்றது; அதாவது இனிமேல் பிறவியில்லை யென்னும்படி வாய்த்த முடிவான சரீரமென்கை. இத்திருமேனியிலே ஞானமும் பத்தியும் நறுமணங்கமழ நிற்கையாலே இதில் தனக்குண்டான அன்பினால் எம்பெருமான் இவரைக் கொண்டுபோக விரைந்ததையுங்கூட மறந்து, இத்திருமேனியனுபவத்திலே மிகவும் சபலனாய் முன்பு ஆய்ச்சியரோடு குரவை கோத்த போது [ராஸக்ரீடை நிகழ்த்தியபோது] "அங்கநாமங்கநாம் அந்தரே மாதவ: மாதவம் மாதவஞ்சாந்தரேணங்கநா" என்னும்படி எண்ணிறந்த திருமேனிகளை யேற்றுக் கொண்டு அநுபவித்தாப்போலவும், நரகாசுரனைத் தொலைத்து, அவன் சிறையிலடைத்து வைத்த பதினாயிரங் கன்னிகளைக் கவர்ந்து கொண்டுபோய் த்வாரகாபுரியில் பதினாறாயிரந் திருமேனிகள் கொண்டு அநுபவித்தாப் போலவும் ஆழ்வாருடைய அவயவங்கள் தோறும் தனித்தனியே அநுபவிக்கைக்குப் பல பல திருமேனிகளை யேற்றுக்கொண்டு தன்னுடைய அளவிலாத காதலைக் காட்டி நின்றானெம்பெருமான்; அதனையறிந்த ஆழ்வார் 'இப்பெருமான் ஸர்வஜ்ஞனாயிருந்தும் வியாமோஹத்தின் வன்மையாலே நம்முடலில் தோஷங்களை யறிந்திலனே!' என்று வருந்தித் தம்முடைய தேஹத்தின் தோஷங்களை அவனுக்கு அறிவித்து அவனுடைய பிடிவாதத்தை மிக வருந்தி விடுவித்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

எம்பெருமானைப் பெறவேணுமென்று ஆழ்வார்க்கு விடாய் அதிகமா? ஆழ்வாரைப் பெறவேணுமென்று எம்பெருமானுக்கு விடாய் அதிகமா? என்று ஆராய்ந்து பார்க்குமளவில், ஆழ்வாருடைய விடாய் சிறிது. எம்பெருமானுடைய விடாய்தான் பெரிதுஎன்று சித்தாந்தம் செய்ய வேண்டியதாகிறது. இவ்விஷயம் ஏற்கெனவே திருக்காட்கரைப் பதிகத்தில் (9-6-30) "வாரிக்கொண்டுன்னை விழுங்குவன் காணிலென்று, ஆர்வுற்ற என்னை யொழிய என்னின் முன்னம் பார்த்துத், தானென்னை முற்றப்பருகினான்" என்னும் பாசுரத்தினால் ஆழ்வார் தம்மாலேயே வெளியிடப்பட்டுள்ளது.

எம்பெருமான் அப்படி பெருவிடாயனாயிருந்து வைத்தும் ஆழ்வாரைக்கொண்டு இவ்வுலகுக்கு "தொண்டர்க்கு அமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்னும்படியாக உணவளிக்க விரும்பியிருந்ததினால் தன்னுடைய விடாயை யடக்கிக்கொண்டு ஸமயமெதிர்பார்த்திருக்க வேண்டியதாயிற்று. அக்காரியமும் ஒருவாறு தலைக்கட்டு மளவானவாறே இனி எம்பெருமான் ஆறியிருக்கமாட்டானே. திருவாட்டாறென்னும் மலைநாட்டுத் திருப்பதியிலே தங்குவேட்டையாக வந்திருந்து ஆழ்வாரைக்கொண்டு போகையிலே மிக மிகப் பதறியிருந்தான். ஏன்? திருநாட்டிலே கொண்டுபோய் அநுபவிக்க வேணுமென்று என்ன நிர்ப்பந்தம்? இங்கேதான் அநுபவிக்கலாகாதோ வென்று சிலர் கேட்கக் கூடும். கேண்மின்;

"பாவியேனைப் பலநீ காட்டிப் படுப்பாயோ!" என்னும்படியான இவ்விருள் தருமாஞாலத்திலே இடையறாத அநுபவம் வாய்க்கமாட்டாதே; 'ஒரு இடையூறும் நேராதபடி ஏகாந்தமாயிருப்பதொரு தேச விசேஷத்திலே கொண்டுபோய் வைத்து அநுபவிக்கவேணும்' என்று பாரித்தானவன்.

அதுதானும் தன் மனம்போனபடியே செய்து போருகையல்லாமல் ஆழ்வாருடைய நியமனத்தைப்பெற்று அவரது திருவுள்ளக்கருத்தின்படியே செய்தோமாக வேணுமென்றும் விருப்பங்கொண்டான். இராமபிரானுடைய வனவாஸத்தில் எல்லா வடிமைகளையும் செய்யவேணுமென்று பாரித்து உடன்வந்த இலக்குமணன் "ஸ்வயம் துருசிரே தேசேக்ரியதாமிதி மாம்வத" என்று ஏவிக்கொள்ள வேணுமென்று வேண்டிக் கொண்டாப்போலே இங்கு எம்பெருமானும் ஆழ்வாரை நோக்கி 'ஆழ்வீர்! திருவுள்ளமானபடி என்னை ஏவிக்கொள்ளவேணும்' என்று பிரார்த்தியா நின்றான். அவன்றான் சுதந்திரனாயிருந்தாலும் அடியார் பக்கலிலே பரதந்திரனாயன்றோ விருப்பது.

ஆழ்வாரோ பாரதந்திரியத்தின் எல்லையிலே நிற்பவர். ஸர்வேச்வரனைத் தாம் நியமிக்க விரும்புவரோ? அவனோ கையும் அஞ்சலியுமாய் நின்று 'ஆழ்வீர்! நியமித்தருளீர், நியமித்தருளீர்' என்கிறான். ஆழ்வார்க்கோ நியமிக்க 'வாய் எழவில்லை. 'பராத்பரனாயிருந்து வைத்து இப்படி நம் பக்கலில் தாழ நிற்கிறானே! இதுவென்?' என்று அந்த சீல குணத்தை யநுபவிக்க இழிந்தாராழ்வார். அநுபவிக்குமிடத்து, கைவல்யாநுபவம் போலே தனியநுபவம் ரஸிக்கமாட்டாதாகையாலே நால்வரைவரோடே கூடி யநுபவிப்போமென்று நாட்டார் பக்கலிலே கண்வைத்தார். அவர்கள் தாம் உண்டியே உடையே உகந்தோடுவாராய் விஷயாந்தரங்களிலே மண்டிக்கிடந்தார்களாகையாலே அவர்களை விட்டுப் 'பரம ரஸிகனான ஸர்வேச்வரனோடே தான் கூடி இக்குணத்தை யநுபவிப்போமே' என்று அவன் மேலும் கண் செலுத்தினாராழ்வார். அவனோ ஆழ்வாரைக் கொண்டுபோகையிலே விரைந்திருப்பானொருவனாகையாலே அதிலே ஊற்றங்கொண்டிருந்து ஆழ்வாருடைய அநுபவத்திற்கு உசாத்துணையாகமாட்டிற்றிலன்.

இப்படி ஸம்ஸாரிகளும் துணையன்றிக்கே ஸர்வேச்வரனும் துணையன்றிக்கே யானவிடத்து என்செய்வதென்று பார்த்தார்; "யானும் மென்னெஞ்சு மிசைந்தொழிந்தோம்" என்று முன்னமே சொல்லியிருக்கிறாரே யாழ்வார்; தம்மோடு உடன்கேடான நெஞ்சிருக்க இனி என்ன குறையென்றுதேறி அந்த நெஞ்சோடே யநுபவிக்கிறார் 'நெஞ்சே! அவனுடைய மேன்மையிருந்தபடி கண்டாயே, அப்படி மேன்மையுடையவன் நம் பக்கல் இப்போது தாழ நிற்கும் நிலை கண்டாயே; நாம் பெற்ற பேற்றின் கனமிருந்தபடி கண்டாயே' என்று சொல்லிச் சொல்லி உள் குழைகிறார்.

எம்பெருமான் ஸர்வேச்வரனாய் ஸர்வநியாமகனாய் ஸ்வதந்திரனாயிருப்பானொருவன் என்று இதுவரை நினைத்திருந்தாராழ்வார்; அடியார்களுக்கு அடியானாயிருக்குமதுவே அவனுக்கு ஸ்வரூபமென்கிற உண்மையை இப்போதறிந்து இப்படியும் ஒரு ஸ்வபாவமிருப்பதே! என்று வியப்பும் உவப்பும் கொள்ளுகிறாராழ்வார். இனி பாசுரங்களை அடைவே அநுபவிப்போமாக.

1. அருள்பெறுவா ரடியார்தம் அடிய
 னேற்கு, ஆழியான்
அருள்தருவான் அமைகின்றான்
 அதுநமது விதிவகையே.
இருள்தருமா ஞாலத்துளினிப்
 பிறவியான் வேண்டேன்
மருளொழிநீ மடநெஞ்சே!
 வாட்டாற்றா னடிவணங்கே.

எம்பெருமானருளைப் பெறுவதையே நிரூபகமாகவுடைய பாகவதர்களுக்கு அடிமைப்பட்டிருக்குமெனக்கு, சக்கரபாணியான அப்பெருமான் அருள்புரிவானாகப் பொருந்தியிரா நின்றான்; அப்படி அருள்புரிவதும் தன் இஷ்டப்படியே யல்லாமல் நாம் விதித்தபடியே செய்வதாக. ஆன பின்பு இனி யொருநாளும் இவ்விருள் தருமாஞாலத்திற் பிறப்பை யான் விரும்பமாட்டேன். சபலமான மனமே! இங்கேயிருந்துகொண்டு அநுபவிக்க வேணுமென்கிற வொரு மருளுண்டே உனக்கு; அதனைத் தவிரப்பார்; திருவாட்டாற்றெம்பெருமானுடைய மனோரதத்தின் வழியே ஒழுகப்பார்—என்பது பதப்பொருள். இனி விசேஷார்த்தம் கேளீர்.

நெஞ்சே! எம்பெருமான் இன்று நமக்குப் பேரருள் செய்யக் குதூகலம் கொண்டிரா நின்றான்; அதுவும் நாம் விதித்தபடியே செய்யவேணுமென்று நம்முடைய கட்டளையை யெதிர்பாரா நின்றான்; அந்தோ! இஃது என்ன குணம்! இக்குணத்தை யநுபவிக்க இந்நிலவுலகில் ஆளில்லாமையாலே நாம் திருநாட்டிலேபோய் மூதுவரோடு கூடி

யநுபவிக்கலாமா? வருகிறாயா? என்று தம் திரு
வுள்ளத்தோடே உசாவுகிறாராழ்வார். இப்
பாட்டுக்கு இரண்டாமடியே உயிர் நிலையா
னது—ஆழியான் அருள் தருவானமைகின்றான்.
நெஞ்சே! கையும் திருவாழியுமான ஸர்வேச்
வரன் நம்மேல் முழு நோக்காக நோக்கிப்
பரமகிருபையைப் பண்ணுவானாகப் பாரிக்
கின்றான்; திருவாழியை ஒரு கண்ணாலே
பார்ப்பது, என்னை யொருகண்ணாலே பார்ப்ப
தாகா நின்றான். 'திருவாழியை விட்டா
லன்றோ உம்மை நான் விடுவது' என்னா நின்
றான். திருவாழி யாழ்வான் முதலான நித்ய
ஸூரிகள் பக்கலிலே பண்ணும் ப்ரேமத்தை
யெல்லாம் என்னொருவன் திறத்து ஒரு மடை
செய்து பண்ணா நின்றான்.

இங்ஙனே செய்வது ஆர் பக்கலிலே
யென்ன, அருள்பெறுவாரடியார் தம்அடியனேற்கு
என்கிறார். எம்பெருமான் இப்படிப்பட்ட
பேரருளைத் தம் பக்கலிலே செய்வதற்குக்கார
ணமும் காட்டிக்கொண்டு சொல்லுகிறபடி.
எம்பெருமானுடைய பேரருளுக்கு இலக்கா
யிருப்பார் சிலருண்டு, அவர்கள் நமக்கு
ஸ்வாமிகள்; அவர்கள் திறத்து அவன் பண்
ணினவருள் அவர்களளவிலே முடிந்திடாமல்
நம்வரையிலும் வெள்ளங் கோத்ததுகா
ணென்கிறார். நாம் அவன்றன்னையே பற்றி
யிருந்து அவனையே பார்த்திருந்தோமாகில்
இப்பேரருள் பெற முடியாதுகாண்; அவனரு
ளுக்கிலக்கான அடியார்களையே நாம் பற்
றினோமானது பற்றியே இப்பேரருளுக்கு
நாம் இலக்காக வேண்டிற்று என்கிறார். கீழ்
எட்டாம்பத்தின் முடிவில் நெடுமாற் கடி
மைப் பதிகம் பாடினதற்குப் பலன் இன்று
பெற்றோ மென்கிறார் போலும்.

'அவனோ அருள் தருவானாயிருந்தான்,
நீரோ அருளைப்பெற அவகாசம் பார்த்திருந்
தீர்; அது கிடைக்கிறபோது பெறவேண்டி
யதுதானே, பெற்றுக்கொள்ளும்; இதற்குத்
தடையென்ன? என்றது நெஞ்சு. அதற்கு
மேல் கூறுகிறாராழ்வார் அது நமது விதி
வகையே என்று. நெஞ்சே! அவன் வெறும்
அருளையே தருவானாயிருந்தால் அதை நான்
பெற்றுவிடமாட்டேனா? அவன் அருள் தருவ
தோடு நிற்கவில்லையே; 'இன்னின்னபடி
செய்யவேணுமென்று கட்டளையிடவேணும்'
என்னா நின்றானே; என்னுடைய கட்டளைக்கு
[விதி விலக்குகளுக்கு]த்தான் கட்டுப்பட்ட
வனாய், கட்டளையிட்டே யாகவேணுமென்று
வற்புறுத்துகின்றானே! இப்படியும் ஒரு
அநீதியுண்டோ வென்கிறார்.

விதி என்னுஞ் சொல்லுக்கு பாக்கியம்
என்கிற பொருளுமுண்டாதலால் "அது
நமது விதிவகையே" என்பதற்கு 'நம்முடைய
பாக்யாநுகுணமாக' என்று பொருள் கொண்
டார்களாம் ஸ்ரீராமாநுஜர்க்கு முன்புள்ள
ஆசிரியர்கள். "இங்கு விதியென்கிற சொல்
லுக்குக் கட்டளையென்னும் பொருளே
பொருத்தமானது" என்றருளிச் செய்தார்
ஸ்ரீராமாநுஜர். "அது நமது சொல்வகையே"
என்று பாசுரம் பணித்திருந்தாலும் இப்
பொருள் கிடைக்கும்; அங்ஙனன்றி விதி
வகையே என்றதில் ஒரு விசேஷமுண்டு; விதி
யைக் கடந்தால் பாபமுண்டாகுமாதலால்,
பாபம் நேராதபடி விதியைத் தலைக்கட்ட
வேணுமென்கிற ஆதாரத்தோடே எம்பெரு
மான் கைகூப்பி நின்றான் போலும்; அதை
அறிந்த ஆழ்வார் அதற்குப் பொருத்தமாக
"அது நமது விதிவகையே" என்றாராயிற்று.
"என்னைப் பரமபதத்திற்குக் கொண்டுபோ;
வழி முழுதும் குடைகளும் சாமரமும் தோர
ணமும் வாத்ய முழக்கமுமாக இருக்க
வேணும்; நீ கைப்பந்தம் பிடித்துக்கொண்டு
'ஸ்வாமி யெச்சரிக்கை' என்று சொல்லிக்
கொண்டு முன்னே செல்லவேணும், நடை
பாவாடை பரப்பவேணும், திருச்சின்னமும்
முழங்கவேணும்; திருவிருத்தம் விண்ணப்பம்
செய்வாரும் ஸ்தோத்ர ரத்னம்
சொல்லுவாரும் புடைசூழ வேணும்; இத்த
கைய ஏற்பாடுகள் நீ செய்யவேணும்; என்று
ஆழ்வார் திருவாக்கிலே விதிவாசகங்கள்
வெளிவர வேணுமென்று எம்பெருமான்
நிரீக்ஷிப்பதைத் தெரிவித்தவாறு,

[இருள்தருமா ஞாலத்துள்ளினிப் பிறவியான்
வேண்டேன்] இது ஆழ்வார் தம் திருவுள்ளத்
தோடே சொல்லுகிற வார்த்தை. கீழே
'ஆழியானருள்தருவா னமைகின்றான் அது
நமது விதிவகையே' என்று சொன்ன ஆழ்
வாரை நோக்கி நெஞ்சு கேட்டது—எம்பெரு
மானுடைய ஆசையிருக்கிற விதத்தைத்
தெரிந்துகொண்டேன்; நீர் அவனுடைய
ஆசையின்படியே ஒழுகுவதாயிருக்கிறீரா?
இங்கேயே குணாநுபவம் செய்வதாயிருக்கி
றீரா? என்று. அதற்கு ஆழ்வார் விடை கூறி
னார் அவன் வழியே போவதாகத்தானிருக்

இறேனென்று. அதற்கு நெஞ்சு சொல்லிற்று "வானுயரின்ப மெய்திலென்? மற்றை நரகமேயெய்திலென்" என்று சொன்னவரன்றோ நீர்; அங்குப் போனால் திருநாடு ஒன்றே; இங்கு "சீரார் திருவேங்கடமே திருக்கோவலூரே, மதிட்கச்சி யூரகமே பேரகமே, பேரா மருதிறுத்தான் வெள்ளறையே வெஃகாவே, பேராலி தண்கால் நறையூர் திருப்புலியூர், ஆராமஞ்சூழ்ந்த வரங்கம், கணமங்கைக் காரார்மணி நிறக்கண்ணனூர் விண்ணகரம், சீரார் கணபுரம் சேறை திருவழுந்தூர், காரார்குடந்தை கடிகை கடன்மல்லை, ஏரார் பொழில் சூழிடவெந்தை நீர்மலை, சீராரும் மாலிருஞ்சோலை திருமோகூர், பாரோர்புகழும் வதரி வடமதுரை யென்றிப்படி நூற்றெழு திருப்பதிகளை யநுபவிக்கலாமே; ஏரார் முயல்விட்டுக் காக்கைப்பின் போகவா நினைக்கிறீர்? என்று. அதற்குமேல் ஆழ்வார் சொல்லுகிறார். [இருள்தருமா ஞாலத்துளினிப் பிறவி யான்வேண்டேன்] நெஞ்சே! இந்நிலம் இருள்தருமாஞால மென்பதறியாயோ? நித்திய ஸூரிகள் தாமே இங்கு வந்தாலும் அவர்களையும் மருளச் செய்யுமதன்றோ இந்நிலம். நித்யஸூரிகளென்று என்ன? நித்ய ஸூரிநாதன் தானே வந்தாலும் அங்ஙனே யன்றோ? பத்தர்களில் தலைவனாகப் புகழப்பட்ட பிரகலாதனையுமன்றோ மருளப்பண்ணிற்று இந்நிலம். இருக்கவிருக்க அகவிருளை வளர்ப்பதான இந்நிலத்திலிருப்பதை இனி யான் வேண்டேன்.

"இருள் தருமா ஞாலத்துளினியிருக்க யான் வேண்டேன்" என்னாதே 'இனிப்பிறவி யான் வேண்டேன்' என்றதில் ஒரு மருமமுண்டு. அதாவது, "க்ருதாதிஷு ப்ரஜா ராஜந்! கலௌ இச்சந்தி ஸம்பவம்" என்று ஸ்ரீ பாகவதத்திற் கூறியபடி க்ருத யுகத்திலேயே ஜனித்திருந்தவிவர் கலியுகத்தளவும் மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்துகொண்டேயிருக்கவேணுமென்று உத்தேசித்து இதுகாறும் பிறந்து வந்தார். அங்ஙனம் பிறந்து போந்த காரியம் தலைக்கட்டிற்று; அதாவது திருவாய்மொழி பாடியாயிற்று.

உத்தேசித்த காரியம் நிறைவேறியான பின்பு இனிப் பிறக்க விரும்பமாட்டேனென்கை.

மருளொழி நீ மடநெஞ்சே! என்றது-இங்குள்ள திவ்விய தேசங்களில் விருப்பத்தின் மிகுதியினால் இவ்வுலகைவிட்டுப் போகலாகாதென்று சில சமயங்களில் தமக்கும் ஒரு நினைவு தோன்றுவதுண்டு; அதை இப்போது மருளென்று முடிவு செய்கிறபடி. வாட்டாற்றானடி வணங்கே என்றது திருவாட்டாற்றைச் சேவித்துக்கொண்டு இங்கேயேயிரு என்றபடியன்று; அப்பெருமானுடைய திருவுள்ளத்தின்படியே ஒழுகப்பார் என்றவாறு....

(தொடரும்)

## ஆடிப்பூர பெருவிழா

| | | | |
|---|---|---|---|
| சென்னை வன்னிய தேனாம்பேட்டை | — ஆலையம்மன் கோயில் | 20-7-62 முதல் | 5-8-62 |
| சென்னை | — அருணாசலேசுவரர் கோயில் | 24-7-62 முதல் | 4-8-62 |
| திருத்தணி | — சுப்பிரமணியசுவாமி கோயில் | 24-7-62 முதல் | 28-7-62 |
| ஸ்ரீ வில்லிபுத்தூர் | — நாச்சியார் கோயில் | 24-7-62 முதல் | 5-8-62 |
| நாகப்பட்டினம் | — காயாரோகணசுவாமி நீலாயதாட்சியம்மன் கோயில் | 24-7-62 முதல் | 5-8-62 |
| நாகப்பட்டினம் | — சௌந்தரராஜப்பெருமாள் கோயில் | 25-7-62 முதல் | 4-8-62 |
| திருவாஞ்சியம் | — வாஞ்சிநாதர் கோயில் | 24-7-62 முதல் | 3-8-62 |
| சேலம்-அம்மாபேட்டை | — செங்குந்தர் மாரியம்மன் கோயில் | 24-7-62 முதல் | 13-8-62 |
| சேலம் செவ்வாய்ப்பேட்டை | — மாரியம்மன் கோயில் | 24-7-62 முதல் | 14-8-62 |

# திருமாணிகுழி வாமனபுரீஸ்வரர் கோயில் கல்வெட்டு வரலாறு

[வித்துவான் திரு. வை சுந்தரேசவாண்டையார், திருவையாறு]

திருமாணிகுழி என்பது நடுநாட்டுத் தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்றாகும். இது தென்னார்க்காடு ஜில்லா, கூடலூர்த் தாலூகாவில் திருப்பாதிரிப்புலியூர்க்கு அருகில் இருக்கிறது. இத்திருக்கோயிலில் சோழ மன்னர்களில், முதற் குலோத்துங்க சோழன், விக்கிரமசோழன், இரண்டாங் குலோத்துங்கன், மூன்றாங்குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன், வீரராசேந்திர தேவன் இவர்கள் காலங்களிலும், பாண்டிய மன்னரில் திரிபுவனச் சக்கரவர்த்தி விக்கிரம பாண்டியன், கோனேரின்மை கொண்டான், இவர்கள் காலங்களிலும் செதுக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

## இறைவரின் திருப்பெயர்

இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவர் திருமாணிகுழி மகாதேவர், உதவித்திருமாணிகுழி ஆளுடையார், உதவித் திருமாணிகுழி உடைய நாயனார் என்னும் திருப்பெயர்களால் அழைக்கப் பெற்றுள்ளனர்.

## இறைவியாரின் திருப்பெயர்

இறைவியார் பெரிய நாச்சியார் என்னும் திருப்பெயரால் கூறப்பெற்றுள்ளனர். இச்செய்தி "ஸ்வஸ்திஸ்ரீ இராஜராஜ தேவர்க்கு யாண்டு ஐந்தாவது திருமாணிகுழி ஆளுடையார் கோயிலில் திருக்காமக் கோட்டத்து பெரிய நாச்சியார்க்கு" என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியக்கிடக்கின்றது.

## காழி நாடுடையார் திருமடம்

காழி நாடுடையார் என்பது திருஞான சம்பந்தப் பெருந்தகையாரின் திருப்பெயராகும். இவர் பெயரால் இத்திருமாணிகுழி உடையார் கோயில் திருமடைவிளாகத்தில் ஒருமடம் இருந்தது. இச்செய்தி "இவ்வூர் உதவித் திருமாணிகுழி மகாதேவர் திருமடைவிளாகத்து ஸ்ரீ காழி நாடுடையார் திருமடத்துக்கு இறையிலிமடப்புறமாக திருமாணிகுழி ஆளுடையார் மூலப்பிரத்தியாராகிய ஆதி சண்டேஸ்வர தேவர் திருநாமத்தாலே" —என்னும் முதற் குலோத்துங்க சோழனது 49—ஆம் ஆண்டுக் கல்வெட்டால் அறியக் கிடக்கின்றது.

## எழுந்தருளுவித்த திருமேனி

இத்திருக்கோயிலில் விக்கிரம சோழீஸ்வரமுடையாரை எழுந்தருளுவிக்கப்பெற்று அவர்க்கு வேண்டும் நிவந்தங்களுக்கு, இராஜராஜ வளநாட்டு வானவன் மாதேவிபுரமான குலோத்துங்கசோழ நல்லூரில், வானவன் மாதேவி வதிக்குக் கிழக்கு அரும்போந்தை வாய்க்காலுக்குத் தெற்கு, மானகாந்த ஓடைக்கு மேற்கு, இராசேந்திர சோழ வாய்க்காலுக்கு வடக்கு, இந்நடுவுட்பட்ட நிலத்தில் திருமாணிகுழி தேவர்க்கு முன்பு ஊர்கீழ் இறையிலியாய் வருகிற நிலம் நீக்கி நின்ற நிலத்தில் ஆறு வேலி நிலத்தை இறையிலியாக இடப்பெற்றுள்ளது. இவ்வாறு இடும்படித் திருவாய்மலர்ந்தருளியவர் விக்கிரமசோழ தேவர் ஆவர். இவர் இவ்வாறு இடும்படித் திருவாய்மலர்ந்த பொழுது எழுந்தருளிய இடம், பெரும்பற்றப்புலியூர்க் கோயிலினுள்ளால் தியாகசமுத்திரக் கூடத்துப் பள்ளிச்சொட்டை சோழகோன் ஆகும்.

## விஸ்வேஸ்வர தேவர்

திருமாணிகுழி உடையார் கோயிலில் எழுந்தருளியிருக்கும் திருமேனிகளில் விஸ்வேஸ்வர தேவரும் ஒருவர் ஆவர். இச்செய்தி மூன்றாங் குலோத்துங்கசோழ தேவரின் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது. இம்மூன்றாங் குலோத்துங்கசோழ தேவரின் திருமேனி கல்யாணத் திருமேனியாக, இந்த விசுவேஸ்வர தேவர்க்கு, இராஜராஜ வளநாட்டு பட்டான்பாக்க நாட்டுச்சோழ குலவல்லி நல்லூரார் தங்கள் ஊரில் சோழ குலவல்லி வதிக்கு மேற்கு, முடிகொண்டசோழ வாய்க்காலுக்குத் தெற்கு, ஆறுங்கண்ணாற்று

நாலாஞ்சதிரத்து ஓடைக்குத் தெற்குப்பட்ட நிலத்துப் பாலையூர் எல்லையுற்ற துண்டத்து மேற்கடைய, ஊர் பொதுவான நிலம் நாலு மாவைத் திருநாமத்துக் காணியாகக் கொடுத்துள்ளனர். இக்கல்வெட்டு இந்த விஸ்வேஸ்வர தேவர் கோயில் திருமாளிகையில் வெட்டப்பட்டுள்ளது.

## தில்லைநகர் சோழர் முடிசூட்டிக் கொள்ளும் தலங்களுள் ஒன்று

சோழமன்னர்கள் தில்லைச் சிற்றம்பலத்து இறைவரைக் குலதெய்வமாகக் கொண்டவர்கள். இவர்கள் முடி சூட்டிக் கொள்ளும் பதிகள் ஐந்து எனச் சேக்கிழார் சண்டேசுவர நாயனார் புராணம் எட்டாஞ் செய்யுளில் கூறியுள்ளார். அவைகளுள் தில்லைத் திருநகரும் ஒன்றாகும். இதற்கு ஏற்ப இரண்டாங் குலோத்துங்க சோழன் இத் தில்லை நகரில் திருமுடி சூட்டிக்கொண்டவன் ஆவன். இச்செய்தியை "ஸ்வஸ்தி ஸ்ரீ கோராஜ கேஸரி பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் தில்லைத் திருநகர் சிறப்புடைத்தாகத் திருமுடி சூடிய ஸ்ரீ குலோத்துங்கசோழ தேவர்க்கு யாண்டு எட்டாவது"—என்று தொடங்கும் கல்வெட்டுப் பகுதி தெரிவிக்கின்றது. இவ்வழக்கம் சோழர்குலத் தோன்றல்களுக்கு இன்றும் தில்லையில் நடைபெற்று வருகின்றது. முடியை எடுத்துக்கொடுப்பவர் சிதம்பரம் நாட்டுப்பிள்ளைத் தெருவில் வதிந்துவந்த வேளாளப் பெருமகனாராகிய நாட்டுத் தேவராயப்பிள்ளை குடும்பத்தினர் ஆவர். அப்பரம்பரையில் ஆண் சந்ததி இன்மையால், முடியை எடுத்துக் கொடுப்பாரின்றி, தில்லைவாழ் அந்தணர்களே எடுத்துச் சூட்டுவிக்கின்றனர். சோழர்குலத் தோன்றலாய், சிதம்பரம் தாலூகா பிச்சவரம் பாளையக்காரர் என்று அழைக்கப்பெறும் ஆங்கில அறிவு சான்ற இராஜஸ்ரீ ஆண்டியப்ப சோழர் அவர்களுக்குச் சில ஆண்டுகளுக்கு முன் சிதம்பரம் ஆயிரக்கால் மண்டபத்தில் முடிசூட்டு விழா நடந்தேறியதை அனைவரும் அறிவர். இங்ஙனம் தில்லைவாழ் அந்தணர்கள் சோழர்குலத் தோன்றல்களுக்கு முடிசூட்டுவிக்கும் வழக்கம் உண்டு என்பதை, சேக்கிழார் சுவாமிகள் கூற்றுவநாயனார் புராணம், 3-ஆம் செய்யுளில்,

"மல்லல் ஞாலம் புரக்கின்றார் மணிமா
மவுலி புனைவதற்குத்
தில்லை வாழந் தணர்தம்மை வேண்ட
அவரும் செம்பியர்தம்
தொல்லை நீடுங் குலமுதலோர்க் கன்றிச்
சூட்டோம் முடிஎன்று
நல்கா ராகிச் சேரலன்றன் மலைநா
டணைய நண்ணுவார்"

என்று அருளியுள்ளார்கள்.

## பொதுச் செய்திகள்

முதற்குலோத்துங்க சோழனின் முப்பத்தைந்தாம் ஆண்டுக் கல்வெட்டில், இக்கோயிலில் உள்ள சூரியதேவர், க்ஷேத்திரபால தேவர் இவர்களைப்பற்றிய குறிப்புக்கள் உள்ளன. இக்கோயிலில் உள்ள குலோத்துங்க சோழரின் மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டில் "இத்தன்மம் அழிப்பார் திருவாணை. திரிபுவன முழுதுடையார் ஆணை. திருவிரையாக் கலி. இத்தன்மம் அழிப்பான் வல்லவரையன் சத்தியம். வாதாவிகளுக்கு பிழைத்தவராவர். இது பன்மாகேஸ்வர ரக்ஷை"-என்னும் காப்புரைகள் குறிக்கப்பெற்றுள்ளன.

இவைகளுள் திருவிரையாக்கலி என்பது சிவபெருமானின் ஆணையாகும். திருப்புறம்பயம் ஸ்ரீ சாட்சிநாதர் கோயில் மகாமண்டபத்தில் வாசல்படிக்கு வட பக்கத்தில் உள்ள கல்வெட்டொன்று "திருவிரையாக் கலி என்னும் ஆணையும்" என்று குறிப்பிடுவது இதை வலியுறுத்தும்.

திருமாணிகுழி என்னும் இவ்வூர் நடுவில் மண்டலத்து இராசராச வளநாட்டு, பட்டான் பாக்கை நாட்டில் உள்ளது என்று திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் என்னும் பாண்டியனது கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இவ்வூர்க்கு அண்மையில் உள்ள சோழகுலவல்லி நல்லூர் என்னும் ஊரை, நடுவில் நாடான பட்டான் பாக்கை நாட்டுச் சோழகுலவல்லி நல்லூர் என்று மூன்றாங்குலோத்துங்க சோழனின் 21-ஆம் ஆண்டுக் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. இங்கே நடுவில் மண்டலம் (அல்லது) நடுநாடு என்பது சோழவள நாட்டிற்கும், தொண்டை மண்டலத்துக்கும் இடைப்பட்ட நாடு என்னும் பொருளில் உள்ளது. எனவே, நடுநாடு என்னும் பெயர் வழக்கு பழமையானது என்பது பெறப்படுகின்றது.

இத்திருமாணிகுழி உடையார்க்குத்தேவ தானமாக விடப்பட்ட நிலங்களில் பசானம், நவிரை, புன்பயிறு, கார், சித்திரைக்கார், கமுகு, கரும்பு, இலைக்கொடி இவைகள் பயிர்செய்யப்பட்டு வந்தன.

இக்கோயில் கல்வெட்டொன்றில் (விக்கிரம பாண்டியன் கல்வெட்டு) அக்காலத்திருந்த வரிவகைகள் குறிப்பிடப்பெற்றுள்ளன. அவை—காசுகடமை, வெட்டி, நிலையாள், கார்த்திகைப் பொன்வரி, பணிக்கொத்து, பாடிகாவல், ஊர்க்கணக்குப்பேறு, காரியப்பேறு, காணியாள்பேறு, ஓலை எழுத்து, வாசல் விநியோகம், துலாபாரவரி, கூற்றிலக்கை, கடைக்கூட்டிலக்கை, தண்டல் இலக்கை, விடைப்பேர், மாதப்படி என்பன.

திரிபுவனச்சக்கரவர்த்தி விக்கிரமபாண்டியன், திருமாணிகுழி உடைய நாயனார்க்குத் தம் பேரால் கட்டின விக்கிரமபாண்டியன் சந்திக்கும், ஆனி மாதத்தில் தாம் பிறந்த நாளில் தீர்த்தம் பிரசாதிக்க எழுந்தருளுகிற விக்கிரம பாண்டியன் திருநாளுக்கும் அமுதுபடி, சாத்துப்படி உள்ளிட்ட நித்த நிவந்தங்களுக்கு எய்தனூர், கழுதைபட்டு இவ்வூர்களில் நாற்பதுமா நிலங்களை இறையிலி தேவதானமாகக் கொடுத்துள்ளான். இரண்டாங் குலோத்துங்க சோழன் உதவித் திருமாணிகுழி உடைய நாயனார் கோயில் தானத்தார்க்கு, மகனார் திருநட்சத்திரமான உத்திரட்டாதிநாள் தீர்த்தம் பிரசாதிக்க எழுந்தருளுகிற சித்திரைத் திருநாளுக்கும், விக்கிரமசோழன் சந்திக்கும் அமுதுபடி சாத்துபடி உள்ளிட்டு வேண்டும் நித்த நிவந்தங்களுக்கு, இராசராச வளநாட்டு மேற்காநாட்டு தியாகவல்லிச் சருப்பேதி மங்கலத்து மேல்பிடாகை ஆலைப்பாக்கத்து வேறு பிரிந்த எதிரிலிசோழ நல்லூரில் ஊருணிவாய்க்காலுக்கு வடக்கு, நத்தம் மேல் ஆசறுதிக்குக் கிழக்கு, நாரை காற்கழிக்கு மேற்கு, குறைக்காட்டு எல்லை தென்னுசறுதிக்குத் தெற்கு இந்த நான்கெல்லைக்குட்பட்ட நிலம் அறுபத்திரண்டு மாவை இறையிலி திருநாமத்துக் காணியாகக் கொடுத்துள்ளான்.

குறிப்பு:—இதை உணர்த்தும் கல்வெட்டில், "இராசராச வளநாட்டு மேற்கா நாட்டு தியாகவல்லிச் சருப்பேதி மங்கலத்துமேல் பிடாகை ஆலைப்பாக்கத்து வேறு பிரிந்த எதிரிலி சோழநல்லூர் என்று நம் பேரால் வேறு பிரிந்த ஊருணிவாய்க்காலுக்கு வடக்கு"—என வருவதால் இரண்டாங் குலோத்துங்க சோழனுக்கு எதிரிலிசோழன் என்ற பெயர் உண்டென்றும் பெறப்படுகிறது. கோனேரின்மைகொண்டான் என்னும் பாண்டியன் திருமாணிகுழி ஆளுடைய நாயனார் கோயில் தானத்தார்க்குத் தம் பேரால் கட்டின இராசாக்கள் நாயன் சந்திக்கும், இராசாக்கள் நாயன் திருநாளைக்கும், தேவர்கள் திருநாளைக்கும், அமுதுபடி, சாத்துப்படி உள்ளிட்டு வேண்டும் நிவந்தங்களுக்கு நிவந்தம் விட்டிருந்தான். இவைகளன்றி, மோகன் ஆட்கொல்லியான குலோத்துங்கசோழ காடவராயன் திருப்படிமாற்றுக்கும், திருவிளக்குக்கும், திருப்பணிகளுக்கும் நிவந்தம் அளித்திருந்தான்.

## திருமாணிகுழியைத் தன்னகத்துக் கொண்டுள்ள நாடு

முதற் குலோத்துங்கன், விக்கிரம சோழன் இவர்கள் காலங்களில் விருதராஜ பயங்கர வளநாட்டு மேற்கா நாட்டுக்கு உட்பட்டிருந்தது. மூன்றாங் குலோத்துங்க சோழன் காலத்துக் கல்வெட்டு இவ்வூரை இராஜராஜ வளநாட்டு மேற்கா நாட்டுத் திருமாணிகுழி என்று குறிப்பிடுகின்றது. எனவே, விருதராச பயங்கர வளநாடு என்பது, காவிரியாற்றுக்கும், கெடில நதிக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பு ஆகும் என்பது பெறப்படுகின்றது.

---

**சென்னை-வன்னியதேனம்பேட்டை :** பர்வதவர்த்தினிஅம்பாள் கோயிலில் சகரஸ்நாம குங்கும லட்சார்ச்சனை 16-7-62 முதல் 16-8-62 வரை நடைபெறும்.

**திருப்பழையாறை :** சோமநாதசுவாமி கோயிலில் 23-7-62-ல் மண்டலாபிஷேக பூர்த்தியும் இலட்சார்ச்சனை பூர்த்தியும் நடைபெற்றன.

**தாயமங்கலம் :** முத்துமாரியம்மன் கோயிலில் முத்துமாரியம்மன் பிரதிஷ்டையும் விமானம் புதுப்பித்ததையும் ஒட்டி 13-7-62-ல் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

# ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

*

| | | |
|---|---|---|
| 4—7—62 | சுப்பிரமணியசுவாமி கோயில் திருப்பரங்குன்றம், மதுரை | திருமண மன்றம், ஓய்வு விடுதிக்கு அடிக்கற்கள் நாட்டு விழாவில் தலைமைவகித்தல். |
| 4—7—62 | திருவேடகநாதசுவாமிகோயில், திருவேடகம் | திருப்பாசுர ஏடு வைகையாற்றில் எதிரேறிய விழாவில் கலந்து கொள்ளல் |
| 5—7—62 | நாகநாதசுவாமி கோயில், நயினார் கோயில் | யாத்ரீகர்கள் விடுதி, பரிசாரகர்கள் விடுதிக்கு அடிக்கற்கள் நாட்டுதல் |
| 6—7—62 | ஆதிரெத்னேசுவரர் கோயில், திருவாடானை | வாரவழிபாட்டு விழாவைத் துவக்கி வைத்தல் |
| 7—7—62 | சுவர்ணகாளிசுவரர் கோயில், காளையார் கோயில் | நூற்றுக்கால் மண்டபம் திருப்பணி தொடக்கவிழாவை ஆரம்பித்தல். |
| 7—7—62 | விசுவநாதசுவாமி கோயில், சிவகங்கை | மாணிக்கவாசகர் விழாவில் கலந்து கொள்ளல் |
| 8—7—62 | சௌமியநாராயணப்பெருமாள்கோயில், திருக்கோட்டியூர் | மண்டபத்திருப்பணி தொடக்க விழாவைத் துவக்கி வைத்தல் |
| 8—7—62 | கல்யாணசுந்தரேசுவரர் கோயில் மேலூர், மதுரை | கும்பாபிஷேக விழாவில் கலந்து கொள்ளல் |
| 8—7—62 | கொடுங்குன்றநாதர் கோயில், பிரான் மலை | கல்வெட்டுக்களைத் திறத்தல், உயர்நிலைப் பள்ளியில் சமயப் பயிற்சி வகுப்பைத் துவக்கி வைத்தல் |
| 22—7—62 | சுப்பிரமணிய சுவாமி கோயில் திருத்தணி | தேவஸ்தான ஓய்வு விடுதியை துவக்கிவைத்தல் |
| 27—7—62 | மாயூரம் தருமையாதீனம் குமரகட்டளை தேவஸ்தானம் | மாயூரம் பெரிய கோயில் சந்நிதித் தெருவில் விடுதிக்கட்டடத்திற்கு அடிப்படைக்கல் நாட்டுதல் |
| 28—7—62 | சுவேதாரண்யேசுவரசுவாமி கோயில், திருவெண்காடு | தேவஸ்தான பெண்கள் உயர் நிலைப்பள்ளி ஆரம்பவிழாவில் தலைமைவகித்து மாணவிகளுக்கு இலவசமாக பாடபுத்தகங்கள் வழங்குதல் |

# செய்திகள்

தஞ்சை வட்டம், கொள்ளிட நதியின் தென்கரையில் அமைந்துள்ள திருக்கானூர் கரும்பேசுவரர் கோயிலில் அரசாங்க மான்யம் ரூ. 8,000, பொது மக்கள் நன்கொடை ரூ 12,000-மும் கொண்டு திருப்பணி இனிது முடிக்கப்பெற்றது. ஆவணித்திங்கள் 17-ம் நாள் (2—9—62) குடமுழுக்குப் பெருவிழா நடைபெறவிருக்கிறது. மேலும் சில திருப்பணிகள் செய்ய வேண்டியுளதால் அன்பர்கள் தங்களின் பொருளுதவியைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஸ்ரீ கரும்பேசுரசுவாமி கோயில் திருக்கானூர்
தஞ்சைமாவட்டம். } நிர்வாக அதிகாரி.

---

திருவெண்காடு:—சுவேதாரண்யேசுவர சுவாமி கோயில் நிர்வாகத்தின் கீழ் துவங்கியுள்ள பெண்கள் உயர்நிலைப்பள்ளியை அறநிலையத்துறை ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார், B A , B.L. அவர்கள் தலைமையில் சென்னை மாநில கல்வி அதிகாரி பத்மஸ்ரீ திரு. N. D. சுந்தரவடிவேலு M.A., L.T. அவர்கள் 28-7-62 சனிக்கிழமை மாலை 4-மணிக்கு ஆரம்பித்து வைத்தார்கள். கோயிலால் அன்பளிப்பாகக் கொடுக்கப்படும் புத்தகங்களை ஆணையர் அவர்கள் மாணவிகளுக்கு வழங்கினார்கள்.

முள்ளிப்பள்ளம்:—வரதராஜப்பெருமாள் கோயிலில் அஷ்டபந்தன மகா சம்புரோட்சனம் 9—7—62 ல் நடைபெற்றது.

திருவாதவூர்:—மாணிக்கவாசகர் கோயிலில் மாணிக்கவாசகப் பெருமான் திருநட்சத்திரமாகிய ஆனிமக நன்னாளாகிய 6—7—62 ல் மாணிக்கவாசகருக்குச் சிறந்த ஆராதனையும், சொற்பொழிவும், இசைச்சொற்பொழிவும் நடைபெற்றன. கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்ற அவ்வூர் போர்டு உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

நாகப்பட்டினம்:—சௌந்தரராஜப் பெருமாள் கோயிலில் உள்ள சௌந்தர்யவல்லித் தாயாருக்கு பிரம்மோற்சவம் 29—6—62 முதல் 10—7—62 வரை நடைபெற்றது.

சென்னை:—சைவசித்தாந்த சாத்திர வகுப்பு தியாகராயநகர் தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில் 12,13,14,15—7—62 தேதிகளில் திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியார் அவர்களால் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் வகுப்பு நடத்தப்பெற்றது. 29-7-62 ல் எழும்பூரிலுள்ள மினர்வாகூடத்தில் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ , எல்.டி., அவர்களால் 'கொடிக்கவி' வகுப்பு நடைபெற்றது. அடுத்த நாள் டாக்டர் திரு. பி. நடராசன், எம். எல். ஏ., அவர்கள் சித்தாந்த விரிவுரை ஆற்றினார்கள். மறுநாள் டாக்டர் வி. ஏ. தேவசேனாபதி, எம்.ஏ., பி.எச். டி. அவர்கள் சித்தாந்த விரிவுரையாற்றினார்கள்.

திருப்பேரூர்:—பச்சைநாயகியம்மையார் கோயிலில் 81-ஆவது ஆண்டு நாற்றுநடவு உற்சவம் 29—6—62 முதல் 8—7—62 வரை நடைபெற்றது.

வீரவநல்லூர்:—சுவாமி பூமிநாதர் கோயிலில் தெப்பத்திருவிழா 11—7—62-ல் நடைபெற்றது.

மன்னார்குடி : இராஜகோபாலசுவாமி கோயிலில் செங்கமலத்தாயார் பிரம்மோற்சவம் 26-7-62 முதல் 3-8-62 வரை நடைபெறும்.

சென்னை-சூளை: சுந்தரராஜப்பெருமாள் ஆஞ்சநேயசுவாமி கோயிலில் 13—6—62 முதல் 23—6—62 வரை பிரம்மோற்சவமும் 21—6—62-ல் பல்லக்கு சேவையும் சிறப்பாக நடைபெற்றன,

**மீமிசல் :** கலியாணராமசுவாமி கோயிலில் 29—7—62 முதல் 10—8—62 வரை பிரம்மோற்சவம் சிறப்பாக நடைபெறும்.

**சேலம்-கோட்டை ;** பெரிய மாரியம்மன் கோயிலில் 24—7—62 முதல் 13—8—62 வரை சிறப்பாக நடைபெறும்.

**திருஇடையாறு :** மருந்தீசுவரர் கோயிலில் 22—7—62 ஞாயிறு மாலை அறநிலையத்துறை துணை ஆணையர் திரு. D. இராமலிங்க ரெட்டியார் M.A., B.L., அவர்கள் மின்விளக்கு ஏற்றிவைத்தார்கள். கடலூர் அறநிலையத்துறை உதவி ஆணையர் திரு. A. V. நாகராஜன் B A., (Hons) அவர்களும் விழாவில் கலந்து கொண்டார்கள்.

**திருநெல்வேலி :** சுவாமி நெல்லையப்பர் கோயிலில் ஆனிப்பெருந்திருவிழா 6—7—62 முதல் 14—7—62 வரை நடைபெற்றது.

**விருத்தாசலம் :** பிந்துமாதவப்பெருமாளுக்கு முதல் ஆண்டு மகோற்சவம் 5—7—62 முதல் 15—7—62 வரை நடைபெற்றது.

**விருத்தாசலம் ;** விருத்தாம்பிகையின் ஆடிப்பூர திருக்கல்யாண மகோற்சவம் 25—7—62 முதல் 3—8—62 வரை நடைபெறும்.

**நயினர்கோயில் :** நாகநாதசுவாமி கோயிலில் ஆடிப்பூர உற்சவம் 24—7—62 முதல் 8—8—62 வரை நடைபெறும்.

**அம்பாசமுத்திரம் ;** திருமூலநாதர் கோயிலில் ஆனிப்பெருந்திருவிழா 6—7—62 முதல் 15—7—62 வரை நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசையரங்கும் நடைபெற்றன.

**ரிஷிவந்தியம் :** அர்த்தனாரீசுவரர் கோயிலில் பிரம்மோற்சவம் 5—7—62 முதல் 16—7—62 வரை நடைபெற்றது.

**ஸ்ரீமுஷ்ணம் :** தர்மாத்மா கிள்ளை உப்பு வெங்கடராயர் மாசிமகம் வகையரு தருமத்தின் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீபூவராக சுவாமி நூறுவது ஆண்டு ஜேஷ்டாபிஷேகம் 12—7—62-ல் நடைபெற்றது.

**மேலூர் :** கல்யாணசுந்த்ரேசுவரர் காமாட்சி அம்மன் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 8—7—62-ல் நடைபெற்றது.

**உடையார்கோயில் :** நடராஜப்பெருமாளுக்கு ஆனித் திருமஞ்சன விழா 8—7—62-ல் நடைபெற்றது.

**மன்னார்குடி :** இராசகோபாலசுவாமி கோயிலில் 14—7—62-ல் சென்னை அறநிலைய அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம், பி.ஏ, பி.எல்-, அவர்கள் கல்யாண மண்டபத்திற்குக் கால்கோளும், பாஞ்சராத்ர ஆகமப்பயிற்சி வகுப்பைத் துவக்கியும் வைத்தார்கள்.

**வடக்குவிருதாங்கள் :** கூத்தாடும் பிள்ளையார் கோயிலில் குடமுழுக்கு 13—7—62-ல் நடைபெற்றது.

**திருத்தணி :** சுப்பிரமணியசுவாமி கோயில் பிரயாணிகள் தங்குவிடுதியை 22—7—62 காலை 9-30 மணிக்கு அறநிலையத்துறை ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் B.A., B.L. அவர்கள் திறந்துவைத்தார்கள்.

# சிவப்பிரகாசம்

[வித்துவான் திரு. கு. நடேச கவுண்டர், P.O.L. பேரூர்]

நூலாசிரியர் துதி

கமாபதி கமலன் தேடிக் காணரும்
பொருளைக் கண்டு
சுமாவிருந் தடியாருய்யச்
சிவப்பிரகாசம் சொன்ன
எமார்வ மெய்க்குரவன் தில்லை
யிறைவனுக் குறவனுன
உமாபதி சிவனற் பாதம் முளத்தினி
லிருத்தி யுய்வாம்.

சிவநேயச் செல்வர்காள் !

"வாழும் உயிர்" எனப்படுவது மக்கள் உடம்பைப் பெற்ற உயிரே. அவ்வுயிர்தான் இம்மையில் நுகர்தற்குரிய இன்பங்களைத் தேர்ந்து அறிந்து துய்த்தற்கும், மறுமைக் குரிய அறங்களை மாண்புறச் செய்து ஈட்டற் கும், அந்தமில் இன்பத் தழிவில் வீட்டு நெறியை அறிந்து மும்மைமலம் அறுக்கும் முதலாய முதல்வனடி சேரற்கும் உரியது ஆகும். இம்மை மறுமை வீடுபேறு ஆகிய மும்மை நெறிக்கும் துணையாகி உதவுமாறு அவ்வந்நெறிச் சென்று எல்லைகண்டு மகிழ்ந்த அறிவுடைய ஆன்றோர் பலப்பல நூல்களை யும் உலகத்துக்கு உதவியுள்ளனர்.

இம்மையில் உடலை ஓம்புதற்குள் வயிற் றுப் பிழைப்புக்கு வழிகாட்டும் நூல்களைப் பொருள் நூல் எனவும், மறுமைக்கு வழி காட்டுபவற்றை அற நூல்களெனவும், வீடு பேற்றுக்கு வழி காட்டும் நூல்களை ஞான நூல்களெனவும் கூறுப.

வீடு பேறு பற்றிய ஆராய்ச்சிகளின் முடிவுகளே பலப்பல சமயங்களாக உலகில் நிலவியுள்ளன. ஒவ்வொரு சமயத்திற்கும் ஏழு உறுப்புக்கள் உள்ளன. அவற்றை விளங்கக்கூறும் நூல் இல்லாதது ஒரு சமயம் என்றற்கு உரியதாகாது. ஏழு உறுப்புக் களாகவன: (1) இறைவன் (2) இறைவன் இயம்பிய நூல் (3) அளவை (4) பொரு ளியல்பு. (5) வேண்டுஞ் செய்திமுறைகள் (6) பெத்த நிலை (7) முத்திநிலை என்பன.

இங்ஙனம் கூறிய உறுப்புக்கள் எல்லாம் நன்கு ஆராயப்பெற்று முன்பின் முரண்படு தல் இல்லாமல் முடிவு கூறுவதாய், எல்லை கூறமுடியாத் தொல்லை நாளிலிருந்து இன் றளவும் நன்றறியும் ஞானியர்கள் சென்று, மீண்டுவரா நெறியளிப்பது இதுவே எனப் புகழ்வதாய் உள்ளது சைவசித்தாந்த நெறி யாகும்.

அந்நெறி வேதாகமங்களைத் தன் முத னூலாகக்கொண்டு விளங்குவது வைதிக சைவம் எனவும் படும்.

"ஒரும் வேதாந்தமென்று உச்சியிற்பழுத்த
சாரமாகிய சைவசித்தாந்தம்"

என ஆன்றோர் புகழ்வர். அத்தகைய சைவ சித்தாந்த சாத்திரங்களாக நம் தெய்வச் செந் தமிழ் மொழியில் திகழ்பவை பதினான்கு; அவற்றுள் ஒன்றே ஈண்டு யாம் ஆராய மேற் கொண்ட சிவப்பிரகாசம் என்னும் நூலாகும்.

## ஆசிரியரின் சிறப்பு

சிவப்பிரகாசம் என்னும் சித்தாந்த சாத் திரத்தினை அருளிச்செய்த ஆசிரியர் கொற்ற வன்குடி உமாபதி சிவாசாரிய சுவாமிகள். தில்லைவாழந்தணர்களில் ஒருவர். தில்லைச்சிற் றம்பலத்துள் இன்பக்கூத்தியற்றும் எம் பெருமான்,

"அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டுப்-படியின்மிசைப்
பெத்தான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை
முத்தி அளித்தல் முறை" [செய்து

---

குறிப்பு:—சைவசித்தாந்த சாத்திரவகுப் புக் குழுவின் ஆதரவில் திருமயிலை பி. எஸ். உயர்நிலைப்பள்ளியில் 31-5-62 முதல் 3-6-62 வரை நிகழ்த்திய சொற்பொழிவுகளின் சுருக் கம்.

என விடுத்த ஓலைத்தூக்கினைப்பெற்று அங்ஙனமே பெத்தான் சாம்பானுக்குத் தீக்கை செய்து முத்தி கொடுத்த பெருந்தகையார். முள்ளிச்செடிக்கும் முத்தியளித்தவர். சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் இவர் அருளியவை எட்டாகும். அவையன்றி "உமாபதி சிவனாருடைய கோயிற்புராணம் வைத்துள்ள பெட்டகத்தில் யாமுள்ளோம்" என்று அம்பலவாணர் அருளிய சிறப்புப் பெற்ற கோயிற் புராணமும் இயற்றியருளினவர் இவரே. இவையன்றிச் சேக்கிழார் புராணம், திருமுறை கண்ட புராணம், திருப்பதிக்கோவை, திருப்பதிகக்கோவை என்பவைகளும் இவர் இயற்றியனவே யென்பர். ஞான பூசாகரணம், ஞானபூசை, ஞான தீட்சா விதி, ஞான அந்தியேட்டி, போசன விதி என்னும் ஐந்து சாத்திரங்களும் இவர் அருளிச் செய்தனவாக வழங்கி வருகின்றன. வடமொழியில் பவுஷ்கராகமத்திற்கு ஒரு வியாக்கியானமும் அருளிச் செய்துள்ளார்.

## நூலின் சிறப்பு

சித்தாந்த சாத்திரங்களில் 'சிவப்பிரகாசம்' மிகச் சிறந்தது. இந்நூலின் செய்யுள் நடைமிக எளியது; இனியது ; சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது; பாசஇருள் நீங்கிச் சிவப்பிரகாசத்தைப் பெறுமுறையைத் தெளிவாகக் கூறுவது.

இந்நூலுக்கு மதுரைச் சிவப்பிரகாசனாரும், காஞ்சிபுரம் பிள்ளையார்பாளையம், இலக்கணம் சிதம்பரநாத முனிவரும் விரிவான உரை எழுதியுள்ளனர். அவ்வுரைகளால் அவற்றிற்கு மற்றும் பல உரை எழுதியுள்ளனர் என்பதும் புலனாகும். கொழும்பு மு. திருவிளங்கம் என்பவர் எழுதியுள்ள உரையும் ஒன்று உளது. அது இக்காலத்து இளைஞர்களும் படித்துப் பயன்பெறத் தக்க விதமாக எழுதப்பட்டுள்ளது.

## நூலின் அமைப்பு

இந்நூல் காப்புச் செய்யுளுக்குப் பின் நூறு திருவிருத்தங்களையுடையது. அவற்றுள் முன் ஐம்பது செய்யுட்களும் பொது வதிகாரம் எனவும், பின் ஐம்பதும் உண்மையதிகாரம் எனவும் பகுக்கப்பட்டுள்ளன. பொது அதிகாரம் (1) பாயிரம் (2) பதியிலக்கணம் (3) பசுவிலக்கணம் (4) பாச விலக்கணம் (5) அவத்தையிலக்கணம் என்று வகுக்கப்பட்டுள்ளது.

உண்மையதிகாரம் (1) ஆன்மவிலக்கணம் (2) ஐந்தவத்தையிலக்கணம் (3) உணர்த்துந்தன்மை (4) ஞான வாய்மை (5) ஞானத்தால்வரும் பயன் (6) புனிதன் நாமம் (7) அணைந்தோர்தன்மை என்றும் பகுக்கப்பட்டுள்ளது.

இனி நூலின் பொருளில் நுழைவோம்

### காப்பு

ஒளியான திருமேனி உமிழ்தானம் மிகமேவு
களியார வரும்ஆனை கழல் நாளும்மறவாமல்
அளியானும்மலர் தூவும் அடியார்கள் உளமான
வெளியாகும் வலிதாய வினைகூட நினையாவே.

இதன்கண் பிள்ளையாருடைய திருவடிகளை எப்போதும் மறவாமல் வழிபடும் அடியார்களது உள்ளம் ஞானப்பிரகாசம் ஆகும். வினைப்பகுதிகள் சேரநினையா என்பது. அத்தகைய பிள்ளையாரை இந்நூலைக் காப்பதன் நிமித்தமாக யானும் வழிபடுகின்றேன் என்பது கூறப்பட்டுள்ளது.

பேரறிவும் கவித்திறமையும் படைத்த ஆசிரியர்கள் இயற்றும் நூல்களின் காப்புச் செய்யுளிலும் பாயிரச் செய்யுட்களிலும் நூலின் பொருள் நுண்ணியதாக அமைந்திருக்கும் என்பர். இக்காப்புச் செய்யுளிலும் பின்வரும் பாயிரச் செய்யுட்களிலும் ஊன்றி நோக்கில் அங்ஙனமே காணப்படுகின்றன.

'ஒளியான திருமேனி' என்பதனால் இறைவன் ஞானமே சொரூபமாக உடையவன் என்பதும், 'உமிழ்தானம் மிகமேவு களியார வரும் ஆனை' என்றதனால் இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞானசக்திகளை உடையவன் என்பதும், 'அடியார்கள்' என்றதனால் தற்சுதந்திரத்தைவிட்டு, இடைவிடாது சிவத்தியானம் செய்யவேண்டும் என்பதும், அவ்வாறு தியானிப்போருக்கு கிரியா சக்தியினால் வினையை நீக்கி ஞானசக்தியினால் ஆணவமலத்தை ஒழிப்பான் என்பதும், 'உளமான வெளியாகும்' என்பதனால் அஞ்ஞான இருள் நீங்கிச் சிவம் பிரகாசிக்கும் என்பதும், "வினைகூட நினையா" என்பதினால் சஞ்சிதவினை, ஆசிரியன் செய்யும் தீட்சையால் அழியும், பிராரத்த வினை வருத்தாது உடலோடு கழியும் என்பதும், ஆகாமியவினை ஏறாது என்பதும் குறிப்பால் பெறப்படும். சிவத்தைப் பிரகாசிக்கச் செய்வது இந்நூலின் பயன் என்பதும் இதனால் பெறப்படும்.

பாயிரப் பகுதியில் முதற் செய்யுள் நடராஜர் துதியாகும். அச்செய்யுளால் இறைவன் நின்மல பரசிவம் என்பதும், பிரபஞ்சத்தைக் காரியப்படுத்துவதற்காக ஐந்தொழில் கருணையினால் செய்வன் என்பதும், அவ்வைந் தொழிலால் ஆன்மாக்கள் பக்குவப்பட்டு,வீடு பெறும் என்பதும் குறிப்பிட்டுள்ளார். *இரண்டாவது திருப்பாட்டு புத்தியும் முக்தியும் ஆன்மாக்களுக்கு அளிக்கும் சக்தியின் வேறுபாடுகளைக் கூறுவதாகும். இச்செய்யுளால் சக்தியானது பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியை என ஐந்து வகைப்படும் என்பதும், மூவகை மாயைகளையும் பொருந்தி நிற்கும் என்பதும் அதனால் சக்திக்குப் பெயரும் தொழிலும் பலவாகும் என்பதும், ஆயினும் சக்தி என்பது ஒன்றேயாயிருக்கும் என்பதும், மாயையோடு கூடி நின்றாலும் தான் நின்மலமாய் இருக்கும் என்பதும், இறைவன் செய்யும் ஐந்தொழிலுக்கும்தானே காரணமாயிருக்கும் என்பதும் பெற்றும்.

ஐந்தாவது திருப்பாட்டால் குரு மரபு உரைக்கப்படுகின்றது. ஸ்ரீ நந்திகேசுவரரே சைவ சித்தாந்தத்தின் முதற்குரு ஆவார். சனற்குமார முனிவர், சத்திய ஞானதரிசினிகள், பரஞ்சோதி முனிவர், மெய்கண்டதேவர், அருணந்தி தேவர்,மறைஞான சம்பந்தர் ஆகிய பெரியோர்கள் நந்திதேவரிலிருந்து ஒருவருக்கொருவர் மாணவராக வந்த பரம்பரையினர். இந்நூல் ஆசிரியர் மறைஞான சம்பந்தருடைய மாணவர். பின் கூறப்பெற்ற நால்வரும் (இவ்வாசிரியர் உட்பட) சந்தான ஆசாரியர்கள் எனப் பெறுவர்.

ஆறுவது திருப்பாட்டில் இந்நூலாசிரியருடைய ஞானாசாரியர் ஆகிய மறைஞான சம்பந்தர், சாமவேதம் உடையார், பராசர கோத்திரத்தினர், பெண்ணாகடகத்தில் வாழ்ந்தவர் என்பது பெறப்படும்.

ஏழாவது திருப்பாட்டு இந்நூல் விளம்பிய பொருளின் மேன்மையை விரித்துக் கூறுகின்றது. இந்நூற் பொருள் உலகாயதன் முதல் பாஞ்சராத்திரன் ஈறாக உள்ள புறச் சமயத்தவர்களால் சற்றும் அறியப்படாமல் அவர்களுக்கு இருளாயிருக்கும் சைவ முதல் வைரவம் ஈறான அகச்சமயிகள் எண்மராலும் அறியப்பட்டுள்ளது. காட்சி முதலிய அளவைகளால் அளந்தறியப்படுவது. அபேதம், பேதம், பேதாபேதம் ஆகிய வாதங்களைக்கடந்தது. உடலும், உயிரும்,கண்ணும் சூரியனும் போல பிரிவரு அத்துவிதம் கூறுவது. வேதாகமங்களில் சொல்லப்பட்ட சரியை, கிரியை, யோகங்களை முறையே அனுட்டித்ததின் பயனாக உண்டாக்கப்படுவது. வேதாந்தத்தின் தெளிவான சைவசித்தாந்தம் இத்தகையதாகும் என்பது பெறப்படும்.

எட்டாவது திருப்பாட்டு உயிர்கள் மூவகை, அவை ஆணவ மலம் ஒன்றுமே உடைய விஞ்ஞானகலர், கன்ம மலம் ஆணவ மலம் உடைய பிரளயாகலர், ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலமுமுடைய சகலர் என முத்திறப்படுவர். மும்மலங்களும் ஆன்மாக்களுக்கு அநாதியே உள்ளவை. இறைவன் இம்மூவகை ஆன்மாக்களையும் அவரவருக்குத் தக்கதான திருமேனி கொண்டு குருவாகி எழுந்தருளி அநுக்கிரகம் செய்வன். இறைவன் அருள் செய்வதே தீட்சை எனப்படும். திருநோக்கால், பரிசத்தால், வாக்கால், பாவனையால், சாத்திரத்தால், யோகத்தால், அவுத்திரியால் பாசநாசம் செய்வன் இறைவன். அவுத்திரிகை தீட்சை கிரியாவதி, ஞானவதி என இருவகைப்படும்.

9-வது செய்யுள்: இங்ஙனம் செய்து சமய தீட்சையால் மந்திராதிகாரமும், விசேட தீட்சையால் அர்ச்சனாதிகாரமும், நிர்வாண தீட்சையால் யோக அதிகாரமும் அளித்து இறுதியில் ஞானமும் கொடுப்பன், அவரவர்கள் தகுதிக்கேற்ப.

10-வது செய்யுள்: கிரியையாக உள்ளவை அனைத்தும் ஞானத்திற்கு ஏதுவே ஆகும். சரியை, கிரியை, யோகம் என்னும் நெறிகளிலே நின்று அனுட்டித்தவர்கள் முறையே சாலோகம், சாமீபம், சாரூபம் என்னும் பத முத்திகளைப் பெறுவர். உயர்ந்த பக்குவம், உற்றோர் ஞானம் பெறுவர். ஞானம் இருவகை. திருவடி ஞானம் ஒன்று. சிவாகமங்களை ஓதியுணர்தலாகிய கலை ஞானம் மற்றொன்று. இவை முறையே பரஞானம், அபரஞானம் எனவும்படும்.

* நூலினை உடன் வைத்துக்கொண்டு கட்டுரையைப் படிப்பது நலமாகும். சுருக்கம் கருதிப் பாட்டுகளை எழுதாமல் அவற்றின் எண் மட்டும் ஈண்டு குறிக்கப்படுகின்றது.

*11*-வது செய்யுள்: சிவாகமப் பொருள் அறிவே அபரஞானம். ஆகமங்களின் பொருளையே மெய்கண்ட தேவர் சிவஞானபோத மென்றநூலாகசெய்தனர். அவருடையமாணவர் அப்பொருளை விரித்துச் சிவஞான சித்தி இயற்றினர். அவ்விரு நூலையும் தழுவி திருவருளும் இறைவன் நூலும் கலந்து இந்நூலசிரியர்சிவப்பிரகாசம் என்னும்நூலை அருளிச் செய்துள்ளனர்.

*12*-வது செய்யுள்: அவையடக்கமாகும். இங்ஙனம் பாயிரம் பன்னிரண்டு செய்யுட்களாக அமைந்துள்ளது.

பதின்மூன்றும் திருவிருத்தம் தொடங்கி ஐம்பதாம் திருவிருத்தம் முடியப் பொதுவதிகாரம் எனப்படும். பொது வதிகாரத்தில் கூறப்பட்ட பொருள்களுள் முதலாவதாக உள்ள பதி இலக்கணம் பதின்மூன்று முதல் பதினெட்டு முடிய ஆறு திருவிருத்தங்களால் கூறப்படுகின்றது. அவற்றுள் இன்றியமையாதவற்றைத் தொகுத்துச் சொல்லுவோம்.

ஆகமங்கள், வேதங்கள், அவற்றினின்று விரிந்த ஏனைய நூற்கள் அனைத்திற்கும் நோக்கமாவது, பதியையும், பசுவையும், பாசத்தையும் பாகுபடுத்தித் தெளிவுறுத்தல் ஆகும். அவற்றுள் பதியாவது எல்லாவற்றிற்கும் மேலாய் இருப்பது ஒன்று. அஃது விளங்கக் காரணப்படுவதும் அன்று. ஒரு குணமும் ஒரு அடையாளமும் இல்லாதது. மலமற்றது. ஒன்றாய் என்றும் அழியாததாய் அளவற்ற ஆன்மாக்களுக்கும் அறிவாய் அசைவற்றதாய் வரையறைக்குட்படாததாய் இன்பமே உருவாய் அன்பால் வழிபடாதாருக்கு அடைவதற்கரியதாய் வழிபட்டவர்கட்குச் சென்றுசேர்தற்குரிய வீட்டு நெறியாய் சிறியனவனைத்திற்கும் சிறிதாய்ப் பெரிதினும் பெரியதாய் விளங்குவது. சிவமெனப்படுவதும் அதுவே.

## 14-வது செய்யுள்:

பதினான்காவது திருவிருத்தம் அந்தச் சிவம் தனது சக்திகள் இடமாகத் திருமேனி கொண்டும் பிரபஞ்ச சிருஷ்டியை நடத்தும் முறையைக் கூறுகின்றது. சிவத்தைப் பிரியாதது அதனுடைய பராசக்தி. அதினின்று இச்சை, ஞானம், கிரியை என்னும் சக்திகள் ஒன்றினின்று ஒன்று உண்டாகும். அச்சக்திகளை சிவன் பொருந்திமுறையே இச்சா ஞானக் கிரியா சொரூபன் ஆவான்: சுத்த மாயையைப் பொருந்தி நாதவிந்து முதலான தத்துவங்களைத் தோற்றுவித்து வேதாகமங்களையும் அருளிச் செய்வன். அசுத்த மாயையைப் பொருந்தி தனுகரண புவன போகங்களை உண்டாக்குவான். ஒடுக்குவான். இங்ஙனம் கொள்ளும் திருமேனி நிட்களசகளத் திருமேனி என்று சொல்லப்படும்.

## 15-வது திருப்பாட்டு

சிவம் தனக்கு வேண்டிய திருமேனியை ஒருவர் கொடுப்பது இன்றித் தானே எடுத்துக் கொள்ளுவன்.

## 16-வது செய்யுள்

உலகாயதன் உலகத்தை உண்டாக்கிய கருத்தா ஒருவன் இல்லை என்றும், பிரபஞ்சம் என்றும் உள்ளது, அதை உண்டாக்கிய கருத்தா ஒருவன் இல்லை என்றும் கூறுவான். அவன் கூற்றை மறுத்துக் கருத்தா ஒருவன் உளன் என்பதை அச்செய்யுள் நிறுவுகின்றது. பிரபஞ்சம் அவன் அவள் அது என்னும் பகுப்புடையதாய்த் தோன்றி நின்று, காலவெல்லையில் அழியும் ஆதலால் படைத்துக்காத்து அழிக்கும் கருத்தா ஒருவன் வேண்டும் என்பதனால் லோகாயதன்—கருத்துமறுக்கப்படுகின்றது. ஒடுங்கிய பிரபஞ்சம் மீண்டும் தோன்றுவானேன்? எனில், ஆன்மாக்களும் பாசங்களும் கூடிய பிரபஞ்சம் ஆகையாலும் ஆன்மாக்கள் அநாதியே மலத்தொடு கூடினவையாக மலபரிபாகம் பெற்றே முத்தி பெறவேண்டுகையாலும், மாயா சரீரங்களை எடுத்து வினைப்பயன்களை நுகர்ந்து மலபரிபாகம் வரவேண்டுகையானும், ஒடுங்கிய உலகம் மீண்டும் தோற்றுவிக்கப்படும். உலகம் தானே ஒடுங்கியும் தோன்றியும் வராததா? அதற்குக் கர்த்தா ஒருவன் எதற்காக? என்றால், ஆன்மாக்கள் வினைக்கீடாகத் தமக்கேற்ற உடலை எடுத்துப் பிராரத்த வினைப்பயனை நுகர்ந்த பின் அவ்வுடலை விடுத்துச் சூட்சும உடல் கொண்டு துறக்க நிரயங்களில் இன்ப துன்பம் நுகருகின்றன. ஆதலாலும் அவற்றிற்குத் தனுகரண புவன போகங்களாக உள்ள மாயை அறிவற்றது. ஆகையால் சொந்தமாக அறிவும் தொழிலும் இல்லாதது ஆகையாலும் ஆன்மாக்கள் தம் கன்மத்துக் கீடான சரீரங்களை எடுத்துக் கொள்ளத்தக்க அறிவு இல்லாதன ஆகையாலும் கன்மத்துக் கீடாகவே உடலெடுத்து யாதானும் ஒருதொழில் செய்கின்றன ஆகை

யாலும் இவையெல்லாம் தாமாகவே காரியப்படமாட்டாதனவாம். ஆதலால் நின்மலனாகிய சிவனே தனக்கொரு பிறப்பிறப்பில்லாமலே நின்று ஏனையவற்றிற்குப் பிறப்பிறப்பு முதலிய தொழில்களைச் செய்விப்பவன். (17) பிரமன் படைக்கத் திருமால் காக்கின்றான் அன்றோ எனின், சிவனுடைய ஆணையாலே அவர்கள் அத்தொழில் செய்கின்றனர். சிவனே இறுதியாக எல்லாவற்றையும் அழிப்பான். அழிப்பதனால்தான் மீண்டும் உலகம் தோன்றும். இத்தொழில்களைச் செய்யினும் சிவன் விகாரியாகான். சூரியன் எதிரில் தாமரைகளில் ஒன்று அலரும் ஒன்று அரும்பும் ஒன்று உலரும் எனினும் அதனால் சூரியன் விகாரமடைவதில்லை. அதுபோல (18) இத்தொழில்களை எல்லாம் சிவன் விளையாட்டாக (எளிதாக)ச் செய்வன். அதன் பயன் உயிர்களை இடர்க்கடலினின்றும் எடுப்பதேயாகும். (19) சங்கரித்தல் என்பது ஆன்மாக்களை இளைப்பாற்றுதற்காக. படைத்தல் மலபரிபாகம் வருவித்தற்காக காத்தல் வினைப்பயன் களைத்துய்ப்பித்தற்காக. மறைத்தல் என்பது அவரவர் வினையளவாகப் போகங்களை வரையறுத்து நிறுவுதல். அருள் வீடு பெறுதல். எனவே ஐந்து தொழில்களையும் இறைவன் செய்வதற்கு ஏது அருளேதான்.

### பசுவிலக்கணம்

(19) ஆன்மாக்கள் எண்ணற்றவை. நித்தியமானவை. ஆணவ மலத்தில் அழுந்தியவை. இரு வினைகளுக்கு ஏற்ற உடம்பைப் பெறுபவை. அவன் அவள் அது எனப்படும் தம் உடம்பும் தாமும் வேறுதோன்றாமல் பிரிவற நிற்பவை. போகங்களை நுகரும் போதே புண்ணிய பாவங்களைத் தேடிக் கொண்டு அவற்றாலே மீண்டும் பிறப்பிறப் பிணி அடைபவை. இங்ஙனம் நிகழும்போது மலபரிபாகம் வரின் சிவனருளால் பிரகாசிக்கும்ஞானத்தால் ஆணவமல இருள் நீங்கிச் சுத்தான்மாக்கள் அவனுடைய திருவடியை அடையும்.

### பாசவிலக்கணம்

செய்யுள் 20 முதல் 32 முடிய பாசவிலக்கணம் கூறப்படுகிறது. அவற்றின் பொருளை முதலில் பாகுபாடு செய்து தொகுத்துக் கொள்வோம். மலங்கள் ஐந்தாகும். அவை யாவன; 1. ஆணவம். 2. திரோதாயி. (இவற்றின் இலக்கணம் 20-ஆம் செய்யுள் கூறுகின்றது). 3. மாயை (காரணமாயை) அது சுத்தமாயை (செ. 21), அசுத்த மாயை (செ. 22) என்று இருவகைப்படும். மாயையே உலகுக்கு முதற்காரணம் (செ. 23) வினைக்கேற்ற உடம்பைக் கொடுப்பவன் சிவன் (செ. 24) மும்மலங்களும் அநாதி. (செ. 25)

### 4. மாயேயம் (காரிய மாயை)

மாயேயமாகிய தத்துவங்கள் 36. அவை தோன்றும் முறை 26, 27-ஆம் செய்யுள்களிற் கூறப்படுகின்றது.

### 5. கன்மம்

கன்மத்தின் இயல்பு (செ. 28)லும், சஞ்சித கன்மம் பிராரத்தகன்மம் என்பவற்றினியல்பு செய்யுள்29 லும் ஆகாமியத்தினியல்பு செய்யுள் 30லும் புண்ணிய பாவங்கள் வரும்முறை செய்யுள் 31 லும் கூறப்படுகின்றன. மலங்களின் தொகை 32ம் செய்யுள் கூறுகின்றது.

அவற்றுள் முதலாவதாகிய ஆணவ மலம் ஒன்றே எனினும் எண்ணரிய சக்திகளை உடையது. அஞ்ஞானத்தை விளைப்பது. (ஆன்மாவை அணுத்தன்மைப்படுத்துவதால் ஆணவம் என்ற பெயர் பெற்றது). செம்பிற்களிம்பு போல் ஆன்மாவிற்குச் சகசமாயுள்ளது. ஆன்ம அறிவை முற்றிலும் மறைப்பது.

இரண்டாவது மலம் திரோதாயி. இறைவனது திரோதான சக்தியே திரோதமலம் எனப்படும். ஆணவ மலம் பரிபாகம் ஆதற்பொருட்டு அதனோடு நின்று உயிர்களின் அறிவை மறைத்தலால் திரோதாயி, மலமெனவும் கூறப்படும். அங்ஙனம் மறைத்தல் மட்டும் அன்றி, சிவபெருமான் திருவடிகளை ஆன்மா பொருந்தும்படி இரங்கி அருளையும் அதுவே செய்யும் (செய்யுள் 29).

மூன்றாவது சுத்தமாயை—இது மலகன்மங்களோடு கலவாது இருத்தலின் சுத்தமாயை எனப்படும். பரசிவத்தின் சத்தியின் செயலால் சுத்தமாயையிலிருந்து நாதம் முதலிய ஐந்துவகைச் சுத்ததத்துவங்கள் தோன்றும். பஞ்சகலைகளும் இருநூற்றிருபத்து நான்கு புவனங்களும் தோன்றும். கலை, தத்துவம், புவனம் என்பவை மூன்றும் பொருட்பிரபஞ்சம் எனப்படும்.

செ. 26

4. மாயேயம் (பிரவிருத்திக்கிரமம்)
[மொத்தம் 31)

அசுத்தமாயை

(1) கலை (2) காலம் (3) நியதி

(4) வித்தை (5) அராகம் (6) மூலப்பிரகிருதி (முக்குணங்களும் தோன்ருத நிலை)

7. கலை முதலிய ஐந்தையும் கஞ்சுகமாகக்கொண்டது. (புருடதத்துவம்)

8. குணதத்துவம்- சித்தம் முக்குணங்களும் சமமாயிருப்பது.

10. அகங்காரம்.
(1) தைசதம் (சாத்துவிகம்)

11. மனம்-ஞானேந்திரியங்கள் (ஆன்மாவிடயங்களில் ஒன்றை அறியும்போது அதற்கேற்ற ஓரிந்திரியத்தின் துணை கொண்டு அறியும் (செ. 63)

(2) வைகாரிகம் வாக்கு முதலிய கன்மேந்திரியங்கள்
(இராசதம்) 5 (16 5)
(தாமதம்) 5 (21 5)

ஆகாயம் முதலிய பூதங்க... (26 5)
(சதாசிவன் ... வைகளும் அதிதெய்வம்)

பூதம் ...ஒன்றும் தத்தமக்குரிய இந்திரியங்கள் ஒவ்வொன்றுக்கும் பற்றுக்கோடாக விடயங்களை அறியச் செய்யும் (63)

சிருஷ்டிக்கிரமத்தில் மாயையினின்று முறையே காலம் நியதி கலை என்பனவும் கலையிலிருந்து வித்தை அராகம் என்பனவும் தோன்றும். அராகத் தத்துவம் வித்தையினின்று தோன்றும் எனச் சித்தியாரும், கலையினின்று தோன்றும் என மிருகேந்திராகமமும் கூறும்.

கலை முதலிய ஐந்து தத்துவங்களும் ஈசுவரதத்துவத்திலுள்ள அனந்தரால் தோன்றும்.

மூலப் பிரகிருதி கலையினின்றுண்டாகும். கருத்தாசிகண்டருத்திரன் வியக்தமாகாத குணங்களையுடையது. முக்குணமும் ஒத்திருப்பது சித்தம். ஒரு குணம் ஏறினது புத்தி.

குணதத்துவத்திலே தோன்று புத்தி முதல் மண்ணுக உள்ள தத்துவங்கள் எல்லாம் முக்குணங்களால் வியாபிக்கப்பட்டு ஒரு குணமாயினும் மிக்கிருக்கும்.

தன் மாத்திரைகள் இருவகை :
(1) காரண தன்மாத்திரை
(2) விடய தன்மாத்திரை

காரண தன்மாத்திரையாவது தத்தம் குணவிசேடங்களைக் காட்டாமல் குண சமூகமாய் சூட்சும நிலையிலிருப்பது. சூக்குமதன்மாத்திரை எனவும் படும்.

விடயதன்மாத்திரையாவது—பொறிகளால் நுகரப்படுவனவாகிய சுவை முதலிய விஷயங்கள்.

சுத்தமாயா தத்துவங்கள் 5.

பிரகிருதி மாயா தத்துவங்கள் 24

அசுத்தமாயா தத்துவங்கள் 7

ஆக தத்துவங்கள் 36.

## தத்துவங்கள்

சுத்த மாயா தத்துவங்கள் (செய்யுள் 21)

சுத்தமாயை (தத்துவ கருத்தாக்கள் அதிட்டித்து நிற்பது)

| | | |
|---|---|---|
| 1. நாதம் | சிவம் (ஞானமேயானது) | |
| 2, விந்து | சக்தி (கிரியையயானது) | |
| 3. சாதாக்கியம் | சக்தியும் சிவமும் (ஞானமும் தொழிலும் சமம்) | கிரியா சக்தியால் செலுத்தப்படுவது |
| 4. ஈஸ்வரம் | மகேஸ்வரன் (ஞானத்திலும் கிரியைமிக்கிருப்பது) | இச்சா சக்தியால் செலுத்தப்படுவது |
| 5. சுத்தவித்தை | உருத்திரன் (ஞானமிக்குக் கிரியைக் குறைத்தது) | ஞான சக்தியால் செலுத்தப்படுவது |

சிவமும் சக்தியும் (சுத்தமாய குடிலையில் பொருந்தின).

அவதரத்தில் அந்தக் குடிலை பிரதான மாகச் சிவதத்துவங்கள் தோன்றும். சிவனும் சக்தியும் அந்த சுத்தத்துவங்களை உடம்பாகக் கொண்டு அதிஷ்டித்து தத்துவ கர்த்தாக்கள் ஐவராக நிற்பர். இந்த ஐந்தும் சிவனுக்கு சுதந்த்ர வடிவம். இவற்றில் ஒன்றற்கொன்று முற்பிற்பாடு இல்லை. நித்தியமாதலால், ஆன்மாவிற்குப் பயன் படும் முறையில் முற்பிற்பாடு கூறப்படுகிறது. உடம்பின் பெயரை உயிருக்கிட்டு வழங்குவது போலத் தத்துவங்களின் பெயரால் தத்துவ கர்த்தாக்களும் வழங்கப்படுவர்.

குறிப்பு: ஆன்மா விடயங்களை நுகரும் முறை: *இச்சா ஞானக்கிரியைகள் என்றும் சிவசக்திகள் சிவதத்துவங்களைச் செலுத்தச் சிவதத்துவங்கள் கலாதிகளை (வித்தியா தத்துவங்களை)ச் செலுத்த, கலாதிகள் ஆன்மாவின் இச்சா ஞானம் கிரியைகளை எழுப்ப ஆன்மாவின் அந்தக் கரணங்களிடத்தும் ஞானம், ஞானேந்திரியங்களிடத்தும் கிரியைகள் கன்மேந்திரியங்களிடத்து நின்று ஆன்மா விடயங்களை அறிந்துபற்றி அவற்றில் அழுந்தும். (செ. 63.)*

நால்வகை வாக்குகளும் சுத்தமாயையினின்று தோன்றும். வாக்குக்களிலிருந்து எண்பத்தொரு பதங்களும் பதினோரு மந்திரங்களும் இதன் கண்ணே தோன்றும். இவை சொற்பிரபஞ்சம் எனப்படும். சுத்த மாயையே சிவத்தினது இலயபோக அதிகார வடிவங்களின் தொழிலுக்கு இடமாயிருக்கும் (செ. 21)

அசுத்தமாயை—மா—ஒடுங்குதல் யா—வருதல்.

எனவே பிரபஞ்சமெல்லாம் தன்னிடத்து வந்து ஒடுங்குவதற்கும் மீண்டு வருதற்கும் காரணமாயுள்ளது. எனவே அது மாயா எனப்படும். மலகன்மங்களோடு விரவி நின்றது அசுத்தமாயை. ஆன்மாக்களின் உடம்பு, உட்கருவி புறக்கருவி. புவனங்கள், போகங்கள் எல்லாம் (கலை முதற் பிருதுவி ஈறுகவுள்ள தத்துவங்கள் எல்லாம்) அசுத்த மாயையால் ஆயினவையே. (செ. 22) இது காரணமாயை எனப்படும்.

உலகுக்கு முதற்காரணம் மாயையே சிவம் சித்து—அசித்தாகிய பிரபஞ்சத்திற்கு அது முதற்காரணமாகாது, ஆதலால் மாயையை முதற்காரணமாகக் கொண்டு சிவன் பிரபஞ்சத்தைப் படைப்பான் (செ. 23).

வினைக்கேற்றபடியே இறைவன் ஆன்மாக்களுக்கு உடலைக் கொடுப்பான். ஆதலால் சிவன் நிமித்த காரணம். வினை அசேதனமானது. வினை துணைக்காரணமாகும். ஆன்மாவும் தன் வினைக்கேற்ப உடலெடுக்கும் ஆற்றல் அற்றது. மாயையும் அசேதனமாதலால் கருத்தாவாகாது.

வினைகளுக்கு ஏற்ப மாயையினால் உடல் முதலியன வருமெனில் வினை முந்தியதோ மாயை முந்தியதோவென்று வினவில், அது பீஜாங்குர நியாயமாகும். நெல்லில் முளை தவிடு உமி போல இவை ஆன்மாவுக்கு அநாதியாம். முளை—கன்மன், தவிடு—ஆணவம், உமி—மாயை, அரிசி—ஆன்மா போலாகும்

நான்காவதாகிற் மாயேயம்—என்பது அசுத்தமாயையின் காரியங்கள். மாயையி னின்று தோன்றியவை மாயேயம். காரிய மாயை எனவும் படும். இதன் விளக்கத்தை இத்துடன் உள்ள தோற்றமுறைப் படலத் தால் அறிக. (செ. 26, 27)

கன்மம். (செ. 28) உடம்புக்குக் கார ணம் ஆகியிருப்பது சஞ்சிதகன்மம், இன்ப துன்பங்களுக்குக் காரணமானது பிராரத்த கன்மம். கன்மம் நாசோற்பத்தி, பண்ணி வருவதால் பிரவாக அநாதியாகும். ஆன் மாக்கள் தோறும் வெவ்வேருயமைந்தது. மனம் வாக்கும் காயத்தால் இயற்றப்படும். புத்தி தத்துவத்தைப்பற்றியிருக்கும். சங்கார காலத்தில் உயிரை விட்டு நீங்காத மாயையில் ஓடுங்கும்.

பிராரத்த கன்ம பலனை நுகரும்போது உண்டாகும் விருப்பு வெறுப்புக்களால் ஆகாமிய கன்மம் உண்டாகும்.

(செ. 31) நல்வினை தீவினையாலும் தீவினை நல்வினையாலும் அழியாது. ஆறு லும் வேதாகமங்களிற் கன்மகாண்டத்திற் கூறியபடி சாந்தி செய்வதனுல் பாவதுன் பங்கள் கழியும். தானகச் செய்ய முடியா விடில் தக்கவர்களைக் கொண்டு சாந்தி செய் வித்தும் கொள்ளலாம். சரியை முதலிய சிவநெறியில் நின்ருல் சாந்தி செய்யாமலும் பாவங்கள் ஒழியும்.

(செ. 32) ஆணவம், திரோதாயி, மாயை, கன்மம், மாயேயம் என மலம் ஐந்து. இவை நீங்கினுலன்றி இறைவன் திருவருளைப் பெற முடியாது.

இந்த நான்கு வாக்குகளால் ஆன்மா அறியும் ஆற்றலைப்பெறும். மேலே கூறிய சுத்தவித்தை ஈஸ்வரம், சாதாக்கியம், சக்தி, சிவம், என்ற சுத்த தத்துவம் (சிவ தத்துவம்) ஐந்தினுல் பிரகாசிக்கின்ற அறிவைப்பெறும். நான்கு வாக்குகளும் சுத்ததத்துவங்களும் சுத்தமாயையின் காரியங்கள்,

## அவத்தையிலக்கணம்

மலங்கள் ஐந்தாலும் வருந்தும் ஆன்மா அவற்றை நீங்கி அருளைப்பெறுவதெங்ஙனம் என்ருல் மலங்கள் காரியப்பட்டுப் பரிபாகம் உற்றே அருளைப் பெறவேண்டும். மலம் காரியப்படும் முறையை அவத்தை இலக் கணம் கூறும் வழியால் அறிந்து கொள்ள லாம். அவத்தை-நிலைமை-அவ - உபசர்க்கம் ஸ்தா-நிற்றல்.

அவத்தைகள்-கேவலம் சகலம், சுத்தம் என மூவகைம்படும். அவற்றுட் கேவலா வத்தையாவது-(செ 23) கலை முதலிய தத்து வங்களும் பரவுடம்பு சூக்குமவுடம்பு தூல வுடம்புகளும் இல்லாமல் ஆணவமலம் அன்றி வேறென்றும் இல்லையென்னும் தன்மையா தாய், ஒரு பொருளையும் அறியமாட்டாததாய் இருளைப் பொருந்திய கண்போல் மலவிருளில் அழுந்தி, அதனை விட்டு நீங்கும் வகையின்றிப் பிறப்பிறப்பும் ஏகதேச தன்மையும் இன்றி நிற்பது இங்குக் கூறியது காரணகேவலம் எனப்படும். அநாதி கேவலம், மருட்கேவ லம் எனவும் படும்.

## தனி நிற்கும் நிலை

சகலாவஸ்தை-கலாவதிகளோடு கூடிய நிலை. கலா என்பதுவித்தியாதத்துவங்கள் ஏழில் மூன்று-கல-நீக்குதல் அறிதல் செலுத் துதல் ஆ-விகுதி.

காரண கேவலத்திற்கிடந்த ஆன்மா வுக்கு அறிவு இச்சை செயல்களை எழுப்ப வேண்டிய இறைவன் அருளால் மாயை பொருந்தும். ஆணவமலம் இருள் போன்றது. மாயை விளக்கு போன்றது. (செ. 37) சகலாவித்தையில் ஆன்ம அறிவு விளங்கும் முறையைக் கூறுவோம். விந்து சத்தியி லிருந்து நாதம் உண்டாகும் அது ஞான மாத் திரைக்கு ஏதுவாகும். அதுவே சூக்குமை வாக்கு எனப்படும். சூக்குமை பைசந்தி மத் திமை வைகரி என வாக்குகள் நான்காம். அவை ஒன்றற்கொன்று தூலமாயிருக்கும். சாந்தியதீதை முதலிய ஐந்து கலைகளையும் பற்றுக் கோடாகக் கொண்டு வாக்குகள் நான்கும் தொழிற்படும் (செ. 38) அவற்றை சக்திகள் காரியப்படுத்தும் முறை பின் வருமாறு:

| வாக்குகள் | பற்றுக் கோடு | காரியப்படுத்தும் சக்திகள் |
|---|---|---|
| 1. சூக்குமை (ஞானமாத்திரைக்கு ஏதுவானது) | சாந்தியதீதிகலையும் சாந்திகலையும் | பராசக்தி திரோதான சக்தி |
| ** 2. பைசந்தி (எழுத்துக்கள் பிரிந்து தோன்றாமல் மிகவும் சூக்குமமாயிருக்கும். நிர்விகற்ப உயர்வு ஏது)? | வித்யா கலை | இச்சாசக்தி |
| 3. மத்திமை (எழுத்துக்கள் பிரிந்துதோன்றி, சவிகற்ப உயர்விற்கு ஏதுவாய் உள்ளே உணரப் படும் ஓசையாய் இருக்கும்) | பிரதிட்டாகலை | ஞானசக்தி |
| 4. வைகரி (பிராணவாயுவினால் உந்தப்பட்டுப் பிறர் செவிக்குக் கேட்கப் படுவதாய் சவிகற்ப உயர்விற்கு ஏதுவாகும்.) | நிவர்த்திகலை | கிரியாசக்தி |

**இவை சூக்கும வாக்குகளின் விருத்தி.

இந்த நான்கு வாக்குகளால் ஆன்மா அறியும் ஆற்றலைப்பெறும்.

இந்த நான்கு சுத்தவித்தை ஈஸ்வரம், சாதாக்கியம், சத்தி, சிவம், என்ற சுத்த தத்துவம் (சிவ தத்துவம்) ஐந்தில் பிரகாசிக்கின்ற அறிவைப் பெறும்; நான்கு வாக்குகளும் சுத்ததத்துவங்களும் சுத்தமாயையின் காரியங்கள்.

செய். 40, 41,

அசுத்தமாயையின் காரியங்கள்—ஆன்மாவுக்குப்பயன்படும் முறை பின்வருமாறு

## வித்யாதத்துவங்கள்

| அசுத்தமாயா தத்துவங்கள் | அவற்றால் ஆன்மா அடையும் பயன் | தொழிற்படுத்தும் தத்துவம் |
|---|---|---|
| 1. கலை | ஆணவமலத்தை சற்றே நீக்கி, இந்திரியங்களின் பயனாகிய விடயங்களை ஆன்மாப் பொருந்தும் எழுப்பும் | கிரியா சக்தியானது சத்திதத்துவத்தை எழுப்பச் சத்திதத்துவமானது கலை, நியதி, காலம் என்பவற்றை எழுப்பும். |

கலை, உட்கருவிகளில் சித்தத்துக்கு உட்கருவியாய் நின்று போகங்களிலே ஆன்மாவுக்கு நினைவை எழுப்பும். ஆன்மாவின் கிரியையை எழுப்பும்.

| | | |
|---|---|---|
| 2. வித்தை | விஷயங்களை இன்னதென அறியத் தக்க ஞானத்தைஆன்மாவுக்குஉண்டாக்கும் | ஞானசத்தியால் எழுப்பப் பட்ட சுத்தவித்தை. |
| 3. அராகம் | பெற்றதிலே நின்றும் பெறாதவற்றிலே ஆசை உண்டாக்கும் | இச்சாசத்தி ஈசுவர தத்துவத்தை எழுப்ப, அது அராகத்தை எழுப்பும். |

(செ. 68) அராகம் உட்கருவிகளில் மனதுக்கு உட்கருவியாய் நின்று போகங்களிலே ஆசை எழுப்பும், ஆன்மாவின் இச்சையை எழுப்பும்.

4. நியதி — கன்மத்தில் அளவுக்கு ஏற்ற தாழ்வின் கிரியா சத்தியால் எழுப்பப் நிப்போகங்களை வரையறுத்துநிறுத்தும் படும்.

(செ. 63) நியதி, புத்திக்கு உட்கருவியாக நின்று போகங்களை நிச்சயித்து உறுதிப்படுத்தும்.

5. காலம் — போகங்களின் எல்லையையும் பலத்தையும் புதுமையும் உண்டாக்கும்.

6. புருடன் — (கலை, வித்தை, அராகம், நியதி, காலம் என்ற ஐந்தும் காரியப்படுகிற சமூகமே புருடதத்துவம் ஆகும் (தனிப்பொருளன்று).

போகம் அருந்தத்தகுதி பெற்ற நிலையிது-புருடன் ஆசைப்பட்ட பதார்த்தங்களில் மயங்கும்.

7. பிரகிருதி — ஆன்மாக்களின் சுகதுக்கங்களை உண்டாக்குகையில் சாத்துவிக, ராஜஸ தாமஸ குணங்களாய் இருப்பது.

செ. 63. புருடனைப் போகங்களில் அழுந்துவிக்கும்.

**செ. 41 முதல் 46 முடிய-பிரகிருதியின் காரியங்கள்.**

முன்னரே விளக்கப்பட்டுள்ளன. அத்தத்துவங்கள் 24ம் ஆன்ம தத்துவம் எனப்படும். அவற்றின் பயன்கள் அனைவரும் உணர்ந்தவையாதலால் ஈண்டுவிரித்திலம்.

கூறிய தத்துவங்களில் புருடதத்துத்வம் சித்துடனே கூடியறிந்தும் அசித்துடனே கூடி அறியாமலும் சார்ந்ததன் வண்ணமாயிருத்தலின் சித்தசித்து எனப்படும். சுத்தத்துவம் ஐந்தும் சிற்சத்திக்கு சுதந்தர வடிவமாதலின் சைதன்னியம் எனப்படும். ஏனைய முப்பது தத்துவங்களும் அசித்தெனப்படும்.

இங்ஙனம் விரித்துக் கூறப்பட்ட முறையிலே உள்ள முப்பத்தாறு தத்துவங்களில் ஆன்மா மயங்கித் துன்பம் உறும். தூல சரீரம் நீங்கின காலத்தில், சூக்குமமான புரியட்டக சரீரத்தோடு சுவர்க்க நரகங்களடைந்து இன்ப துன்பமுறும். பூமியினிடை மீளவும் பிறக்கும். மோட்சம் பெறும் வரையிலும் சூக்கும உடம்பு அழியாது.

பூமியிற் பிறப்பு—நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு, எண்பத்துநான்கு நூறுயிரம் யோனிபேதம் என்பர்.

இங்ஙனம் பிறந்து இறந்து உழலும் நிலையே சகல நிலையாகும். இது காரண சகலம் எனப்படும் (செ. 47).

**சுத்தவத்தை**

செ. 47 இங்ஙனம் பிறந்து இறந்து இருவினைகள் புரிந்து வருங்காலத்தில் இருவினைச்சமம் உற்ற காலையில் திரோதான சத்தியானது அருட்சத்தியாகி மாறி நிற்கும் தீவிரதர சத்திநிபாதம் விளங்கும். (செ. 48) அக்காலையில் தமது முதலான சிவம் ஆசாரியனாகி எழுந்தருளி வந்து, கேவல நிலையும் சகல நிலையும் உண்டாகாதபடி அருளில் நிறுத்தி மலங்களைப் போக்குவான். இந்நிலையே சுத்தாவத்தை எனப்படும். சரியை கிரியை யோகம் என்னும் நெறிகளில் நின்று புண்ணியப்பேறு பெற்றவர்களே சத்திநிபாதம் பெறற்கு உரியராவார். (செ. 50) பெண்ணின்பம் முதலாக உலகாயதன் முதலியோர் கூறுவன எல்லாம் பழிசேர் முத்தியாகும். மும்மலமும் நீங்க ஆன்மாவானது சிவத்தினது திருவருளைச் சேர்வது உண்மையான சிறந்த முத்தியாகும்.

இங்ஙனம் சிவப்பிரகாசத்தில் பொதுவதிகாரப் பொருள்கள் சுருக்கிக் கூறப்பட்டன.

**உண்மையதிகாரம்**

இனி நிறுத்தமுறையே உண்மையதிகாரத்தை நோக்குவோம்.

மேலே கூறப்பட்ட செய்யுள்கள் ஐம்பதும் ஆன்மாவின் பெத்தநிலையைக் கூறுவதால் பொது அதிகாரம் எனப்படும். இனி அப்பெத்தநிலை நீங்கி முத்திக்கு ஏதுவாயுள்ள உண்மை நிலையாகிய நித்திய சுகம் எய்தும் முறையைக் கூறுவதால் 51 முதல் 100 முடியவுள்ள செய்யுட்கள் உண்மையதிகாரம் எனப்படும்.

**ஆன்ம இலக்கணம்**

ஆன்மா, உடம்பிலே பொருந்தி விடய போகங்களைப் பொறிகளின் வழியால்

அறிந்து பற்றி அழுந்தி அநுபவிக்கும். அங்ஙனம் அநுபவிக்கும் தன்னையும் தன்னைச் செலுத்தி நிற்கும் திருவருளையும் அறியமாட்டாது. அவ்வாறு அறியும் தன்மையின் நீங்கி ஐந்தவத்தையை ஆணவமலத்தால் பொருந்தி தனியே துரியாதீத நிலையை அடையும். இங்ஙனம் சகல கேவலப்படுதல் ஆன்மாவுக்கு இலக்கணம். (செ. 52)

உடம்பு, பொறிகள், அந்தக்கரணங்கள், பிராணவாயு என்பன அறிவுடையன அல்ல. எடுத்த உடம்பில் நிலைபெற்று, சிவன் அறிவிக்க ஆன்மாவேயறியும். ஆன்மா அறிவுடைப்பொருள்; (செ. 53, 54) ஆன்ம அறிவினால் சுட்டி அறியப்பட்ட பொருள் எல்லாம் அசத்து ஆகும். சுட்டியறிதல்—ஆன்ம அறிவானது கருவிகளோடு கூடி அதனதன் வண்ணமாய் நின்று அறிதல். சிவம் ஆன்ம அறிவாற் சுட்டியறியப்படாதது. (செ. 55) ஆன்மா தானாக ஒன்றை அறியாது. பாசம் சடமாதலால் அதுவும் அறியாது. சிவமும் வியாபக அறிவாதலால் பாசத்தைப் பகுத்து அறிய வேண்டியதில்லை. ஆன்மா சத்துடன் கூடிச் சத்தாகவும் அசத்துடன் கூடி அசத்தாகவும் நிற்கும் இயல்புடையது ஆதலால் சதசத்து எனப்படும் (செ. 56, 57)

கண்ணொளி விளக்கொளியோடு கூடிக் கண் காண்பதுபோலச் சத்தோடு கூடியே ஆன்மா அறியுந் தன்மை உடையதாகும்.

ஆன்மாவானது உடம்பின் ஓரிடத்திலிருக்கும் என்றும் உடம்பு முழுவதிலும் வியாபித்திருக்கும் என்றும் சிவனைப்போல் எங்கும் பரவி இருக்கும் என்றும் சிவத்தின் உதவியில்லாமல் தானே அறியும் என்றும் சடம் என்றும் சமயத்தார் பலரும் பலவிதமாகக் கூறும் கூற்றனைத்தும் பிழையே. பளிங்கானது சார்ந்ததன் வண்ணமாய் நிற்றல்போல் அசத்தொடு கூடின் அசத்தாகவும் சத்தோடு கூடின் சத்தாகவும் நின்றறியும் இயல்புடையது (செ. 59) எனவே (1) அறிவிக்க அறிதலும், (2) சத்தையும் அசத்தையும் அறிதலும், (3) சார்ந்ததன் வண்ணமாய் நின்றறிதலும் ஆன்மாவின் சிறப்பிலக்கணமாகும்.

## ஐந்தவத்தையினிலக்கணம்

காரணாவத்தை—கேவலம் சகலம்சுத்தம் என மூவகைப்படும் என்று பொதுவதிகாரத்திற் கூறப்பட்டது. அவற்றின் காரியமும் கேவலம் சகலம் சுத்தம் என மூன்றும். இக்காரிய கேவல சகல சுத்தங்கள் ஒவ்வொன்றும் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என ஐந்தவத்தைகளையும் உடையதாயிருக்கும். எனவே காரியாவத்தைகள் பதினைந்தாகும். காரிய கேவலாவத்தையாவது—கீழாலவத்தை எனவும் படும். அதன் விவரம் பின்வருமாறு:—(செ. 60)

## காரிய கேவலாவத்தை

| அஞ்சவத்தையில் | புருடனைப்பொருந்தியுள்ள கருவிகள் | இடம் |
|---|---|---|
| 1. துரியாதீதம் | கருவி ஒன்றுமில்லை. புருடன் மட்டும் இருக்கும் | மூலாதாரம் |
| 2. துரியம் | பிராணவாயு | உந்தி |
| 3. சுழுத்தி | பிராணவாயு, சித்தம் | இருதயம் |
| 4. சொப்பனம் | பிராணவாயு-1<br>சித்தம்-1<br>சத்தாதிவிடயதன்மாத்திரை-5<br>வசனாதி-5<br>மனம்-1<br>புத்தி-1<br>அகங்காரம்-1 | கண்டம் |
| | 15-ம் | |

ஏனைய வாயுக்கள் 9 ஆக 24

5. சாக்கிரம் ஞானேந்திரியங்கள்-5
கன்மேந்திரியங்கள்-5
கண்டத்திற்றொழில்படுவன-15
———
25-ம்
வாயுக்கள் 9
———
ஆக 34
} இலலாடம்

சாக்கிரத்தில் தொழிற்படும் கருவிகள் முப்பத்து நான்கனுள் அந்தக்கரணம், 4. ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5, ஆக 14ம் புடருனுக்கு அகக்கருவிகள். சத்தாதி 5, வசனாதி 5, வாயுக்கள் 10 ஆக இருபதும் புறக்கருவிகள். ஏனைய புறக்கருவிகள் 40. பூதங்கள் 5, தன் மாத்திரைகள் 5, ஆக 50ம் தம் சத்தி மடங்கித் தொழிற்படா.

சிவ தத்துவங்கள் 5ம் கலாதி தத்துவங்கள் 7ம் அவத்தைக்கு ஏதுவாகா.

இங்ஙனம் ஐந்தவத்தைகளிற் பொருந்தி நின்ற கருவிகள் அனைத்தும் இலலாடத்தானத்தில் ஐந்து அவத்தைகளையும் அடைந்து விடயங்களைக் கிரகிக்கும் முறையை அறிந்து ஞானசாரியார் அருளிய முறையில் சாதனை செய்தால், திருவருளின் உதவியால் நின்மல சாக்கிரம் முதலான அவத்தைகள் ஐந்தும் செலுத்தப்படும். இது ஞானாசிரியரது உபதேசத்தால் வரும் அனுபவ அறிவால் அறிதல் வேண்டும்.

இங்ஙனம் சாக்கிரத்தில் நிகழும் ஐந்தவத்தைகளும் சாக்கிர சாக்கிரம், சாக்கிர சொப்பனம், சாக்கிரசுழுத்தி, சாக்கிர துரியம், சாக்கிர துரியாதீதம் எனவும் பெயர்பெறும். இந்த ஐந்தவத்தைகளும் காரியச்சகலம். சகலத்திற்சகலம், மத்தியாலவைத்தை எனவும் படும்.

**அவத்தைகள் தொழிற்படும்முறை.**

1. சாக்கிர சாக்கிரம் சுத்தவித்தை முதல் 5; 2. சாக்கிர சொப்பனம் ஈசுவரதத்துவம் இறுதியாகிய 4; 3. சாக்கிர சுழுத்தி சிவதத்துவமுதல் சாதாக்கியம் ஈறான 3; 4. சாக்கிரதுரியாதீதம் சிவதத்துவம்.

மத்தியாலவத்தையில் ஆன்மாபோதமானது ஐந்துவிடயங்களையும் பற்றுவதும் விடுவதுமாக இடைவிடாது சுழலும்.

பற்றுவது-நினைப்பு சகலம். } விடுவது-மறப்பு கேவலம்.

**காரியசுத்தம்**

இங்ஙனம் விடயங்களைப் பற்றுவதும் விடுவதும் ஆன்மாவின் இயற்கைக் குணம் அன்று. இக்கருவிகளும் அவற்றாற் பற்றப்பட்ட விடயங்களும் தாக்காவண்ணம் தன் அறிவை மீட்டுப் புருவமத்தியில் நிறுத்திப் பஞ்சாக்கரத்தை விதிப்படி ஓதிவரின் அஃது கருவிகளும் விடயங்களும் ஆன்மாவை மயக்காதபடி ஒழித்து, ஞானத்தை விளக்கிப் பூரண நிலையிற் செலுத்துதல் சுத்தாவத்தையாம். சுத்தாவத்தையாவது, கேவலம் சகலம் இரண்டும் தாக்காது விட்டகல, சிவனருட் சார்பினில் ஆன்மா நிலைபெற்று நிற்றல். இது நிர்மலாவத்தை எனவும் படும்.

1. நின்மல சாக்கிரமாவது—அருளானே ஆன்மா தன்னையறிவது.

2. நின்மல சொப்பனமாவது — அதன் பின் தனக்கென ஒரு செயலுமின்றி, அருளே ஆதாரமாய் அசைவற நின்று அவ்வருளைத் தரிசிப்பது.

3. நின்மலசுழுத்தி—ஆன்மாவின் இச்சா ஞானக்கிரியைகள் தோன்றாமல் அருளே தானாகி எதிரீடு சிறிதுமின்றி இருக்கும் நிலை.

4. நின்மலதுரியம்-மலவாசனை சிறிதும் இன்றி, ஆனந்த ஒளி தோன்றும் இடம்.

5. நின்மல துரியாதீதம்—ஆனந்தத்தை அறிதலுமின்றி, ஆனந்தமாய் நின்ற முதலும் (வேறாக) இன்றி, ஆனந்தமேதானாய் அதீதப்பட்ட விடம்.

(செ. 62) காரிய கேவலத்தில் துரியாதீதம் காரண கேவலத்தை ஒக்கும். காரிய சகலத்தில் சாக்கிரம் காரண சகலத்தை ஒக்கும். கேவலம் சகலம் என்ற இரண்டும் தாக்காமல் அருள்நிலையில் நிலைபெற்றிருக்கும் சாக்கிராதீதமானது பரமுத்தியாகிய காரண சுத்தாவத்தையினை ஒக்கும்.

## (செ. 63 முதல் 67) 3. உணர்த்துந் தன்மை ஆன்மா விடயங்களை அறியும் முறை

இந்திரியங்களில் ஒன்றும், அகப்பூதங்களில் ஒன்றும், அந்தக்கரணம் நான்கும், கலாதிகள் ஐந்தும், ஆகிய பதினொரு தத்துவங்களையும் கூடி ஆன்மா ஒரு பலனை நுகரும். இக்கருவித்திரளும் ஆன்மாவும் ஒன்றையொன்று ஒழிந்து தொழிற்படுவன அல்ல. (செ. 64) ஆன்மாவானவன் தனக்கென அறிவில்லாதவன். தானாகவே தத்துவங்களை அறிந்து சேரமாட்டான். வாயில்களும் தாமாகவே ஆன்மாவைச் சேர அறியா. ஆன்மா தத்துவங்களின் சொரூபமே தன் சொரூபமாகக்கொண்டு நிற்பவன். தானாக அறியும் சிவன் கருவிகளைக் கூட்ட அவன் செயலால், அவற்றைக் கூடி நின்று ஆன்மா எல்லாவற்றையும் புசிப்பான்.

## ஞானவாய்மை — ஞானம் வரும்முறை

(செ. 68) ஆன்மா ஈட்டிய தவத்தில் சிவபெருமானே குருவாக எழுந்தருளி வந்து தீக்கை செய்து-திருவடியை அடையும்படி ஞானத்தைப்பற்றச் செய்வான்.

## ஞானத்தினியல்பு

(செ. 69) பல நிறங்களையும் கவரக் கூடிய பளிங்குக்கு மிக்க ஒளியையும், நிறங்களையும் பொருந்தி விளங்கும் தன்மையையும் கொடுத்த சூரியனது பேரொளிபோல், சடமும் சித்துமாகிய பொருள்களின் தன்மையைத் தான்பொருந்தாது, ஆன்மாக்கள் பயன் பெறும்படி எங்கும் ஒழிவற நிறைந்த சிவ ஞானமே உண்மை ஞானமாகும். (செ. 70) ஆன்மாவுக்கு மருள்நிலையும் உண்டு. அருள் நிலையும் உண்டு. மாயையினும் வினையினும் ஆன்மா மயங்கி நிற்கும் மருள் நிலையில் உண்மை ஞானம் வெளிப்படாமல் மறைந்து நிற்கும். மாயையும் வினையும் நீங்கி நிற்கும், அருள் நிலையில் வெளிப்பட்டு ஒளியாய் நிற்கும். சிவம் பிரகாசமாகும்.

## ஞானத்தால் வரும் பயன்

(செ. 71) ஞானத்தால் வரும் பயன் மூன்று:-(1) ஆன்ம தெரிசனம்-பாசமானது நீங்க ஞானத்தைத் தரிசித்தல் (2) ஆன்ம லாபம் - தன் செயலை விடுதல் (3) ஆன்ம சுத்தி-ஞேயத்தில் அழுந்தல்.

ஆன்ம தரிசனம்-தன்னறிவாலே ஒன்றை அறியுந்தன்மை ஆன்மாவுக்கு இல்லை. ஆனாலும் கருவிகள் வாயிலாகப் போகங்களை நுகரும்போது தன் அறிவாலே அறிந்ததாக அனுபவிப்பான். அருளை அறிந்தால் பண்டைய நிலை நீங்கிக் கருவிகளோடு கூடி நின்றறியும் முறையையும் தனது இயல்பையும் அருளோடு கூடி நின்று ஆன்மாவே காணும். (செ. 72) தத்துவங்களை ஆன்மாவுக்கு வேறானவை என்று அறிந்திடத் தோன்றுவது சிவஞானமாகும். அப்படியறிகின்ற சுட்டறிவும் நீங்கினால், அந்த ஞானமேதானும். ஆன்மா சுத்தமடையும். அப்போது அந்த ஞானத்துக்கு முதலாகவுள்ள ஞேயம் தோன்றும். (செ. 74) ஒளியும் அதற்கு முதலாகிய சூரியனும் போல ஞானமும் அதற்கு முதலாகிய சிவமுமாம். ஞானமே அருள்; அதுவே சத்தியாம்.

(செ. 75) சத்தி ஞானச்சுடராகும். சிவத்தையன்றிச் சத்தியில்லை. இருளை நீக்கிச் சூரியனைக் காட்டும் ஒளிபோல மும்மலங்களையும் நீக்கி அருளே ஆன்மாவுக்குச் சிவனைக்காட்டும்.

(செ. 78) சகலாவத்தையில் கலையாதிகளால் ஏகதேச அறிவு ஆன்மா பெற்றிருந்தது. மலங்களை நீங்கிய நிலையில் ஆன்மா அருளின் வியாபகத்துள் அடங்கிச் சிவத்தில் நின்றால் சிவத்தின் வியாபக அறிவு ஆகிய சிறந்த பயன் ஆன்மாவுக்குத் தோன்றும். இதுவே ஆன்ம சுத்தியின் பயன்.

(செ. 80) கருவிகள் 36-ம் பொருந்தி அறிவு மயங்காமலும் கருவிகள் நீங்கிய கேவல நிலையில் விழாமலும் ஞானசத்தியின் உதவியால் தற்போதம் விட்டு நின்றால் சிவம் தோன்றும். சிவத்தொடு ஏகனாக நிற்றலே நின்மல சாக்கிராதீதமாகும்.

(செ. 81) கருவிகள் தாமாகவே ஒடுங்கா. ஒடுக்கினாலும் ஒடுங்கா, அங்ஙனம் ஒடுக்கினாலும் உணர்வு ஒன்றுமில்லாமல் கேவல நிலையே வரும். ஆதலால் அக்கருவிகளைத் தனக்கு அந்நியமாகக் கண்டு திருவருளில் ஒடுங்கியே சிவத்தை அறிந்து அநுபவிக்க முடியும். பகல் விளக்குப்போலத் தற்போதம் ஒடுங்குமானால் ஆன்மா சிவத்தையடையும். பிறவியை அறுக்கலாம்.

## ஆன்ம லாபம்

(செ. 83) முற்பிறப்பிற் செய்த சரியை யாதி தவங்களின் முதிர்ச்சியாலே உண்டான ஒருமையால், ஆசாரியன் உபதேசித்த உபதேச மொழிகளைக் கேட்டலும் சிந்தித்தலும் தெளிதலும் சிவமே தானாகவந்த அத்துவித நிலை பொருந்தும்படி நிட்டை கூடலும் என்று ஞானம் நான்குவிதம். இவ்விதம் சாதனங்களில் நின்று நிட்டை கூடினவரே முத்தி பெற்றோராவர்.

(செ. 84) பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும் சிவனை அறிய முடியாது. திருவருள் ஞானம் பொருந்தி பழைய ஆன்ம போதம் நீங்கி, ஞானத்துக்கு மேலான சிவத்திலே சிவத்தோடு இரண்டறக் கலந்து அன்பு செய்து நிற்பதே ஞான நிட்டையாகும்.

(செ. 85) இங்ஙனம் விளம்பிய முறையில் நின்று ஞான நிட்டைபெற இயலாவிடின் உபாய நிட்டை வழி நிற்கவேண்டும். உபாய நிட்டையாவது - கருவிகளின் இயல்பையும், ஆன்மாவின் இயல்பையும் அறிந்து ஆன்மாவுக்கு அறிவித்தும் அறிந்தும் இறைவன் செய்யும் உதவியை மறவாது பத்தி செய்தலாம்.

(செ. 86) இத்தகைய உண்மைஞானம் வெறும் பாவனையாகத் தியானிப்பதனாலே கைகூடாது. தியானத்தில் கரணங்களின் சேட்டையிருக்கும். அஃதில்லையானால் கேவல நிலை விளையும். சிவனருளைப் பெற்ற அடியார்களுக்கு ஒரு பாவகமும் வேண்டியதில்லை

## அத்துவித நிலை

(செ. 87) நிட்டையால் சிவனைப்பெற்ற ஆன்மாக்கள் சிவனோடும் ஒன்றுபட்டுப் போவார்களோ இரண்டு பட்டு நிற்பார்களோ எனில்-ஒன்றுபடுவார்களென்றால் பிரமமும் சிவனும் ஒரு தன்மையுடையவராகவேண்டும். ஆகையால் ஒன்றுதல் இல்லை. சிவனும் சீவனும் தனித்தனி முதலாக இருந்து முத்தியில் ஒன்றுபடுவார்கள்,எனில், அப்போது ஆன்மா அழியவேண்டும். அதனால் முத்தி பெற்றவன் இல்லையாகும். இரண்டாக இருக்கும் என்றால் முத்தியால் பயனில்லை. அக்கினியோடு கூடிய இரும்பு அக்கினியானாற்போலச் சிவத்துடன் கூடின ஆன்மா சிவமாகும் என்றால் சிவனைப்போல ஆன்மாவும் ஐந்தொழிலும் செய்யவேண்டும். ஆன்மாக்களுக்கு அத்தன்மையில்லை. ஆதலால் அதுவும் பொருந்தாது. பின் பொருந்துமாறு யாதெனில், பெத்த நிலையில் ஆன்மா ஆணவத்தோடு ஒன்றுபட்டு தான் அழியாமலும் இரண்டாகப் பிரியாமலும் அத்துவிதமாய் நின்றது போலவே முத்தியிலும் தான் அழியாமலும் சிவத்தைப் பிரியாமலும் நிற்கும்.

“ஆணவத்தோ டத்துவிதமான
உயிர் மெஞ்ஞானத்
தானுவினோ டத்துவிதம்
சாருநா ளெந்நா ளோ”

எனத் தாயுமானவர் அருளிச் செய்ததை ஈண்டு நினைக்கற்பாற்று. இதுவே “பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவிதம்” ஆகும்.

## ஆணவமல நீக்கம்

(செ. 88) முத்தி பெற்ற ஆன்மாக்களிடத்து உண்டான ஆணவமலம் என்னவாகும்? அது நித்தமாதலால் அழியாது. அஃது அழியாவிடில் சிவாநுபவம் உண்டாகாது. பின்னை எங்ஙனம் என்றால் ஆன்ம போதத்தை மறைத்திருத்த ஆணவத்தின் காரியமாகிய ஆற்றல் அழியும். காரணமாகிய நித்தியத்துக்கு அழிவில்லை. சூரியப் பிரகாசத்தின் முன் இருள் நிற்கவுமாட்டாது. அழிந்து போவதும் இல்லை. அதுபோல.

## கன்மமல நீக்கம்

(செ. 89) கன்மமும் மாயையும் போகைக்கு வழி ஏதென்றால், சஞ்சித கன்மங்கள் நெருப்பிற்சேர்ந்த விதைபோல் அழியும். பிராரத்தம் உடம்பு உள்ளவரை நுகரப்பட்டு உடலோடு அழிந்துபோம். முன் பிறப்புகளிற்போல் ஆகாமியம் வந்தால் அது ஞானாக்கினியினால் எரிந்து போகும்.

## ஐந்தெழுத்தருள் நிலை

(செ. 90) தீட்சையினாலே சஞ்சித கன்மங்கள் அழிந்து போனாலும் பூததேகம் உள்ள மட்டும் பிராரத்தகன்மம் பொருந்தாமல் இராது. பெருங்காயம் செலவாகிவிடினும் அதன் வாசனை பாத்திரத்தை விட்டு நீங்காமையோல, பிரார்த்தம் உண்டானால்

ஆகாமியமும் ஏறும். எனினும் திருவைந்தெழுத்தை உபதேசமுறைப்படி செபிக்கும் சிவஞானிகளைப் பிராரத்தம் வருத்தாது. புசிப்பு மாத்திரமாக வந்து கழிந்துபோம். அதனால் ஆகாமியமும் ஏறாது. பிறப்பை உண்டாக்காது.

## ஆன்மா

(செ. 91) திருவைந்தெழுத்தில், ய-ஆன்மா ந-திரோத சத்தி, ம-மலம், வ-அருள், சி-சிவம். என்னும் ஐந்துமுதல்களும்நிற்கின்றன. சிவம் முன்னாக உச்சரிக்கும்போதுசிவ-என்னும்அருளும் சிவமும் ஒரு பக்கமும், நம—என்னும் திரோதமும் மலமும்மற்றொரு பக்கமும் நிற்க, ய-என்னும் ஆன்மா நடுவே நிற்கிறது. அந்த ஆன்மா அருள் அறிவித்தால் அறியும். மலம் மறைத்தால் மறவிப்படும். இங்ஙனம் இவ்விரண்டும் கூடி அதுவதுவாய் நின்றாலும் தான் ஒரு முதலாக அநாதியே இருக்கின்றது. மவ்வாகிய மலமும் நவ்வாகிய திரோதமும் மேலிட்டு நிற்கையாலே வாசியில் (அருளிலும் சிவத்திலும்) ஆசையின்றிச்சுழலும். ஆதலால் மலம் நீங்கி அருளையும் சிவத்தையும் அடைய வேண்டுவோர் திருவைந்தெழுத்தைச் செபித்தல் வேண்டும்.

(செ. 92) சிவம் முன்னாகத் திருவைந்தெழுத்தைச் செபித்தால் நவ்வாகிய திரோத சத்தியானது மவ்வாகியமலத்தின் மேலீட்டை நீக்கி, அருளாக நின்று பிரகாசிக்கும். பின் வவ்வாகிய அருள்சிவ்வாகிய சிவத்தைத்தரும். அப்போது யவ்வாகிய ஆன்மா அருளே துணையாகச் சென்று சிவத்தொடுகூடி இரண்டற நின்று அநுபவிக்கும்.

## அணைந்தோர் தன்மை

(செ. 93-98) சிவஞானிகளின் தன்மை யாது எனில், இனிமேலும் பிறப்பு உண்டாகாதபடி வினைகள் மூன்றும் முன்னே கூறியபடி தம்மைவிட்டு விலகவே, விருப்பு வெறுப்பின்றி ஆணவ இருள் நீங்கும்படியாக தற்போதத்தைத் தலையெடாமல் அடக்கி, அருளிலே ஒடுங்கிச் சிவபோகம் தம்முள் விளையும்படி தூங்காமல் தூங்கியிருப்பார்கள். (94) தீர்த்தயாத்திரை, தல யாத்திரை தபம், செபம், தியானம் முதலிய நியமங்களை எல்லாம் சிவஞானிகள் வேண்டாமென்று ஒழிப்பது மிலர். கட்டாயமாகச் செய்வது மிலர். உறங்குபவன், கையிலுள்ள பொருள் போல அவை அவரைவிட்டு நழுவும். (செ.95) அகப்பூசைபுறப்பூசைஎன்பவற்றுள் எதுவும் செய்யாமல் அஞ்ஞானமேவடிவாகித் திரிகின்ற உலகத்தவர் தாம் கருதிய பொருட்பேறு ஒன்றிலே மகிழ்ந்து திரிவதைப்போல ஞானம் பிரகாசித்தவிடத்து, அதனை அகம் புறமென்று பிரியாது வினைக்கீடாக நிகழும் இன்ப துன்பங்களை நினையாமல் தாம்கருதிய சிவம் ஒன்றிலே ஏகமாகி நிற்பர். (செ. 96) ஆகாயமானது அண்டம் அனைத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்டு நிற்பதுபோல ஞானமானது சராசரங்களனைத்தையும் தன்னுள் அடக்கி நிற்பதால், தோன்றிவிடயத்தில் எதுவெனினும் அதனைச் திருவருள் வடிவாகவே துய்ப்பர். அதனால் தாமும் சிவத்தின் திருமேனியாகவே நிற்பர். (97 செ. பிரபஞ்சப்பற்றினை விட்டு அருள் வழிநின்று, எல்லாவற்றையும் அருட்செயலாகவே கண்டு திருவைந்தெழுத்தோதி முதல்வனது அத்துவித நிலையை நினைந்து துதிப்பதே அவர் செய்யும் ஞான பூசையாகும். (செ. 98) சிவனடியாரும் சிவலிங்கமும் சிவனே என்று வணங்குவதே அவர் செய்யும் ஞானச்சரியையாகும்.

## நூற்கருத்து

(செ. 99) ஈண்டுக் கூறிய சைவ சித்தாந்தமானது உலோகாயதன் முதலாக சிவாத்துவிதி முடிவாக உள்ள ஏனைச் சமயத்தவர்களின் பிரமாணங்களைத் தழுவாதது. வேதசிரங்களின் பொருளாயுள்ளது. பேரின்பத்தை விளைப்பது. சற்காரிய வாதம் கூறுந்தன்மையது. முரண்பாடில்லாமல் பெத்தத்தையும் முத்தியையும் கூறுவது. (செ.100) இதில் கூறப்பட்டுள்ள பொருள்களை ஆசிரியன் ஏதுக்களாலும் உவமைகளாலும் நிச்சயித்து மலைவறக் கொள்ளும் மாணாக்கனுக்குத் தீக்கை செய்து இந்நூலைக் கொடுத்துக் கூறலாகும்.

திருஞான சம்பந்தன் சேவடி வாழ்க

ஐந்தொழிலுமென திவைகளாகுஞ் சிருட்டிமுதல்
ஆனமுத்தொழில் சடத்தும்,
அறிவிடத்தோ ரிரண்டும், வினைக்கீடா
அவற்றை உயிர் அறியாமையால்
முத்திவரு தன்னையும் பிறரையுங் கருதிநனி
முதிர் விழைவு வெகுளிமேவி,
முன்னுசுக துன்பங்கள் மன்னியிருவினைமேவி
மூடப்பிறப் பிலாழும்,
பந்தமுறும் உயிர் சுதந்தர மிலி, சடம்பாச
மான கருவிகள் முழுதுமே.
பகருமற்றவை நடத்திடு மொருவன், நான் இது
பகுத்துன் சுதந்தர மறச்
சிந்தனைசெய் பந்தம்அறும் என்றெனக் கருள்குரவ
செங்கீரை யாடியருளே.
திமிரமல மகல வரு குமரசர வணமுருக
செங்கீரை யாடியருளே.

—சிதம்பர சுவாமிகள்.

சிவப்பிரகாசம் முற்றிற்று.

---

**தென்திருப்பேரை :** *ஸ்ரீகைலாசநாதசுவாமி கோயிலில் ஆனி உத்திரம் 8—7—62ல் சிறப்பாக நடைபெற்றது.*

**குத்தாலம் :** *ஆனந்தவல்லி நினைவு நூலக ஆறும் ஆண்டுவிழா 13—7—62-ல் நடைபெற்றது.*

**அம்மன்பேட்டை :** *குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீன அருள்நெறித்திருப்பணி மன்றக் கல்விக்கழகத்தின் சார்பில் தஞ்சை மாவட்டம் அம்மன்பேட்டையில் புதிதாக ஆரம்பிக்கப்பெறவிருக்கும் அருள்நெறி உயர்நிலைப் பள்ளியை திருப்பணி மன்றத் தலைவர் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில் 10—7—62ல் பாரதத்தின் உள்துறைத் துணை அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகரன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.*

**திருவெண்காடு :** *சுவேதாரண்யேசுவரசுவாமி தேவஸ்தானம், திருவெண்காடு நிர்வாகத்தின்கீழ் பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஒன்று 1—7—62லிருந்து ஆரம்பிக்கப் பட்டுள்ளது.*

**மயிலாப்பூர் :** *கபாலீசுவரர் கோயிலில் ஹரதத்தர் சரித்திரச் சொற்பொழிவு திருவையாறு திரு. அண்ணாசுவாமி சிரௌதிகள் அவர்களால் 12—7—62 முதல் 5—8—62 வரை நிகழ்த்தப்பெறும்.*

**சென்னை ;** *காசிவிசுவநாதசுவாமி கோயிலில் 30—6—62 முதல் 7—7—62 வரை பிரம்மோற்சவம் நடைபெற்றது. சமயச்சொற்பொழிவுகளும் நடைபெற்றன.*

**திருத்தணி :** *சுப்பிரமணியசுவாமி கோயிலில் ஆடிக்கிருத்திகை மகோற்சவத்தின் முக்கிய தினங்கள் 24, 25, 26, 27, 28—7—62 தேதிகளில் திருக்குளம் வலம் வருதல், வெள்ளிமயில் வாகன உற்சவம், தெப்பத்திருவிழா முதலியவை நடைபெற்றன.*

**சிதம்பரம் :** *நடராசப்பெருமான் கோயிலில் திருமுறைவிழா 8—8—62-ல் நடைபெறும்.*

**இராமேசுவரம் :** *இராமநாதசுவாமி கோயிலில் ஆடித்திருக்கல்யாணத் திருவிழா 24—7—62 முதல் 11—8—62 வரை நடைபெறும்.*

**மதுரை :** *மீனாட்சிசுந்தரேசுவரர் கோயிலில் திருக்கல்யாண மண்டபத்தில் 31—7—62 முதல் 8—8—62 வரை நாடோறும் மாலை 7 மணிக்கு பெரியபுராணச் சொற்பொழிவு நடைபெறும்.*

ஆணையர் அலுவலகம்.

இந்துசமய அறநிலைய (ஆட்சி)த் துறை, சென்னை

ஆர். சி. எண். 27396/62 ஏ2. தேதி 7—7—1962.

பொருள்:—கல்வெட்டுக்கள் - கோயில் கல்வெட்டுக்கள் - கல்வெட்டுத் துறையினரிடமிருந்து நகல்கள் பெறல்-அறிவுறுத்துதல்.

கோயில்களில் காணப்படும் கல்வெட்டுக்களின் நகல்களை கல்வெட்டுத் துறையினரிடமிருந்து (Epigraphical Depratment) பெற்று கோயில் ஆவணத்தில் (Records) சேர்க்கப்படவில்லை என்று ஆணையர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகையினால் கல்வெட்டுத் துறையினரால் வெளியிடப்பட்டுள்ள கோயில் கல்வெட்டுக்களின் பிரதிகளை அவ்வக்கோயில் நிர்வாகிகள் அவசியமானால் விலைகொடுத்தேனும் பெற்று கோயில் ஆவணத்தில் சேர்க்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். கோயில்களிலிருந்து கல்வெட்டுத்துறையினரால் நகல் எடுக்கப்பட்டு, அச்சிட்டு வெளியிடப்படாமலிருக்கும் கல்வெட்டுக்களுக்கும் அத்துறையினரிடமிருந்து நகல்கள் பெற்று கோயில்களில் நிலையான ஆவணமாக (as permanent record) வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எம். எஸ். சாரங்கபாணி,
ஆணையர்.

---

## அடியவர் திருநட்சத்திரங்கள்

### சுபகிருது—ஆவணி

#### சைவம்

11உ—செருத்துணைநாயனார்

12உ—புகழ்த்துணைநாயனார்


,, —அதிபத்தநாயனார்

13உ—இளையான்குடி மாறநாயனார்

21உ—குலச்சிறைநாயனார்

23உ—குங்குலியக்கலயநாயனார்

Vol. 4 No. 11. THIRUKOIL Reg. No. M. 7039



காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம் கோயில்

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-34.
[illegible] at Paari Achakam, 127, Broadway, Madras-1.